378

# இராமநாதபுரம் மாவட்டம்

## வரலாற்று குறிப்புகள்

○ ● ○

எஸ். எம். கமால்
நா. முகம்மது செரீபு

○ ● ○

வெளியீடு :
லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம்
பரமக்குடி-623 707

முதற் பதிப்பு : ஜுன் 1984

உரிமை © லெனின் சமூக வரலாற்று
ஆராய்ச்சி நிறுவனம்

விலை. ரூ. 10-00

பாரதி அச்சகம்,
மாணுமதுரை.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி,
21—6—84

## வாழ்த்துரை

வரலாறு, வாழ்க்கையின் உண்மைகளை விளக்குவது. கருத்துக்களை உருவாக்குவதிலும் வளர்ப்பதிலும் மேலும் மேலும் வரலாற்றை உந்திச் செலுத்துவதிலும் வரலாறு சிறந்த பணியைச் செய்கிறது.

''இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுக் குறிப்புக்கள்'' ஒரு சிறந்த நூல். இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுப் புகழுடையதே. ஆனால் வரலாற்றுப் போக்கில் தன்னை இணைத்துக் கொள்ளாததால், மனிதகுல உணர்வு செழித்து வளராததால் ''பின் தங்கிய'' என்ற பெயரைப் பெற்று விளங்கும் மாவட்டம். ஆனால் இயற்கையமைப்பாலும், சூழ்நிலைகளாலும் மாவட்டம் பின் தங்கியதன்று. சோழர் காலத்திலிருந்து இன்று வரை ராமநாதபுரம் மாவட்டத்தின் வரலாறு அரிய குறிப்புகளுடன் எழுதப்பெற்றுள்ளது. இன்று இராமநாதபுரம் மாவட்டம் பாண்டிய மண்டலம் என்றே கூறப் பெறுகிறது. ஆனால் சோழர்கள் இந்த மாவட்டத்தில் ஆட்சிசெலுத்திய வரலாறு சிறப்பாக எடுத்துக் கூறப் பெற்றுள்ளது. தேவி பட்டணம் பெயர் அமைந்த வரலாறு புதிய செய்தி. இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களின் சமயப்பற்று, நீதி சார்ந்த ஆட்சிக்குச் சான்றாகத் தண்டத்தேவர் தண்டிக்கப் பெற்ற வரலாற்றுக் குறிப்பு மனுநீதிச்

சோழன் வரலாற்றை நினைவூட்டுகிறது. சுதந்தரப் போராட்டம் 1857 இல் தொடங்கியது என்றே வரலாற்று நூல்கள் கூறிவந்துள்ளன. ஆனால் இந்த நூலாசிரியர் இராமநாதபுரம் மாவட்டத்தில் 1801 இலேயே சுதந்தரக் கிளர்ச்சி நடந்த செய்திகளைக் கூறுவது பூரிப்பைத் தருகிறது. இராமநாதபுரம் மாவட்டம் மனிதகுல ஒருமைப் பாட்டுணர்வைப் பேணி வந்தமையைச் செப்பேடுகள் செப்புகின்றன. ஆனாலும் சாதிப் பூசல்கள் 1376-இலேயே இருந்துள்ளன என்றுள்ள செய்தியையும் கல்வெட்டு கூறுகிறது.

நூல், சிறப்பாக அமைந்துள்ளது. வரலாற்றுக் குறிப்புகளைத் தேடித் தொகுப்பதில் ஆசிரியர் மிகவும் உழைத்திருக்கிறார். அருமையான பணி. இந்தக் காலத் தலைமுறையினருக்குப் பயன்படும் பணி. நூலாசிரியர்கள் எஸ். எம். கமால், நா. முகமதுசெரீபு ஆகியோரை உளமாரப் பாராட்டுகின்றோம். நூலினை வாங்கிப் படிப்பதும் வரலாற்றுக்கு வாழ்வளிப்பதும் நமது கடமை.

இன்ப அன்பு

அடிகளார்

பேராசிரியர்- டாக்டர் ந. சஞ்சீவி,
தலைவர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600005.

## அணிந்துரை

"தரித்திரம் போகுது, செல்வம் வருகுது
படிப்பு வளருது, பாவம் தொலையுது"

என்று புதிய கோணங்கியில் பாடினார் பாரதி. அவர் கனவை நனவாக்குவனவாக படிப்பு வளர்ச்சியுற்ற நிலையில் புதுப் புதுக் கோணங்களில் நூல்கள் எழுந்த வண்ணமாக உள்ளன. இத்தகு நூல்களுள் ஒன்றாக "இராமநாதபுரம் மாவட்டம்-வரலாற்றுக் குறிப்புகள்" என்ற நூலும் புத்தம் புது முயற்சியின் பயனாக புதிய செய்திகளுடன் உருப்பெற்றிருக்கிறது. இது ஒரு வரலாற்றுப் பெட்டகமாகவும், ஆய்வுக் கருவூலமாகவும் அமைந்து எழில் குலுங்கும் நடையுடன் மிளிர்கின்றது.

நாடு விடுதலையடைந்து முப்பத்தைந்து ஆண்டுகளாகியும் இராமநாதபுர மாவட்ட மக்களின் அவலநிலை மாற்றப்படவில்லை என்ற உண்மையைச் சுட்டிச் செல்லும் ஆசிரியர், அம்மாவட்டம் உருப்பெற்ற வரலாற்றையும் விவரமாகத் தருவது சிறப்புக்குரியதாக அமைகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் "சோழர்கள்" "சமணர்கள்" என்ற தலைப்புகளில் வரலாற்றுச் செய்திகளை கல்வெட்டுகள், காசுகள், ஊர்ப்பெயர்கள் போன்ற ஆதாரங்களைக் கொண்டு விளங்கியுள்ள பாங்கு ஆசிரியரின் ஆராய்ச்சி அறிவை தெற்றெனப் புலப்படுத்துகிறது.

"இராமலிங்க விலாசம், 'இராமேஸ்வரம் தீவு' என்ற சிறுதலைப்புகளில் கட்டிடக் கலையையும், ஓவியம் சிற்பம் இலக்கியம் ஆகிய கலைகளையும் விளங்குவன வாக அமைந்துள்ளன. கலையழகோடு வரலாற்று மூலங்களையும் மக்கள் வாழ் நிலையையும் மண்ணின் வாசனையையும் விளக்குகிறார்.

''நாங்கள் நெய்து கொண்டிருக்கிறோம்
நாங்கள் நெய்து கொண்டிருக்கிறோம்
ஜெர் மனியே! உன் சவத்துணியை
நாங்கள் நெய்து கொண்டிருக்கிறோம்''

என்று பாடினர் ஓர் ஜெர்மானியப் புரட்சி கவிஞர் இதற்கேற்ப 'பரமக்குடி' என்ற தலைப்பில் நெசவாளர்களின் வாழ்க்கையைச் சித்தரித்துள்ளார். ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு அன்றே சவத்துணியை நெய்து விட்டிருந்தார்கள் என்பது இப்பகுதி மூலம் அறியக் கிடக்கின்றது.

மேலும், இலங்கை இந்தியர் உறவுநிலை, வரலாற்றுச் சான்றுகள், ஏற்றுமதி இறக்குமதி, இலக்கியவளர்ச்சி மதநம்பிக்கைகள் ஆகியன பற்றி பேசும் பகுதி இராநாதபுரம் மாவட்டத்தோடு தொடர்புடையனவாக காட்டிச் செல்லும்அழகு சிறப்புடையதாக உள்ளது. இது ஒவ்வொருவரும் அறியக் கூடிய செய்தித் தொகுப்பு என்பது வெளிப்படை.

விடுதலைப்போர், மறவர் வாழ்க்கை ஆகியவற்றை விளங்கும் பகுதி அன்றைய மக்களின் நிலையை எடுத்துக் காட்டுவனவாகவும் அமைகின்றன. விடுதலைக் கைதிகளின் பட்டியல் ஊர்வாரியாகக் கொடுத்திருப்பதை எண்ணிப் பார்க்கும்போது ஆசிரியரின் உழைப்பு தெற்றெனப் புலனுகிறது.

கல்வெட்டுகள், செப்பேடுகள் தரும் செய்திகளை தொகுத்துத்தந்திருப்பது ஆய்வுலகியது பயனுடையது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு இராமநாதபுரம் மாவட்டத்தின் வரலாறு ஆசிரியரின் அனுபவத்தின் சாரமாகவும், தேர்ந்த கல்வியின் விளைவாகவும் உள்ளது இம் மாவட்டத்தின் மண்வாசனையை அறியாதவர்கள் கூட இந்நூலைப் பயில தெளிவு பெறுவர். அழகு மொழியுடன் நடைபோடும் இந்நூலை ஒவ்வொருவரும் கற்பது இன்றியமையாதது.

நா. சஞ்சீவி
18-12-83

## கருத்துரை

''இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுக்குறிப்பு கள் என்ற இந்நூல் லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல் வெளியீடு, கல்வித் துறை அங்கீகாரம் இல்லாத. கல்வித் துறையின் உதவி பெறாத ஒரு சிறிய ஆராய்ச்சி நிறுவனத்தின் பேரார்வத்தின் விளைவாக இந்நூல் உருப்பெற் றுள்ளது. ஒரு மாவட்டத்தின் வரலாற்றுக் குறிப்பு கள் அனைத்தையும் தொகுத்து தருவது இத்தகைய சிறிய நிறுவனத்திற்கு இயலாது என்றாலும் கூட இந்நிறுவனம் தொகுத்துத் தந்துள்ள வரலாற்றுக் குறிப்புகளை நோக்கும்போது கண்கள் ஆச்சரியத் தால் விரியத்தான் செய்கின்றன. 'காலமின்மை போன்ற காரணங்களினால் இந்நூலில் கூடுதலான விவரங்களுக்கு இடமளிக்க இயலவில்லை' (பக்.7) என இந்நூலின் ஆரம்பத்திலேயே கூறப்பட்டு விட்டதால் முழுமையான தகவல்களை எதிர்பார்ப் பதில் நியாயமில்லை. ஆனாலும் லெனின் என்ற மாமேதையின் பெயரால் அமைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தின் வெளியீடு என்ற எண்ணத்தில் சில எதிர்ப்பார்ப்புகளோடு இந்நூலைப் படிப்போர் ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள். 'பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வெடித்த இராமநாதபுரம் சீமைப் புரட்சியில் இந்த ஊர் மக்கள் சிறப்பு பங்கு

கொண்டனர். வெள்ளைப்பரங்கிகளை எதிர்த்து வீர முழக்கமிட்ட முத்துராமலிங்க சேதுபதி, முத்துக் கருப்பத்தேவர் மருதுபாண்டியர் ஆகியோரது விடுதலைப் போராட்டத்தைஆதரித்து இந்த ஊர்மக்களும் கிளர்ந்து எழுந்தனர்' போன்ற குறிப்புக்கள் லெனின் நிறுவனத்தின் கொள்கைக்கு முரணானவை இல்லையா? ஒரு சுரண்டல் ஆளும் வர்க்கம் இன்னொரு சுரண்டல் ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராடியது எதற்காக? தமிழ் நாட்டிற்குரிய சுரண்டல் வர்க்கத்தின் சுரண்டலில் பங்கு கேட்க அன்னிய சுரண்டல் வர்க்கம் வந்து விட்டதே என்ற எரிச்சலில் தானே தவிர விடுதலை வேட்கையால் அல்ல. ஒரு மாவட்டத்தின் வரலாற்றுக் குறிப்புக்களைத் திரட்டுவது சாதாரண செயல் அல்ல. இது ஒரு நீண்ட கால ஆராய்ச்சித் திட்டமாகக் கொள்ளப்பட வேண்டியது முதல் முயற்சிக்கே உரிய சில குறைபாடுகள் காணப்பட்டாலும் லெனின் ஆராச்சி நிறுவனத்தின் முயற்சி பாராட்டத்தக்கது. எதிர்காலத்தில் இந்நிறுவனத்தின் கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் முரண்படாமல் பயன்படத்தக்க பல நூல்களை வெளியிடவேண்டும் என்க் கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர். இ. முத்தையா,**
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21

நா. முகமது செரீபு எம் ஏ, ஏ. எம். ஏ, பி. டி.
தலைவர்
லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம்
பரமக்குடி

## முன்னுரை

லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம் என்ற பெயரில் ஒரு நிறுவனம் தமிழகத்திலேயே பரமக்குடியில் மட்டுமே இருக்கிறது என்பது எங்களுக்குப் பெருமையைத் தருகின்றது. ஆனால் இதற்கு முன்னோடி நிறுவனங்கள் உண்டு. இத்தனை பெருமைக்குரிய நிறுவனத்தை நடத்த முன் வந்த கதை ஏதோ தானாக நிகழ்ந்ததில்லை. அது காலத்தின் உந்துதல். இந்த உந்துதலுக்குக் காரணமாக இருந்தவர் மதிப்பிற்குரிய திரு. எம. வி. சுந்தரம் அவர்கள்.

*1956-58* ஆண்டுகளில் அவர் பரமக்குடியில் இருந்த போது இராமநாதபுரம் மாவட்டம் முழுமைக்கும் மையமாக Marxist Lennist Research Institute (மாக்ஸிய-லெனினிய ஆராய்ச்சி நிறுவனம்) என்ற பெயரில் ஒரு கட்டிடம் எழுப்ப நினைத்தார். அதற்கான முன்னேற்பாடுகள் செய்தார். அவர் முயற்சி சிலரால் விரயமாக்கப்பட்டு விட்டது.

நீறுபூத்த நெருப்பாக இருந்த அந்த எண்ணம் மீண்டும் செயல் வடிவம் கண்டது. அவரது நீண்ட கால ஆவல் *1981* அக்டோபர் பரமக்குடியில் Lennin Research Institute & Social and Historical movements', என்ற பெயருடன் ஒரு நிறுவனம் அமைக்கப் பட்டது''.

மானாமதுரையில் விட்டு வைத்திருந்த தனது உடமைகள் அனைத்தையும், 'ராயல்'டியாக தனக்குக் கிடைக்கும் பணம் முழுவதையும் நிறுவனத்திற்கே தந்து ஒரு மிகப் பெரும் சமுதாயப் பணி நிறைவேற வழி காட்டிய எம். வி. எஸ் அவர்களின் பங்களிப்பை நன்றியோடு நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். ''எடுத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றி வருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு'' என அவர்கள் எழுதியது உற்சாக மூட்டும் வார்த்தைகள் மட்டுமல்ல, வழிகாட்டும் தாரக மந்திரமுமாகியது.

ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிப்பதும், ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுவதும் நிறுவனத்தின் பணிகள் என்பது ஒருபுறமிருக்க, நிறுவனமேஓரிருஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. ஒரு நல்ல பாத்திரம் வகிப்பதில் பெருமைப்படுகிறது.

பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என சிந்திக்கின்ற வேளையில் ''வரலாற்று விவரங்களைத் தேடித் தொகுத்துக் கொடுப்பதில் அதிகமான ஆர்வமும் கவனமும் ஈடுபாடும் உள்ள திரு.. கமால்'' அவர்களையே தேர்ந்தெடுத்தோம். அவருக்குத் துணையாக செயல்பட்டதை எனது பேருகக் கருதுகிறேன். இந் நூலை வெளிக் கொணர அச்சக வேலையே ஓராண்டினைச் சாப்பிட்டது. இதற்கென ஆதாரங்களைத் தேட அவர் எடுத்துக் கொண்ட காலத்திற்கு அளவேயில்லை.

இந்நூலைச் சிறப்பிக்கும் வகையில் அணிந்துரை, மதிப்புரை வழங்கிய அறிஞர் பெருமக்கட்கு எங்கள் இதயபூர்வ நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். திரு. எம். வி. எஸ் அவர்களுக்கு நிறுவனத்தின் புரவலர் என்ற வகையில் — என்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்நூலில் கண்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் பட்டியல் அரசு வெளியிட்ட தகவலிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையான தியாகிகளின் சிலரது பெயர்கள் விடுபட்டிருப்பதும், தியாகி அல்லாத பலரின் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதும் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின்படி தெரிய வருகிறது என்பதை வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

இந்நூலை எழுதத் தொடங்கிய காலந்தொட்டு உதவியாக நின்ற ஆசிரியர் திரு. எஸ். எம். கமால், அவர்களுக்கும் நிறுவன உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

அன்புடன்,

**நா. முகம்மது செரீபு**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் மாவட்டம் பற்றி | 1 |
| 2 | இராமநாதபுரம் மாவட்டத்தில் சோழர்கள் | 9 |
| 3 | சமணர்கள் | 11 |
| 4 | இராமலிங்க விலாசம் | 13 |
| 5 | இராமேஸ்வரம் தீவு | 15 |
| 6 | பாம்பன் கால்வாய் | 19 |
| 7 | பாம்பன் கலங்கரை விளக்கம் | 23 |
| 8 | பரமக்குடி பாளையம் | 25 |
| 9 | இராஜசிங்க மங்கலம் | 29 |
| 10 | மறவர் சீமையின் மகுடங்கள் | 32 |
| 11 | செப்பேட்டுச் செய்திகள் | 38 |
| 12 | கல்வெட்டுகளில் கண்ட செய்திகள் | 44 |
| 13 | கல்வெட்டுக்கள் | 52 |
| 14 | இலங்கை-இந்தியர் | 58 |
| 15 | துறைமுகப் பட்டினங்கள் | 65 |
| 16 | விடுதலைப் போராட்டம் | 76 |
| 17 | இசுலாமியர் | 118 |
| 18 | கிறிஸ்துவர்கள் | 123 |
| 19 | வடுகர் | 127 |
| 20 | மறவர் | 131 |
| 21 | அகம்படியார் | 136 |
| 22 | கள்ளர் | 139 |
| 23 | செட்டிகள் | 142 |
| 24 | சாணார் | 150 |
| 25 | சௌராஸ்டிரர் அல்லது பட்டுநூல்காரர் | 153 |
| 26 | நிகழ்ச்சிக் கோவை | 155 |
| 27 | பத்தொன்பதாம் நூற்றாண்டு வைகை | 177 |
| 28 | இறை பணியில் இசை வேளாளர் | 179 |
| 29 | வேளார் | 181 |
| 30 | இடையர் | 183 |
| 31 | பார்க்கவர் | 184 |
| 32 | பழங்குடி-பழியர் | 186 |
| 33 | நூலாசிரியரும் அவர்தம் படைப்புகளும் | 188 |
| 34 | இருண்டகால ஏடு | 193 |
| 35 | தீக்குளித்த காரிகைகள் | 195 |
| 36 | மேற்குநாட்டார் கண்ட முகவை | 197 |
| 37 | செய்தித் துளிகள் | 202 |
| 38 | இராமநாதபுரம்-சிவகங்கை மன்னர்கள் | 206 |
| 39 | மாவட்டத்தின் மாமணிகள் | 209 |

# இராமநாதபுரம் மாவட்டம் பற்றி...

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைக்கு மேற்காகவும். தஞ்சை புதுக்கோட்டை மாவட்டங்களுக்குத் தெற்காகவும், கிழக்கு மலைத்தொடர் பிரிவு, மதுரை மாவட்டத்திற்குக் கிழக்காகவும், நெல்லை மாவட்டத்திற்கு வடக்காகவும் உள்ளது இன்றைய இராமநாதபுரம் மாவட்டம்.

மதுரையிலும், கொற்கையிலும் இருந்து பன்னெடுங் காலம் ஆட்சி செய்த பாண்டியர்களது அதிகார வரம்பிற்குள்ளும், அவர்களையடுத்து சோழர்கள், இஸ்லாமியர், நாயக்கர், சேதுபதி மன்னர்கள் ஆகியோரது ஆட்சிகளிலும் இந்தப்பகுதி இருந்துள்ளது. அன்றைய நாட்களில் இப்பகுதி நாடு, வளநாடு, கூற்றம் என பல்வேறு பிரிவுகளாக நிர்வாகத்தின் பொருட்டுப் பிரிக்கப்பட்டிருந்தது.

வேம்புக்குடி நாடு (சாத்தூர் வட்டம்), வேம்பு நாடு, பருத்திக்குடி நாடு (அருப்புக்கோட்டை வட்டம்), வடதலைச் செம்பிநாடு (முதுகுளத்தூர் வட்டம்), கீழச் செம்பிநாடு, செவ்விருக்கை நாடு (இராமநாதபுரம் வட்டம்), பொலியூர் நாடு (கமுதி வட்டம்), கைக்கை நாடு (பரமக்குடி வட்டம்), ராஜராஜப் பாண்டி நாடு (மானமதுரை வட்டம்), தென்னலை நாடு, களவழிநாடு (தேவகோட்டை வட்டம்), கானப்பேர் நாடு (சிவகங்கை வட்டம்), திருப்பிடாவூர் நாடு (திருப்பத்தூர் வட்டம்), இடையளநாடு, தழையூர் நாடு (திருவாடானை வட்டம்) என்று வழங்கப்பட்ட நாடுகளின் தொகுதி என்று இதனைக் கருதுவதே பொருத்த முடையதாகும்.

இந்த நாடுகள் மதுரோதைய வளநாடு, மதுராந்தக வளநாடு, கேரள சிங்க வளநாடு, அதளையூர் வளநாடு, திருபுவன முழுதுடையார் வளநாடு, வரகுணவளநாடு, ஜெயமாணிக்க வளநாடு, என்பன போன்ற பிரிவுகளும் அடங்கும். இவற்றிடையே பாகனூர் கூற்றம், துகலூர் கூற்றம், முத்தூர் கூற்றம், மிழலைக் கூற்றம் போன்ற உட்பிரிவுகளும் இருந்தமை தெரியவருகின்றன. இவை யனைத்தும் பாண்டியர்கள், சோழர்கள் பிற்காலப் பாண்டியர் ஆகிய பேரரசுகளின் கால நிலையாகும்.

எனினும், இவை மதுரை-திருச்சி நாயக்க மன்னர்களது ஆட்சியில் பெரிதும் மாறுதல் பெற்றன. இதற்கு அவர்கள் தங்களது பூர்வீக நாடான வடுகர் மாநிலத்தில் அப்பொழுது நடைமுறையில் இருந்த அமர நாயக்க முறையான பாளையக்காரர் முறை நிர்வாகத்தை பாண்டிய நாட்டில் புகுத்தி கடைப்பிடித்தது காரணமாகும். இதன் விளைவாக தென்பாண்டிச் சீமை எழுபத்தியிரண்டு பாளையப்பட்டுக்களாகப் பிரிக்கப் பட்டு, பெரும் நிலக்கிழார்கள், குறிப்பிடப்பட்ட எல்லைக்குட்பட்ட பாளையப் பகுதிகளின் தலைவர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

சீர்மை என்ற பெரும் பிரிவில் இந்தப் பாளையங்களும், சமுத்திரம், மஜோரா, பட்டி என்ற உட்பிரிவுகளும் இருந்தன. கி. பி, 1736 இல் நாயக்க வழியினரது ஆட்சி முறை முடிவுக்கு வந்தது. இதையடுத்து தென் மாநிலம் அனைத்தையும் உரிமை கொண்டாடிய ஆற்காட்டு நவாபுகளின் ஆட்சியின் போதும், பின்னர் அவர்களிடமிருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கிழக்கு இந்தியக் கும்பெனியாரது நிர்வாகத்தின் போதும், நாயக்க மன்னர்களது ஆட்சியின் போதும் இந்நிலப் பிரிவுகள் நீடித்தன.

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த பாளையங்களில் அமைதி யின்மை, புரட்சிப்போக்கு, அந்நிய எதிர்ப்பு அதிகரித் தன. இதன் காரணமாக கும்பெனியார் வஞ்சகமான, மிருகத்தனமான அடக்குமுறைகளைக் கையாண்டு பாளையங்களின் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்கினுர்கள். கூடவே ஆட்சிப் பிரிவுகளை மாற்றி ஜில்லா, தாலுகா, கஸ்பா என்பன போன்ற பிரிவுகளையும், அவற்றின் மேலாளராக கும்பெனியாரே தங்கள் நாட்டவரான பரங்கிக் கலெக்டர்களையும் நியமனம் செய்தனர். அவர்களுக்கு உதவியாக ஜமீன்தார்கள் என்ற புதுவகை யான நிலப் பிரபுக்களையும் உருவாக்கினர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்கு தன்னுட்சி செய்த சேதுபதிகள், முத்துக்கிருஷ்ணப்ப நாயக்க மன்னர் காலம் முதல் பாளையக்காரர்களில் தலைமை பூண்டவர்களாக இருந்து வந்தனர். இவர்களது ஆட்சிப் பகுதி மறவர் சீமை என்றும், சேதுநாடு என்றும் வழங்கப் பெற்றது.

கி. பி. 1795 இல் ஆற்காட்டு நவாப்பிடமிருந்து உடன் படிக்கை ஒன்றின்மூலம், இந்தப் பகுதியிலும் இணைந்த தென்மாநிலத்திலும் மேலாதிக்கத்தைப் பெற்ற கும்பெனியார் தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இராமநாதபுரம், சிவகங்கை மன்னர்கள் ஈடுபட்டதை முறியடித்ததுடன், அவர்களது ஆளுகைப் பகுதிகளை ஜமீன்தாரிகளாக மாற்றியமைத்தனர்.

இதன்படி தங்களுக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையை கப்பமாகச் செலுத்தும் அரச வழியினரை சிவகங்கையில் 1801 லும், இராமநாதபுரத்தில் 1803 லும் ஜமீன்தார்களாக நியமனம்செய்தனர். இதற்காக

1814 இல் நிலங்களை மேனாட்டுமுறையில் அளந்து கணிக்கும் சர்வே முறையைப் புகுத்தினர். இந்த அடிப்படையில் விளைநிலங்களின் விளைச்சல் மதிப்பை கணக்கிட்டு கப்பத்தொகையை (''பேஷ்கிஷ்'') அளவு செய்தனர்.

இந்தக் கப்பத்தொகையை முறையாக வசூலிக்கவும், இந்தப் பகுதியில் உள்ள ஜமீன்தார்களது வழிவழி உரிமை, குடிமக்களது அனுபவ உரிமை மற்றும் சொத்து. சுற்ற இயல் வழக்குகளை விசாரித்து முடிவு செய்யவும் ஜில்லா கலெக்டர் பதவிகளும், மாவட்ட முன்சீப் மன்றங்களும் கும்பெனியாரால் ஏற்படுத்தப்பட்டன

இதனடிப்படையில் நிர்வாக அமைப்பைச் சீராக்கும் நோக்கத்துடன் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டங்களையும், மதுரை மாவட்டத்திலிருந்து திருப்புத்தூர் வட்டத்தையும் பிரித்து மறவர் சீமையுடன் இணைத்து இன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தை ஜூன் 1, 1910 இல் **(G. O. 399 Revenue dated 23-5-1910)** ஏற்படுத்தினர். மதுரையை இதனது தாற்காலிகத் தலைநகராகவும் அமைத்தனர்

இம்மாவட்டத்திற்கு இயற்கையின் இன்னருங் கொடையாக விளங்குவது ''தமிழ்கண்டதோர் வைகை'' ஆறுகும். மதுரையை வளமுறச் செய்துவிட்டு வங்கக் கடல் நோக்கிச் செல்லும் வழியில் மாவட்டத்தின் வடகிழக்குப் பகுதி நிலங்களை வைகை நஞ்சையாக மாற்றி வளஞ்சேர்க்கிறது. இது தவிர விரிசுழி ஆறு, அரிசிலை ஆறு, மணிமுத்தாறு, கோட்டைக்கரை ஆறு, குண்டாறு, மலட்டாறு, வைப்பாறு, பாலாறு,

அர்ஜுனு நதி, பாம்பாறு, மணிமுத்தாறு, போன்ற பல சிற்ருறுகளும் இந்த மாவட்டத்தில் பாய்கின்றன. தென்மேற்கு, வடகிழக்குப் பருவக் காற்றுகளினுல் பெறுகின்ற பருவமழை இம்மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா ஆண்டுகளிலும் சீராக இருப்ப தில்லே. சில ஆண்டுகளில் புயலும் பெருமழையும் இருந்துள்ளன. என்ருலும் பெரும் பகுதிகள் வறட்சி யாலும், நீர் பற்ருக் குறையாலும் பெரிதும் பாதிக்கப் பட்டு பஞ்சத்தைத் தோற்றுவிப்பனவாக இருந்து வந்துள்ளன.

நாடு விடுதலே பெற்று முப்பத்தைந்து ஆண்டுகளாகி யும் இந்த அவலநிலேயை மாற்றக் கூடிய திட்டங்கள் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லே என்பது மறுக்க முடியாத உண்மை. விளேபொருள் வித்து மானியம், விவசாயக் கடன், நீர்ப்பாசனம். கேணி குளங்களே ஆழப்படுத்தல், புதுக்கிணறு, கால்நடை முன்னேற்றம், வைகையாறு சீரமைப்பு ஆகிய துறை களில் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளதாக அரசுதரப்புப் புள்ளி விவரங்கள் சுட்டினுலும், இவற்றின் முழுப்பயனும். இந்த மண்ணின் மலர்ச்சிக்காக செலவிடப்படவில்லே. இந்த உண்மையை இப்பொழுது நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் வறட்சி நிவாரணத் திட்டங்கள் விளக்குகின்றன. இந்த விபரங்களே செய்தித் தாள்களிலும், அரசு வெளியீடுகளிலும் அடிக்கடி காணமுடிகிறது.

இவைபோன்று இன்னும் எத்துணேயோ விபரங்களே இம் மாவட்டத்தின் வரலாறு, விடுதலேப்போர், தொழில் முன்னேற்றம், வாழ்க்கை நிலே ஆகியவைகளே-எளிதில் தெரிந்து கொ்ளளக் கூடியதாக இல்லே.

இமயமுதல் குமரிவரையிலான பலமொழி பேசும் பல்வேறு இனமக்களின் ஒருமைப்பாட்டு மையமாக விளங்குகின்ற இராமேஸ்வரம் ஆலயம் இந்த மாவட்டத்தில் உள்ளது. சுற்றிலும் கடல் சூழ்ந்த அங்கு சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக எத்தனையோ நூற்றாண்டுகளாகச் சிறந்து விளங்கும் உலக அதிசயங்களில் ஒன்றான ''மூன்றாவது பிரகாரம்'' இந்த ஆலயத்தில் தான் அமைந்துள்ளது. தங்களது சமய உண்மைகளை உணர்த்தி மக்களது ஆதரவைப் பெறுவதற்காக பன்னிரண்டாம் நூற்றாண்டில் அரபு நாட்டில் இருந்து வந்த சுல்தான் சையிது இபுராகிம் சஹீதும், பதினேழாம் நூற்றாண்டில் போர்ச்சுகலிலிருந்துவந்த ஜான். டி.பிரிட்டோவும், தங்களது இரத்தத்தைச் சிந்தி, இன்னுயிர்களை வழங்கியதும் இந்த மண்ணில்தான்.

குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு உண்டோ என்று சோழனைச் சினந்து வந்த கவிச் சக்கரவர்த்தி கம்பனும், எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் என்று தன்னடக்கத்துடன் வாழ்ந்த தாயுமான அடிகளும் தங்களது மரணத்தைத் தழுவிக் கொண்டதும் இந்த மண்ணிலேதான். (நாட்டரசன்கோட்டை-இராமநாதபுரம்)

இந்தப்புனித மண்ணின் மகத்துவத்தை, பாரம்பர்யத்தைக் காக்க அந்நியரை எதிர்த்து விடுதலை வேள்வியை நடத்தி தியாகிகளான ஆயிரக் கணக்கான வீர, வீராங்கனைகளின் முன்னோடியாக விளங்கி, களபலியான கம்மந்தான் கான்சாகிபும், புரட்சி வீரன் முத்துராமலிங்க சேதுபதியும் இந்த மாவட்டத்தின் வரலாற்று நாயகர்கள்.

'வெள்ளையனே வெளியேறு' என்று 1942 ஆகஸ்டில் இந்தியா முழுவதும் குரல்கொடுத்த பொழுது, வெள்ளை ஏகாதிபத்தியத்துடன் நேரடி மோதலை, இந்த மாவட்ட மக்கள்தான் தேவகோட்டை, திருவாடானை மற்றும் பூலாங்குறிச்சி ஆகிய இடங்களில் தொடுத்து விழுப்புண் பெற்றனர். விடுதலைக்குப் பின்னரும் உரிமை வேண்டி இம்மாவட்ட மக்கள் செய்த போராட்டங்கள் மகத்தானவை. வத்திராயிருப்பு விவசாயிகள் போராட்டம், கீழப்பசலை இனும்தார் களின் கொடுமையை எதிர்த்துக் கிளர்ச்சி, பரமக்குடி யில் நெசவாளர் போராட்டம் இப்படி எத் துணையோ உண்டு.

இவைபோன்ற சிறப்பான அரசியல் நிகழ்ச்சிகள், அதன் விளைவுகள், சமூக நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள், சாதிக் கலவரங்கள், கல்விமேம்பாடு போன்ற எண்ணற்ற நிகழ்ச்சிகள் உள்ளன. பலதுறை களிலும் பயிலும் மாணவர்கள், ஆய்வுகளை மேற் கொள்ள விரும்பும் பொதுமக்கள் இப்படிப் பலருக்கும் பயன்படும் வகையில் இந்தச் சிறுநூல் தொகுக்கப் பட்டுள்ளது. காலமின்மை போன்ற காரணங்களினால் இந்நூலில் கூடுதலான விவரங்களுக்கு இடமளிக்க இயலவில்லை. எனினும் லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து வெளியிடவிருக்கும் பல்வேறு வகையான இத்தகைய ஆராய்ச்சி வெளி யீடுகள் இந்தக் குறைகளை நிறைவு செய்யும்.

O

# இராமநாதபுரம் மாவட்டத்தில் சோழர்கள்.

இராமநாதபுரம் மாவட்டம் முழுமையும் பாண்டிய நாட்டின் பகுதியாக விளங்கிய பொழுதிலும் சுமார் முன்னூறு ஆண்டுகள் சோழப் பேரரசின் ஆட்சிக்கு அடங்கிய நாடாக கி. பி. 919 முதல் இருந்து வந்ததை வரலாறு வர்ணித்துள்ளது. அப்பொழுது இந்த மாவட்டத்தின் வடபகுதி ராஜராஜப் பாண்டிய நாடு ராஜேந்திர சோழவளநாடு எனவும், தென்பகுதி செம்பி நாடு எனவும் வழங்கப்பட்டது. இதன் நிர்வாகத்தை சோழ இளவல்கள் ''சோழ பாண்டியர்'' என்ற பட்டத்தை சுமந்து இயக்கி வந்தனர். இவர்களில் சிறப்புற்ற சோழகங்கதேவன், சோழகங்கன் ஆகியோர்கள் பற்றிய செய்திகளை அருப்புக்கோட்டை கல்வெட்டிலும், பள்ளிமடம் கல்வெட்டிலும் இருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் ராஜாஜ சோழனது கல்வெட்டுக்கள் எதிர்கோட்டையிலும் (கி. பி. 1007) திருச்சுழியிலும் (கி.பி. 997) திருப்புத்தூரிலும் (கி.பி. 1013) உள்ளன. சோழப் பேரரசின் பெருமைக்குரிய இன்னொரு பேரரசனான மூன்றும் குலோத்துங்க சோழ தேவனது 35-வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு பிரான்மலையிலும், 22, 40, 48, 49-வது ஆட்சியாண்டு கல்வெட்டுக்கள் குன்றக்குடியிலும், 44-வது ஆட்சியாண்டு கல்வெட்டு பெருங்கருணையிலும், 48-வதுஆட்சியாண்டு கல்வெட்டு கோவிலாங்குளத்திலும் கிடைத்துள்ளன. இராமநாதபுரம் வட்டம் பெரியபட்டினம் கிராமத்தில் நிகழ்த்திய அகழ்வுகளில் ''ராஜராஜ சோழன்'' ''சுங்கம் தவிர்த்த சோழன்'' ஆகியவர்களது செப்புக்காசுகள் கிடைத்துள்ளன. இவை இந்த மாவட்டத்தில்

சோழர்களது வலுவான ஆட்சி நடைபெற்றதற்கு வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன. கி. பி. 1218-ல் குலோத்துங்க சோழனது வீழ்ச்சி, பாண்டியர்களது இரண்டாவது பேரரசின் எழுச்சியைக் காட்டியது. பாண்டியநாடு பழம் பெருமையை எய்தியதுடன் பாண்டிய நாட்டின் எல்லைகள் வடக்கே சோழநாட்டையும் வடுக நாட்டையும், தெற்கே ஈழநாட்டையும் மேற்கே வேளுநாட்டையும் உள்ளடக்கியதாக விரிந்தன.

சோழர்கால ஆட்சியின் விளைவாக எழுந்த சிற்றூர்கள் சோழர்கள் பெயரால் நிலைப்பெற்று இன்றும் வழக்கில் இருந்து வருகின்றன. குறிப்பாக, சோழவந்தான் (சிவகங்கைவட்டம்) சோழந்தூர் (திருவாடனைவட்டம்) சோழபுரம் (ராஜப்பாளையம் வட்டம், சிவகங்கை வட்டம்) சோழன்குளம் (மானுமதுரை வட்டம் இராமேஸ்வரம் வட்டம்) சோழமுடி, சோழக், கோட்டை (சிவகங்கை வட்டம்) சோழப்பெரியான். சோழியக்குடி (திருவாடனை வட்டம்) சோழகன்பட்டி (திருப்புத்தூர் வட்டம்) ஆகியவை அந்த சிற்றூர் களிலும், இராமநாதபுரம் வடக்கில் உள்ள தேவிப் பட்டினம் ராஜராஜ சோழனது இல்லக்கிழத்தியான லோகமகா தேவியின் நினைவாக அமைக்கப்பட்ட ஊராகும். உலகமகா தேவிப்பட்டினம் என்பது தான் நாள்டையில் வழக்கில், பகுதி மறைந்து தேவிப் பட்டினம் என வழங்கி வருகிறது. இதைத் தவிர சோழர்களது வெற்றிப் பெயர்களான கங்கை கொண்டான் (பரமக்குடி வட்டம்) கிடாரம் கொண் டான் (முகவை வட்டம்) வீரசோழன் (அருப்புக் கோட்டை) கோதண்டராமன் பட்டணம் (முது குளத்தூர் வட்டம்) செம்பியக்குடி (பரமக்குடி, முது குளத்தூர், திருவாடனை வட்டம்) ஆகியவை ஊர்களின்

பெயர்களாக அமைந்து சோழ மன்னர்களது வீர வரலாற்றை மட்டுமல்லாமல் இந்த மாவட்டத்தில் அவர்களது ஆட்சி நிலைபெற்று இருந்ததையும் நமக்கு இன்றும் நினைவூட்டுவனவாக இருக்கின்றன.

O

# சமணர்கள்

இந்தியத் துணைக்கண்டத்தின் மிகப்பழமையானசமயங்களில் சமணமும் ஒன்றாகும். ஆனால், இச்சமயம் தமிழகத்தில் சங்க காலத்திற்குச் சற்று முன்னதாக தமிழக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் தேவாரம் பாடிய மூவர்களினால் சைவம் தழைத்து எழுந்தபொழுது சமணம் தாழ்ந்தது. தேவாரப் பகுதிகளில் குறிப்பாக சம்பந்தரது பதிகங்களின் கடைசிப் பாசுரம் சமணர்களைச்சாடி பாடப்பட்டுள்ளது. மேலும் அவர்களது எளிய வாழ்க்கை, உணவு, உடை, இந்து வேதத்தையும் வேள்வியையும் மறுக்கும் மனப்பாங்கு போன்றவைகளை இந்தப் பதிகங்களிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

சமணர்களைத் தமிழ் இலக்கியங்கள் அருகர், அமணர், சாக்கியர், ஆருகதர் எனப் பலவாறாகக் குறிப்பிடுகின்றன. பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் பலவற்றை சமணத்துறவிகள் தான் பாடியுள்ளனர். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையைப் பாடியப் பெரும்புலவர் சாத்தனார் சமண நெறியைச் சார்ந்தவர்.

அருமைத் தமிழையும், அருக நெறியையும் போதித்த இவர்கள் கடிகைகளையும் பள்ளிகளையும் மடங்களையும் பல இடங்களில் நிறுவினர். அவற்றின் வளர்ச்சிக்கு சோழபாண்டிய மன்னர்கள் பல ஊர்களை இறையிலியாக வழங்கினர். அவை பள்ளிச் சந்தம் என வழங்கப்பட்டன.

நமது மாவட்டத்தில் இவை மிகுதியாக பருத்திக்குடி நாட்டிலும், வேம்பு வளநாட்டிலும் அமைந்து இயங்கின. இன்றைய கமுதி, அருப்புக் கோட்டை, திருச்சுழி வட்டங்களே அந்தப் பகுதிகள். எட்டாம் நூற்றாண்டைய 'பள்ளி மடம்' கல்வெட்டு இந்த உண்மையை உணர்த்துகிறது. அனல் வாதத்திலும், புனல் வாதத்திலும் சம்பந்தரிடம் தோல்வியுற்ற சமணர்கள் மதுரைக்குப் பிறகு அடுத்த புகலிடமாக இப்பகுதியில் குடியேறியிருக்க வேண்டும். அவர்களுக்கு பாண்டியன் மாறஞ்சடையன் தக்க உதவிகளை வழங்கினான்.

கோவிலாங்குளத்தில் உள்ள இன்னொரு கல்வெட்டிலிருந்து இப்பகுதி சமணத்துறவிகளும் மகாவிரதினிகளும் விரும்பி வாழ்ந்த பகுதியாக விளங்கியது தெரிகிறது. இதனைப்போன்று இம்மாவட்டதின் வடகிழக்குப் பகுதியும் அருக சமயத்திற்கு ஆதரவு தந்ததாகத் தெரிகிறது. இளையான்குடி, ஆனந்தூர், அனுமந்தக்குடி, திருக்களாக்குடி, பிரான்மலை கீழப்பனையூர், ஆகிய சிற்றூர்களில் காட்சியளிக்கும் சமணத் துறவிகளது கல் திருமேனிகள் இந்த உண்மையை உறுதிப்படுத்துகிறது. சீ (சை) னங்குடி, சீ (சை) னமங்கலம், சாத்தப்பள்ளி. சாத்தனூர், சாத்தன்குளம், சாத்தமங்கலம், அச்சன்குளம், அச்சன்குடி, அறப்போது, நாகணி, நாகனேந்தல்,

விளக்கனேந்தல், குணங்குடி, குணபதிமங்கலம் ஆகிய ஊர்களும் சமணர்களது குடியேற்றங்கள் என்பதில் ஐயமில்லை,

— O

# இராமலிங்க விலாசம்

சேது வேந்தர்களில் மிகவும் சிறப்புற்று விளங்கிய கிழவன் சேதுபதி (1675-1710) யின் ஆட்சியில் இராமநாதபுரம் கோட்டை சேதுநாட்டின் தலைநகராக மாற்றம் பெற்றது. இதன் பின்னர் இக்கோட்டையின் உட்புறத்தில் அரசரது இருக்கைக்கு ஏற்ற மாளிகைகள் நிர்மாணிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் இராம லிங்க விலாசம் அரண்மனை.

தண்டமிழ்க் காவலர்களாக விளங்கிய சேதுபதிகளது அவைக்களமாகவும், ஆடம்பர இல்லமாகவும் பயன் படுத்தப்பட்ட காரணத்தினுல், இந்த மாளிகையின் உட்புறம், வண்ண ஓவியங்களால் அழகு படுத்தப் பட்டன. ஓவியக் கலைக்கும் வரலாற்றியலுக்கும் பெருமை தரும் ஓவியங்கள் அங்கு காணப் படுகின்றன. தஞ்சை மன்னருக்கும், சேதுபதிக்கும் நடந்த போரைச் சித்தரிக்கும் ஓவியம், ஆடற்கலையை மன்னர் பல்வேறு உடையணிந்த நிலையில் கண்டு மகிழும் ஓவியங்கள், சேதுபதி மூன்று ஆங்கிலேயர்களை வரவேற்கும் ஓவியம் மற்றும் இராமாயணம், பகவத்கீதை இவற்றை விளக்கும் காட்சிகளும், சைவ வைணவ இலக்கியங் களைச் சித்தரிக்கும் ஓவியக் காட்சிகளும் இராமலிங்க விலாசத்தில் இடம் பெற்றுள்ளன.

இன்று, அவற்றின் பெரும் பகுதி காலத்தின் சீரழிவிற்கு இலக்காகி இருந்தாலும் ஒரு பகுதி இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் ஏற்றமிகு எழிலுடன் காட்சியளிக்கின்றன. மேற்குறிப்பிட்ட ஓவியங்களோடு மன்னரது மகுடாபிஷேகம், மனங்கவரும் களியாட்டங்கள், அந்தப்புர கேளிக்கைகள், திறைபளிக்கும் காட்சிகள், போன்ற பல ஓவியங்கள் வண்ணக் கலவையில் வழங்கப் பட்டுள்ளன.

கிழவன் சேதுபதியும் அவரையடுத்து அரியணையேறிய விஜய ரகுநாத சேதுபதியும் (1710-2?) குமாரமுத்து விஜய ரகுநாத சேதுபதியும் கொண்டிருந்த கலை உள்ளந்தான் இராமலிங்க விலாசம் கலைப் பேழையாக காட்சியளிக்கக் காரணமாக இருந்துள்ளது.

இம்மாளிகை, கலைக்கூடமாக மட்டுமல்லாது, கலைஞர்களும், புலவர்களும் தங்களது தன்னேரில்லாத திறனுக்குத் தக்க பரிசில் பெறும் முத்திரைக் கூடமாகவும் விளங்கி வந்துள்ளது. அட்டாவதானம், சதாவதானம், சரவணப் பெருமாள் கவிராயர்கள், மீர் சவ்வாது கவிராயர், மீனாட்சி சுந்தரம் பிள்ளை, வித்வான் ரா. ராகவ ஐயங்கார், மகோபாத்யாய உ. வே. சாமிநாதைய்யர், சிலேடைப்புலி பிச்சுவையர், சூரியநாராயண சாஸ்திரியார், (பரிதிமாற் கலைஞர்) போன்ற மிகப்பெரும் புலவர்களும், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், மகாவைத்யநாதஐயர், மைசூர் சேஷண்ணா, பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார், வீணை தனம்மாள், வயலின் சௌடய்யா போன்ற கலை மேதைகளும் தங்கள் கலை வண்ணத்தைக் காட்டி, பரிசிலும் பெருமையும் பெற்ற ஒப்பற்ற இடந்தான் இம்மாளிகை.

மற்றுமொரு சிறப்பான செய்தியும் இதனோடு தொடர்பு கொண்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்

பகுதியில் கும்பெனியாருக்கு பணிந்து வாழவிரும்பாத தென்பாண்டி நாட்டு பாளையக்காரர்கள் ஆதிக்க உணர்வைக்களைந்து அந்நியரை எதிர்த்துப் போராடும் நிலைக்கு வந்தனர். அவர்களை ஒரணியில் திரட்டிவந்த பாஞ்சாலங்குறிச்சி பாளைக்காரர் கட்டப் பொம்மு நாயக்கர், கலெக்டர் ஜாக்ஸனின் கட்டளைக்கிணங்க 1798-இல் இந்த மாளிகையில்தான் அவரைச் சந்தித்தார். கட்டபொம்முவின் இறுதி வாழ்க்கையான இரண்டாண்டு போராட்டமே இங்கிருந்துதான் துவங்கியது எனக்கொள்வதுதான் மிகப்பொருத்தமானதாகும்.

பலவகையிலும் சிறப்புற்று விளங்கும் இந்த அரண்மனை காலமெல்லாம் தமிழுணர்வையும், வீரவரலாற்றையும் இளஞ்சந்ததியினருக்கு வாரிவழங்கும் நினைவு மையமாக விளங்க வேண்டுமென்பதற்காக இந்த அரண்மனையை தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் 1978 முதல் தங்கள் பொறுப்பில் ஏற்று பராமரித்து வருகின்றனர்.

## இராமேஸ்வரம் தீவு

இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது சிறப்பான திருப்பணிகள் காரணமாக கட்ந்த ஆறு நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்திய நாட்டின் திருத்தலங்களில் முதன்மை பெற்று விளங்குவது இராமேஸ்வரம் திருக்கோயிலாகும். இந்த ஆலயத்தைப் பலவகையிலும் விரிவுபடுத்தி அமைத்தவர்களும் அந்த மன்னர்களே.

இந்த ஆலயத்தின் அன்றாடக் கட்டளைகள் முதல் ஆண்டு தோறும் நடைபெறும் திருவிழாக்கள் வரை, முறையாக காலமெல்லாம் நடந்தேற, அணியும் மணியும், பொன்னும் பொருளும் அள்ளி அள்ளி வழங்கியதுடன், ஐம்பத்து ஏழு ஊர்களையும் சர்வமான்யமாக வழங்கினார்கள்.

கடல் நடுவில் அமைந்துள்ள இராமேஸ்வரம் தீவில் காலத்தையும் கற்பனையையும் கடந்து நிற்கும் கட்டுமானங்களை இந்த ஆலயத்தில் அமைத்து, உலக அதிசயங்களில் ஒன்றாக மூன்றாம் பிரகாரத்தையும் அமைத்துள்ளனர். கோயிலின் கருவறையை ஒட்டிய வாறு இரண்டு சுற்றால மண்டபங்கள் இருந்தாலும், இந்த ஆலயத்தின் கட்டுமானங்கள் அனைத்தையும் உள்ளடக்கியவாறு, கட்டுமானத்திற்கு முத்தாய்ப்பாக விளங்குவது மூன்றாம் பிரகாரம்தான். இக்கோவிலின் பெரும் பகுதி 12-16 ஆம் நூற்றாண்டுகளில் கட்டப் பட்டது. கி. பி. 1414 வாக்கில் இராமேஸ்வரம் திருக் கோயிலில் உடையான் சேதுபதியின் ஆலயத்திருப்பணி துவங்கியது. இதன் கற்கள் இலங்கையிலுள்ள திரி கோணமலை என்ற இடத்தில் உருவாக்கிக் கொண்டு வரப்பட்டன என்று கூறப்படுகிறது.

கிழமேலாக 695 அடி நீளமும், தென்வடலாக 450 அடி நீளமும் கொண்ட சதுரவடிவில் 1740 அழகான கற்றூண்கள் நிறுத்தி, அழகு சேர்க்கப்பட்டுள்ளது இந்த மூன்றாம் பிரகாரம். இந்தப் பிரகாரத்தின் ஓர் இடத்திலிருந்து மற்றொரு மூலையைப் பார்க்கும் பொழுது, அந்த இடம் கண்ணாடிச் சட்டத்திற்குள் பொருத்தப்பட்டுள்ள சித்திரம் போன்று ஒரேஅளவுள் ளதாகவும், அழகாகவும் காட்சியளிக்கும் தோற்றத்தில் அமைந்துள்ளது.

அழகுக் காவியமாக விளங்கும் இந்த அமைப்பைத் திட்டமிட்டுச் செயல்படுத்த முனைந்தவர் விஜய ரகுநாத சேதுபதியாவர். ஆனால், முப்பது ஆண்டுகள் தொடர்ந்த இந்த கட்டுமானப்பணி முத்துராம லிங்க சேதுபதியின் ஆட்சிக் காலமாகிய 1769இல் நிறைவு பெற்றது.

இத்தலம் இந்துக்களுக்கு மட்டுமல்லாது இஸ்லா-மியர்களுக்கும் கூட புனிதத் தலமாக விளங்குகிறது. மனித இனத்தின் ஆதிபிதாவாக இஸ்லாமியர்களால் கருதப்படும் ஆதம் நபியின் மக்களான ஆபில், காபில் ஆகிய இருவர்து அடக்க இடங்களும் இராமேஸ்வரம் ரயில் நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளன.

டில்லிப் பேரரசன் அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக்காபூர், சுந்தரபாண்டியனது விருப்பத்தின் பேரில் பாண்டிய நாட்டில் படையெடுத்து, இறுதிக் கட்டமாக இராமேஸ்வரத்திற்கு 1311இல் வந்தார்.

இத்தலத்தை வழிபட இன்று இந்தியாவின் பல பகுதிகளினின்றும் பயணிகள் வருகின்றனர். ஆனால் சாலைவசதி இல்லாத அந்நாளிலேயே விஜயநகரப் பேரரசர்களான கிருஷ்ணதேவராயர், கி. பி. 1519 லும் அடுத்து அச்சுதராயரும் இங்கு தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து பல்வேறு அறச் செயல்களை மேற்கொண்டனர்.

இவ்வரசர்களுக்கும் முன்னதாக விஜயநகர மகா மண்டலேசுவரர்கள் இராமேஸ்வரம் திருக்கோயி லுக்கு வருகை தந்துள்ளனர்.

1. சாளுவ நரசிம்மன் கி. பி. 1483
2. நரஸ நாயக்கன் கி. பி. 1499
3. சளுக்க ராஜூ திருமலை கி. பி. 1534

இதிகாசத்தோடு தொடர்பு கொண்ட திருத்தலமாக இவ்வூர் திகழ்வது ஒருபுறமிருக்க, மதுரை திருமலை நாயக்க மன்னர் இங்கு ஒரு தேவாலயம் கட்டவும் பாம்பனுக்கும் தொண்டிக்குமிடையே ஏழு கோயில்கள் கட்டவும் கி.பி. 1623 இல் அனுமதி கொடுத்தார். அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் 1894 இல் அனைத்துலக சமயங்களின் மாநாட்டில் இந்து சமயப் பிரதிநிதியாக சுவாமி விவேகானந்தர் கலந்து கொண்டார். சேதுபதி மன்னரின் பொருளாதார உதவியோடு அமெரிக்கப் பயணத்தை முடித்துத் திரும்பிய சுவாமிகள் 21-1.1897 இல் சேதுமன்னரின் துறைமுகமாகிய பாம்பனில் கரை இறங்கி இராமேஸ்வரம் சென்றார். சிறப்பானதொரு வரவேற்புக்குப் பின்னர், சுவாமிகளை ஒரு சிறிய கைவண்டியில் அமரச் செய்து தாமே அவ்வண்டியை இழுத்தவாறு திருக்கோயிலுக்கு பாஸ்கரசேதுபதி மன்னர் அழைத்துச் சென்றார்.

1947 ஜனவரி 27 ஆம் தேதி இராமேஸ்வரம் திருக்கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சி நடைபெற்றது. 1966 இல் இந்திய வம்சாவளியினரை இங்கு கொணர ஏதுவாக துறைமுக வசதி ஏற்படுத்தப் பட்டது.

இராமேஸ்வரம் ஆலயத்திற்கு வருகை புரிந்தவர்களில் முக்கியமானவர்கள்:

1. இந்திய ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத்
2. இந்தியஜனாதிபதி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்

3. இந்திய ஜனாதிபதி வி.வி.கிரி(குடும்பத்துடன்)
4. இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி
5. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி
6. நேபாள மன்னர் வீரேந்திரா(குடும்பத்துடன்)
7. காஷ்மீர் மன்னர் கரண்சிங்(குடும்பத்துடன்)
8. மைசூர் மன்னர் ஜெயசாமராஜ உடையார்

இராமேஸ்வரத்தை அடுத்துள்ள ஏகாந்த இராமர் ஆலயத்திற்கு வருகை தந்த இராமநாத உபாசகரும் சாகித்ய கர்த்தாவுமான தியாகையர் அங்குள்ள இராமனது திருக்கோலத்தில் ஈடுபட்டு இருதெலுங்கு கீர்த்தனைகளைப் பாடினார். அவற்றின் பொருளும் பாவனையும் இராமனை நேரில் கண்டு உருக்கமாக உரையாடுவது போல உள்ளன.

O

# பாம்பன் கால்வாய்

இந்தியத் துணைக்கண்டத்தில் தென்கோடியில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி இராமேஸ்வரம் தீவு, இன்று தீவாக இருக்கும் இத்தீவு, ஏறத்தாழ ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பாம்பன், மண்டபம் போன்ற பகுதிகளுடன் பாறைகளால் இணைக்கப் பட்டிருந்தது.

கி. பி. 1170 இல் இலங்கையிலிருந்து இராமேஸ்வரத்தில் இறங்கிய சிங்களப் பெரும்படை இராமேஸ்வரத்

தையும் குந்துகாலேயும் கைப்பற்றி, மேற்கு நோக்கி வந்து வேதாளை போன்ற இடங்களில் போரிட்ட பொழுது பாம்பன் கால்வாயைக் கடந்து வந்ததாக இலங்கை வரலாற்றில் குறிப்பு எதுவும் இல்லை.

கி. பி. 1480 இல் ஏற்பட்ட புயலும் கடற் கொந்தளிப்புந்தான் பாம்பன் கால்வாய் ஏற்படக் காரணமாக அமைந்தது. மண்டபத்திற்கும் பாம்பனுக்கும் இடைப்பட்ட குறுகலான பகுதி கடலில் அமிழ்ந்துமணற் பகுதி மறைந்து பாம்பனும் இராமேஸ்வரமும் உள்ள பகுதி சிறு தீவாகியது. அடுத்தடுத்து ஏற்பட்ட புயல் கள்ால் இப்பகுதி இன்றுள்ள 2. 7. கி. மீ. அளவு கடல் பகுதியாக மாறிவிட்டது. இதே காலத்தில் தான் இன்றைய பாம்பன், கீழக்கரை, மாரியூர் ஆகிய ஊர் களுக்கு எதிரே கடலில் சில மைல் தொலேவில் உள்ள பன்னிரண்டு சின்னஞ்சிறு தீவுகளும் ஏற்பட்டிருக்க வேண்டும். பாம்பனுக்கும் மண்டபத்திற்கும் இடையில் உள்ள கடற்பகுதியில் 420 அடி தூரத்தில் ஏற்பட்ட இருபாறைத் தொடர்கள் படகுப் பயணத்திற்கு இடையூருக இருந்து வந்தது. இது பாம்பன் பார் என அழைக்கப்பட்டது.

இராமநாதபுரம் சேதிபதி மன்னரால் பாம்பனின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தவர் தண்டத்தேவர். தனது அனுமதியில்லாமல் இராமேஸ்வரம் பயணி களிடம் தீர்வை வசூலித்தது 'சிவத்துரோகம்' என முடிவுசெய்து, தனது இரு பெண்களின் கணவர் என் பதையும் கருதாது மன்னர் அவருக்கு மரண தண்டனே வழங்கினுர். இளவரசிகள் இருவரும் தீக்குளித்து மாண்டனர். பிற்காலத்தில் அப்பெண்களின் நினேவாக

எழுந்தவைதாம் அக்காள்மடம் தங்கச்சிமடம் என வழங்கும் பாம்பனுக்கு அருகிலுள்ள சிற்றூர்களாகும்.

பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பாம்பனுக்கு வருகைதந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர் சடைக்கத்தேவரது பொன்னும் மணியும் நிறைந்த அங்கியொன்று அங்குள்ள வீரபத்திர சுவாமி கோயில் கிணற்றுக்குள் விழுந்து விட்டது. அந்தக் கிணற்றுக்குள் குதித்துத்தேடி எடுத்துத்தந்த ஒருவருக்கு இந்தப் பாறை நிறைந்த பகுதியில் படகுகளைப் பத்திரமாக செலுத்தி வந்து கரை சேர்க்கும் உரிமையை வழங்கியதாகத் தெரிகிறது. இத்தகைய பணிமூலம் கிடைத்து வந்த ஊதியத்தை அனுபவித்து வந்த அந்த வழியினரான மொல்விமுகம்மது என்பவரது உரிமை வெள்ளையர் ஆட்சியின்போது பறிக்கப்பட்டது. இந்த் வருவாயை ஆங்கிலேயரே பெற்றுவந்தனர்.

இந்தப்பகுதியில் முத்துக்குளிக்கும் உரிமையை சேதுபதி மன்னர்களிடமிருந்து பெறுவதற்கு போர்ச்சுக்கேசியரும், டச்சுக்காரரும் மேற்கொண்ட முயற்சிகள் வரலாற்றில் காணப்படுகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மறவர் சீமையில் ஏற்பட்ட புரட்சிகளுக்கு பிரெஞ்சுக்காரர் போன்ற அன்னியரது ஆயுதஉதவி கிடைப்பதைத் தடைசெய்ய, இந்தப் பகுதியை ஆங்கிலேயர் மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வந்த செய்தியும் தெரியவருகிறது.

பாம்பனில் வெளிநாட்டுக் கப்பல்கள் கடந்து செல்வதைக் கண்காணிக்க படையணி ஒன்றை நிறுவுவதற்கு டச்சு அரசின் தூதுக்குழு 1706 இல் கிழவன் சேதுபதியின் அனுமதியைப் பெற்றது.

பாண்டிய நாட்டின் ஆதிக்க உரிமையை ஆற்காட்டு நவாப்பிடமிருந்து பெற்ற பிரிட்டிஷ்காரர்கள் கி. பி. 1822 இல் இப்பகுதியில் ஒரு விரிவான ஆய்வு மேற்கொண்டனர். இங்குள்ள பாறைகளை வெடி வைத்து தகர்த்தும், அவற்றைச் சீர்படுத்தும் பணியை 1828 இல் நிறைவேற்றினர். மீண்டும் 1837இல் இப்பகுதியை கப்பல் போக்கு வரத்துக்கு ஏற்றதாக அமைப்பதற்கான ஆய்வுகளை மேற் கொண்டனர். அப்பொழுது வரையப்பட்ட வரை படங்கள் முடிவுகளின்படி 1838இல் கால்வாய் பகுதியை ஆழமாகவும் அகலமாகவும் தோண்டும் பணி துவக்கப்பட்டது.

மூன்றுண்டு காலத்தில் எட்டு அடி ஆழக் கால்வா யாக மாற்றப்பட்டது. தொடர்ந்து பத்தரை அடி ஆழத்திற்குத் தோண்டும் பணி 1854இல் மேற் கொள்ளப்பட்டு 200டன் நிறையுள்ள தோணிகள் செல்லத்தக்கதாக அமைக்கப்பட்டன. ஆனல் இங்குள்ள கழியான நீர் மணல் காரணமாக பெரும் நீராவிக் கப்பல்கள் செல்லத்தக்க வகையில் இக் கால்வாயை அமைக்க முடியவில்லை. எனினும் பதினுங்கு அடி ஆழத்திற்கு 9232அடி நீளத்திற்கு 80அடி அகலத்திற்குமாக கால்வாய் மாற்றப்பட்டது. 1858-59 இல் தமிழகத்தின் தென்கோடி மாவட் டங்களைச் சூறையாடிய பெரும் பஞ்சத்திற்குப் பயந்து இலங்கைக்குக் கூலியாகச் சென்ற ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் படகுகளிலும், தோணிகளிலும் இந்தக் கால்வாய் வழியாகவே இலங்கை சென்றனர்.

1914இல் இக்கால்வாயின் மீது மண்டபத்தையும் பாம்பனையும் இணைத்து ரயில் தொடரும் தொங்கும்

பாலமும் அமைக்கப்பட்டன. சிறிய கப்பல்கள் செல்வதற்கு ஏற்றாற் போல ரயில் தொடருடன் கூடிய பாலத்தை இரு பகுதிகளாக மேலே தூக்கி நிறுத்தி வழிவிடும் முறை இன்றும் கையாளப் பட்டு வருகிறது.

O

# பாம்பன் கலங்கரை விளக்கம்

சோழ மண்டலக்கரையென பன்னெடுங்காலமாக வழங்கப்பெற்றுவரும் கிழக்கு கடற்கரை, இராமநாதபுரம் மாவட்டத்தின் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. 'மன்னார் வளைகுடா' எனவும்' பாக் ஜலசந்தி' எனவும் புவியியலார் குறிப்பிடுகின்ற இந்தக் கடற்பகுதி கடந்த காலங்களில், பாண்டிய நாட்டின் நுழைபெரும் வாயிலாக அமைந்து வெளிநாட்டு உள்நாட்டு வாணிப பெருக்கிற்கு உதவியது.

இந்தக் கடற்கரையில் எழுந்து சிறந்து நிலைத்து மறைந்த பட்டினங்கள் பல. கோட்டைப்பட்டினம், சுந்தரபாண்டிய பட்டினம், பாசிப்பட்டினம், முத்து ராமலிங்க பட்டினம், அம்மா பட்டினம், தொண்டிப் பட்டினம், மாவூபரன்பட்டினம், சீவல்லப பட்டினம், உலகமாதேவி பட்டினம், முடி வீ ர ன் பட்டினம், மரைக்காயர்பட்டினம், பவித்திரமாணிக்கப் பட்டினம், நினைத்தது முடித்தான் பட்டினம் என்ற கடல்துறைகள்

காலத்தின் அழிவுக்கரங்களுக்கு ஆற்ருது சீர்குலைந்து விட்டன. இப்பட்டினங்களின் அங்கமாக கலங்கரை விளக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டதற்கான செய்திகள் இல்லை.

ஆனல் ஆங்கிலேயர் ஆற்காட்டு நவாபிடமிருந்து இந்தப் பகுதியை 1792 இல் தானம் பெற்றபிறகு, தொண்டியிலும் பாம்பனிலும் கலங்கரை விளக்கங்களைக் கட்டுவித்தனர். அந்நாளில் இவை டச்சு, ஆங்கில வர்த்தகர்களின் முக்கிய வர்த்தகத் தொடர்பு நிலையங்களாகக் கருதப்பட்டு வந்தன. எனினும் தவிர்க்க இயலாத காரணங்களினல் தொண்டியில் இயங்கிய கலங்கரை விளக்கம் தொடர்ந்து செயல்படவில்லை. அதேவேளை பாம்பனில் உள்ளது இன்றளவும் செம்மையாகச் செயல்பட்டுவருகிறது.

பாம்பன் தீவின் வடமேற்கு மூலையில் சிதைந்து போன சேதுபதிகளது கோட்டைக்கு அண்மையில் இந்தக் கலங்கரை விளக்கம் 1846இல் அமைக்கப்பட்டது. கடல் மட்டத்திற்கு மேல் தொன்னூற்று நான்கு அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ள இம் மண்டபம், ஆகாயத்தில் அறுபத்து ஏழு அடி உயரத்தில் நிமிர்ந்து நின்று கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. அதன் உச்சியிலுள்ள ஒளிவிளக்கு நான்கு திசைகளிலும் ஓராயிரம் சுடர் (வத்தி) பிரகாசத்தை அள்ளித் தெளிக்கும் ஆற்றல் வாய்ந்தது. பதினைந்து மைல் தொலைவிற்குள் நடமாடும் மரக் கலங்கள் இதன் ஒளிவீச்சின் உதவியினல் தங்களது பயணத்திசையையும், இலக்கையும் உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.

காலத்தின் அழிவுக்கரங்களுக்கு ஆற்ருது சீர்குலேந்து விட்டன. இப்பட்டினங்களின் அங்கமாக கலங்கரை விளக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டதற்கான செய்திகள் இல்லே.

ஆனல் ஆங்கிலேயர் ஆற்காட்டு நவாபிடமிருந்து இந்தப் பகுதியை 1792 இல் தானம் பெற்றபிறகு, தொண்டியிலும் பாம்பனிலும் கலங்கரை விளக்கங்களேக் கட்டுவித்தனர். அந்நாளில் இவை டச்சு, ஆங்கில வர்த்தகர்களின் முக்கிய வர்த்தகத் தொடர்பு நிலேயங்களாகக் கருதப்பட்டு வந்தன. எனினும் தவிர்க்க இயலாத காரணங்களினல் தொண்டியில் இயங்கிய கலங்கரை விளக்கம் தொடர்ந்து செயல்படவில்லே. அதேவேளே பாம்பனில் உள்ளது இன்றளவும் செம்மையாகச் செயல்பட்டுவருகிறது.

பாம்பன் தீவின் வடமேற்கு மூலேயில் சிதைந்து போன சேதுபதிகளது கோட்டைக்கு அண்மையில் இந்தக் கலங்கரை விளக்கம் 1846இல் அமைக்கப்பட்டது. கடல் மட்டத்திற்கு மேல் தொன்னூற்று நான்கு அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ள இம் மண்டபம், ஆகாயத்தில் அறுபத்து ஏழு அடி உயரத்தில் நிமிர்ந்து நின்று கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. அதன் உச்சியிலுள்ள ஒளிவிளக்கு நான்கு திசைகளிலும் ஓராயிரம் சுடர் (வத்தி) பிரகாசத்தை அள்ளித் தெளிக்கும் ஆற்றல் வாய்ந்தது. பதினைந்து மைல் தொலேவிற்குள் நடமாடும் மரக் கலங்கள் இதன் ஒளிவீச்சின் உதவியினல் தங்களது பயணத்திசையையும், இலக்கையும் உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.

விஜய நகரப் பேரரசில் மிகுந்த அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த 'தும்பிச்சிகள்' கீழக்கரை மாரியூர், காரையூர் கோயில் திருப்பணிகளைத் தொடர்ந்ததற்கான கல்வெட்டுக்கள் உள்ளன. ஆனால் நாளடைவில் நாயக்க அரசியலில் எழுந்த வெறுப்புக் காரணமாக பரமக்குடி தும்பிச்சி நாயக்கர் மதுரைப் பிரதிநிதியுடன் பகைமை கொண்டார். சிறந்த போர் வீரரும் அரசியல் அறிஞருமான தும்பிச்சியை ஒழிப்பதற்காக 1564இல் மதுரைப் படையொன்று பரமக்குடியை நோக்கிப் புறப்பட்டது. அப்படை பரமக்குடி கோட்டையை அடைவதற்கு முன்னதாகவே, அதனை வழிமறித்து போரிட்டு அழித்தார் தும்பிச்சி நாயக்கர். மதுரைத்தளபதி பெத்தகேசவப்பா போரில் கொல்லப்பட்டார். மதுரை அரசுக்கு ஏற்பட்ட இந்தக் களங்கத்தைத் துடைப்பதற்கு மற்றுமொரு பெரும்படை பரமக்குடிக்கு அனுப்பப் பட்டது. பரமக்குடிக்குத் தெற்கே நடைபெற்ற போரில் தும்பிச்சி நாயக்கர் தோல்வியுற்றார். பின்னர் சிரச்சேதம் செய்யப் பட்டார். பரமக்குடி பாளையத்தின் தனித்தன்மையும் கலைந்தது.

ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டு காலம், தன்னரசு போலத் திகழ்ந்த தும்பிச்சி நாயக்கர்களது சிறப்பான ஆட்சியின்பொழுது மதுரையில் குடியேறிய பட்டுநூல் காரர்களின் சில குடும்பத்தினர் பரம்க்குடியிலும் குடியேறினர். சேதுநாட்டின் ஒரு பகுதியான பரமக்குடியிலும் பிறகு இராமநாதபுரத்திலும் இந்த மக்கள் நிலை கொண்டதால் அவர்கள் தங்களது பெயர்களுடன் கொடுவா, சேனதி, கும்பா, கஸ்தூரி, கெட்டல், தொகுலுவா, கிதுவா, ஏழை, ஜவுளி, துடுகுச்சி,

சின்னக்காவடி, அம்பலம், நாட்டாண்மை, சிலந்தி. நீலம், தஸ்மா, வானுல், பழிஞ்சி, சுத்து, தெள்ளு கொண்டா, சலகவா, உமாபதி, வைத்தியம், ராணி லோகந்தா, ராமியா, அன்னு, புளியடி, கந்தாள்ளு குட்டுவா. மல்லி என்ற சொற்களை இணைத்துக் கொண்டதுபோல் சேதுபதி என்ற விருதியையும் இவர்கள் சேர்த்து வழங்கினர். பட்டுநூல் கலையில் வல்ல இந்தப் பாட்டாளிகளைப் பற்றிய சில விபரங்கள் கிழக்கு இந்தியக் கம்பெனியாரது பதினெட்டாவது நூற்றுண்டு ஆவணங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

1793 இல் சேகரிக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி பரமக்குடி 'பட்டுநூல்காரர்'களிடம் (தற்போது செளராஷ்டிரா சமூகத்தினர்எனவழங்கபபடுவர்களிடம்)அறுநூறு தறிகள் இருந்திருக்கின்றன. மற்றும் கைக்கோளர்களும் சோனக லெப்பைகளும் எழுபது தறிகள் போட்டிருந்தாலும் 'பட்டுநூல்காரர்கள்' மட்டுமே சிறப்பான துணிவகைகளை உற்பத்தி செய்தனர். பெரும்பாலும் அன்றைய காலக்கட்டத்தில் 'சாலாம்பூர்' என வழங்கப்பட்ட சாதாரண 'லாங்க் கிளாத்', நீளமான துணிகளாகவும், வேட்டிகளாகவும் சேலைகளாகவும் பயன் படுத்திக்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டன.

பிற நெசவாசளர்கள் இத்தகைய முறையில் துணி நெய்து கொண்டிருந்தபோது, பரமக்குடி பட்டுநூல் காரர்கள், ஆங்கிலேயர், பிரஞ்சுக்காரர், டச்சுக்காரர் போன்ற மேனுட்டார் விரும்பி வாங்கக்கூடிய மஸ்லின் **(Muslin)** துர்பு, **(Turbu)** பூபேலா, **(Bubelas)** தொரியாஸ் **(Dorias)** காம்பிரிக், **(Cambric)** விரிப்புகள், கைக்குட்டைகள் மற்றும் வெளிநாட்டார் விரும்பி

அணியும் அனைத்து வகைத் துணிகளையும் உற்பத்தி செய்து கொடுத்தார்கள்.

அவர்களது தறியொன்றுக்கு நான்கு பணமும், துணிகளை வாங்குகிற இடைத்தரகரும், வியாபாரியும் 1/8 பணமும் இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்குத் தீர்வையாகச் செலுத்தி வந்தனர். அத்துடன் பரமக்குடியில் உள்ள தறிகளில் 132 தறிகள் சேது மன்னர்களது 'ஆர்டர்களை' நிறைவேற்றும் ஒப்பந்தத் தறிகளாக இருந்தன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை பரங்கிப்பேட்டை, புதுச்சேரி கல்கத்தா போன்ற இடங்களுக்கு சேதுபதி மன்னர்கள் அனுப்பிவைத்து நல்ல ஊதியம் பெற்றுவந்ததை ஆங்கிலகிழக்கிந்தியக் கம்பெனியார் மிகுந்த பொறுமையுடன் கவனித்து வந்ததாக செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

கடந்த இருநூறு ஆண்டுகளில், தமிழகத்தில் கைத்தறி துணி உற்பத்தியில் சிறந்து விளங்கிவரும் குறிப்பிட்ட ஒரு சில மையங்களில் ஒன்றாக பரமக்குடி திகழ்ந்து வருகிறது. இங்கு நிலையாகத் தங்கிவிட்ட பட்டுநூல் காரர்களது உழைப்பும் உத்வேகமுந்தான் இவற்றிற்குக் காரணம் என்றால் மிகையில்லை.

பரமக்குடியில் தற்போது 7300 தறிகள் உள்ளன. அவற்றில் 2000 ஜரிகை ஜரஸ் தறிகளும், 150 அசல் பட்டுத் தறிகளும் போக எஞ்சியவை பருத்தி மற்றும் பம்பர் ரகத்தறிகளாகும். பட்டுத்தறிக்கென்றே தனியாக ஒரு சொஸைட்டி உள்ளது. சொந்தத்தில் தறி இல்லாதவர்களுக்கென 'இன்டஸ்டிரியல் சொஸைட்டி, ஒன்றை அரசு அமைத்துக்கொடுத்துள்ளது. ஆண்டுக்கு

ரூபாய் ஐந்து கோடி அளவுக்கு துணி உற்பத்தியாவதும் கூலியாக மட்டுமே இரண்டுகோடி செலவிடப்படுவதும் பரமக்குடியில் இத்தொழில் வளர்ச்சியின் மேன்மையைக் காட்டுவதாக உள்ளது.

O

# இராஜசிங்க மங்கலம்

கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் வளமிக்க நஞ்சையும் புஞ்சையும் நிறைந்த ஊர். பத்தாம் நூற்றாண்டு துவக்கத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மூன்றாவது ராஜசிம்ம பாண்டியனது பெயரால் இந்த 'மங்கலம்' பெயர் பெற்று இருத்தல்வேண்டும். அந்த மன்னன் அமைத்த பெருங்குளத்தின் கீழ்ப்பகுதியில் இந்த ஊர் உருவானதை அவனது மெய்க்கீர்த்தியொன்று

''உலப்பிலோத வொலிகடல்போல் ஒருவரு
மூன்னந்தானமைத்த
இராச சிங்கபெருங்குளக் கீழ்ச்சூழுநகரில்''

என்று தெரிவிக்கிறது. மற்றுமொரு கல்வெட்டு இவ்வூர் பாண்டியரது வரகுண வளநாட்டில் உள்ள பிரமதேயம் எனக் குறிப்பிடுகின்றது. வறட்சியும் பற்றுக்குறையும் மக்களை வாட்டாமல் இருப்பதற்காகவே இராஜசிம்மன் இந்தப் பெருங்குளத்தை உருவாக்கி இருத்தல் வேண்டும். அவனது முற்போக்

கான திட்டத்தினுல் இந்த ஊர் சேதுநாட்டின் நெற் களஞ்சியமாக இன்றுவரை நிலைத்து விளங்கிவருகிறது.

கி.பி.1170இல் பாண்டியஇளவல்களுக்கிடையில்எழுந்த பதவிப் பூசலின் பொழுது பராக்கிரம பாண்டியனை ஆதரித்துப் புறப்பட்டு வந்த இலங்கைப் படைக்கும் குலசேகரனுக்கும் இடையே நடந்த பலபோர்களின் பொழுது இந்தப் பெருங்குளம் பாதிக்கப்பட்டதென் றும், பின்னர் அதனை இலங்கைத் தளபதி தண்ட நாயகன் செம்மை செய்து அமைத்தான் என இலங்கை யின் 'மகாவம்சம்' கூறுகிறது.

சேதுபதிகளின் ஆட்சியின் பொழுது இந்த நீர்த்தேக் கத்தை நன்ருக அமைத்து, விவசாயத்திற்குத் தேவை யான நீரை தேக்கத்திலிருந்து வெளிவிடுதற்கு நாற்பத் தெட்டு மடைவாய்கள் நிர்மாணிக்கப்பட்டன. இதனுல் 'நாரை பறக்காத நாற்பத்தெட்டு பெருமடைக் கண்மாய்' என இப்பகுதி மக்கள் பேச்சு வழக்கில் இருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

கி. பி. 1710-ஆம் வரை ஆட்சி செய்த விஜயரகுநாத சேதுபதி இங்கு ஒரு கோட்டையும் அமைத்தார். அழி வுற்ற அக்கோட்டையின் கீழ்பகுதி இன்றைக்கும் கீழக் கோட்டை என வழங்கப்பட்டு மறக்குடி மக்களது குடியிருப்பாக இருந்து வருகிறது. செழுமைச் சிறப்பு மிக்க இந்த ஊரைத் தன்மீது ''தளசிங்க மாலை'' பாடி வந்த அழகிய சிற்றம்பலக் கவிராயருக்கு திருமலை ரகுநாதசேதுபதி தானமாக வழங்கினுர்.

ஆனுல், என்ன காரணத்தாலோ இக்கிராமத்தை மீண்டும் சேதுபதி மன்னரிடம் கவிராயர்

ஒப்படைத்தார். அதனை மன்னர் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வழங்கிவிட்டு, கவிராயருக்கு நாகரத்தினபள்ளம், கொத்தமங்கலம், சேகனூபட்டு, நாரதபள்ளம், பிள்ளையார்பட்டி, மறவனேந்தல் ஆகிய கிராமங்களைத் தானமாக வழங்கினார். இந்த சேதுபதியின் பெயரால் 'ரகுநாதமடை' என்ற ஒருமடைவாய் ராஜசிங்கமங்கலம் கண்மாயில் உள்ளது.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வெடித்த இராமநாதபுரம் சீமைப் புரட்சியில் இந்த ஊர் மக்கள் சிறப்பு பங்குகொண்டனர். வெள்ளைப் பரங்கிகளை எதிர்த்து வீர முழக்கமிட்ட முத்துராமலிங்க சேதுபதி, முத்துக் கருப்பத்தேவர், மருதுபாண்டியர் ஆகியோரது விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து இந்த ஊர் மக்களும் கிளர்ந்து எழுந்தனர்.

ஆனால்...
வில்லின் குறியையும், வாளின் வீச்சையும் பரங்கிகளது துப்பாக்கியும் வெடி மருந்தும் அழித்து முறித்தன. மிருகத்தனமான அடக்குமுறையினால் மக்களது கிளர்ச்சி மாய்ந்து மறைந்தது. வீர இளைஞனை குமாரத்தேவன், அவனது நிறையைவிடப் பல மடங்கு பாரமுள்ள இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டான்.

மற்றுமொரு தலைவரான ஜகந்நாத ஐயர் என்பவருக்கு 1000 கசையடித் தண்டனை வழங்கப்பட்டது. அவரது சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன. அவரும் அவரது தோழர்களும் திரும்பிவர இயலாத தொலைவிற்கு கடலில் நாடு கடத்தப்பட்டனர். இத்தகைய தண்டனைகளை ஈவு இரக்கமில்லாமல் 1801

செப்டம்பர் அக்டோபர் வாக்கில் நிறைவேற்றியவன் கர்னல் மில்லர் என்பவனுகும்.

O

# மறவர் சீமையின் மகுடங்கள்

வீரத்தின் விளைநிலமான மறவர் சீமையின் மகுடங்களாக விளங்குவது அவர்களது அரண்கள். மாற்ருருக்கு மண்டியிடாத அவர்களது மனப்பாங்கை வெளியிடும் வகையில் மண்ணுலும் கல்லாலும் அமைக்கப்படும் இந்தக் கோட்டைகள் மக்களது மானங்காக்கும் மகத்தான சின்னங்களாக கடந்த காலங்களில் கருதப்பட்டு வந்தன.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பதிஞன்காம் நூற்ருண்டில் பிற்காலப் பேரரசு நிலை குலைந்தவுடன், ஆங்காங்குள்ள வேளிர்களும், குறுநில மன்னர்களும் வலிமை மிக்கவர்களாக விளங்கினர். அப்போதைய குழப்பமான அரசியல் சூழ்நிலையும் அவர்களது தன்னிச்சையான போக்கிற்குத் துணை நின்றன. இதனுல் அவர்கள் ஆங்காங்கு தங்கள் அதிகார வரம்பை நிலைநாட்ட சிறுசிறு கோட்டைகளை அமைத்து சிற்றரசர்கள் போல வாழ்ந்தனர். அவர்களைச் சார்ந்த மக்களும் அவர்களுக்கு ஆட்பட்டவர்களாக இருந்தனர். பதினறு பதினேழாம் நூற்ருண்டுகளில் மறவர் சீமையின் அதிபதியாக விளங்கிய இராமநாதபுரம் சேதுபதி

மன்னர்கள், வடுகர், பரங்கியர் ஆகியோரது ஆட்சி யினின்றும் தங்களை உயர்த்திக் கொள்ள பல இடங்களில் புதிய கோட்டைகளை அமைத்து வலுப் படுத்தினர். இந்தக் காரணங்களினால் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத முறையில் கோட்டை களின் எண்ணிக்கை இங்கு அதிகமாக இருந்தன. ஆனால், அனைத்தையும் கி. பி. 1801இல் இடித்துத் தரைமட்டமாக்கும்படி கிழக்கிந்தியக் கம்பெனி யார் ஆணையிட்டு செயல் படுத்தவும் செய்தனர். அத்தகைய கோட்டைகளின் இடிபாடுகள் சிலவற்றை கமுதி, இராமநாதபுரம், சிவகங்கை, திருப்புத்தூர் ஆகிய ஊர்களில் இன்றும் காணலாம். ஏனைய ஊர்களில் அவற்றின் பெயர்களில் தான் 'கோட்டை' இருந்து வருகின்றன.

## இராமநாதபுரம் வட்டம்

இராமநாதபுரம் கோட்டை
சூரன் கோட்டை
சக்கரக் கோட்டை
அத்திஊத்து கோட்டை
சித்தார் கோட்டை
குதக் கோட்டை
திருப்புல்லாணிக் கோட்டை

## முதுகுளத்தூர் வட்டம்

ஆலம்பக் கோட்டை
கணக்கன் கோட்டை

கொக்கரன் கோட்டை
செங் கோட்டை
சோணைப்பிரியான் கோட்டை
திருமாலுகந்தான் கோட்டை
பெரியகூரான் கோட்டை
மாணிக்கநாதன் கோட்டை
வேந்தர் கோட்டை

## கமுதி வட்டம்

கீழமுடி மன்னர் கோட்டை
மேலமுடி மன்னர் கோட்டை
கமுதி கோட்டை

## அருப்புக்கோட்டை வட்டம்

அருப்புக் கோட்டை
கீழப்புலியாண்டார் கோட்டை
பாப்பனம் சக்கரக் கோட்டை
மன்னூர் கோட்டை

## சாத்தூர் வட்டம்

எதிர் கோட்டை
சங்கரக் கோட்டை
மன்னர் கோட்டை
வெம்பக் கோட்டை

## விருதுநகர் வட்டம்

செங் கோட்டை
புதுக் கோட்டை
பில்லலக் கோட்டை

## பரமக்குடி வட்டம்

புகலூர் கோட்டை
காமன் கோட்டை
கீழப்புதுக் கோட்டை
கீழக் கோட்டை
குமுக் கோட்டை
சங்கன் கோட்டை
சிரகிக் கோட்டை
தென்னவன் புதுக்கோட்டை

## இளையான்குடி வட்டம்

அரியான் கோட்டை
ஆரம்பக் கோட்டை
கலங்காதான் கோட்டை
தடுத்தலான் கோட்டை
புதுக் கோட்டை

## சிவகங்கை வட்டம்

சிவகங்கை கோட்டை
அலவாக் கோட்டை

ஏனாதிக் கோட்டை
கிருங்காக் கோட்டை
சோழன் கோட்டை
காளையார்கோவில் கோட்டை
செய்யான் கோட்டை
தேவன் கோட்டை
நாட்டரசன் கோட்டை
நாலு கோட்டை
புதுக்கோட்டை
புள்ளுக்கோட்டை
பெரியகோட்டை
மாடக்கோட்டை

## மானாமதுரை வட்டம்

மாவலி கோட்டை
திருப்புவனம் கோட்டை

## திருப்புத்தூர் வட்டம்

திருப்புத்தூர் கோட்டை
அரளிக்கோட்டை
குறிஞ்சாலக்கோட்டை
சத்ருசங்காரக் கோட்டை
சோணார் கோட்டை
நடுவிக்கோட்டை
வெம்பக்கோட்டை
பட்டமங்கலம் கோட்டை

## காரைக்குடி வட்டம்

சாக்கோட்டை
செக்காலை கோட்டை
விசாலயன் கோட்டை

## தேவகோட்டை வட்டம்

கண்ணன் கோட்டை
குருந்தனக் கோட்டை
கொடிக்கோட்டை
சோனேரிக் கோட்டை
எழுவன் கோட்டை
சாத்திக் கோட்டை
திடக்கோட்டை
திருப்பாக்கோட்டை
புதுக்கோட்டை
மாடக்கோட்டை
மாளமுதிக் கோட்டை
அனுமந்தக்குடி கோட்டை

## திருவாடானை வட்டம்

அஞ்சு கோட்டை
ஆனையார் கோட்டை
அழகர்தேவன் கோட்டை
ஆறுமுகக் கோட்டை
ஓயிககோட்டை
சாத்தணிக் கோட்டை
சிறுமலைக்கோட்டை

கீழக்கோட்டை
கொத்தியார் கோட்டை
அடந்தனக் கோட்டை
அன்னிக் கோட்டை
அவத்தளிக் கோட்டை
உறுதிக் கோட்டை
ஏறக்கோட்டை
ராணிக்கோட்டை
செட்டிக் கோட்டை
திட்டுக் கோட்டை
திருப்பாக்கோட்டை
பழையன் கோட்டை
பொன்னளிக் கோட்டை
மாதவனிக் கோட்டை
மண்டலக் கோட்டை
மொன்னுக் கோட்டை
தும்படைக்கா கோட்டை
பொட்டக் கோட்டை
ஆறுமுகக் கோட்டை
ஓரியூர் கோட்டை
ராஜசிங்க மங்கலம் கோட்டை

O

# செப்பேட்டுச் செய்திகள்

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நாட்டின் வரலாற்றிற்குப் பேருதவி அளிக்கும் அடிப்படை ஆதாரங்களாகும். மக்களிடமிருந்து அரசாங்கம் பெற்றவரிகள்,

கோயில் அலுவலர்களின் தனித்தனி வேலைகள், கோயிலைச் சார்ந்த நகைகள், ஆஸ்திகள் முதலியவற்றின் விவரங்கள் காணப்படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட சில முக்கியச் செப்பேடுகள் வருமாறு:-

1 மதுரை மன்னர் திருமலையும் சேதுவேந்தர் முத்துராமலிங்க துரையும் பள்ளி மடத்தில் சந்தித்த பொழுது பளுத்தாண்டி குப்பச்சி அம்பலகாரனுக்கு செப்புப்பட்டயம் ஒன்று வழங்கிச் சிறப்பித்தனர்.

2 இராமநாதபுரம் மன்னர் தளவாய் சேதுபதி இராமேஸ்வரம் அறங் காவலராக இருந்த இராமநாத பண்டாரத்திற்கு, இராமேஸ்வரத்தில் குற்றம் புரிகிறவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கி 1609இல் அதிகாரம் வழங்கினார்.

3 இராமேஸ்வரம் ஆலயத்திற்கு மருதங்கநல்லூர் கிராமத்தை சர்வ மானியமாக இராமநாதபுரம் மன்னர் தளவாய் சேதுபதி 1616 இல் வழங்கினார்.

4 இராமேஸ்வரம் ஆலயத்திற்கு எத்தனை வகையான காணிக்கைகள், திரவியங்கள் தானமாக வந்தாலும் அவற்றைத் தவிர்த்து, தம்மால் கோவிலுக்கு வழங்கப் பட்டிருக்கும் சொந்த கிராமங்களின் வருவாயைக் கொண்டு, கட்டளைகளை நடப்பித்து வர இராமநாதபுரம் மன்னர் தளவாய் சேதுபதி இராமநாத பண்டாரத்திற்கு கட்டளையிட்டு 1627இல் பட்டயம் கொடுத்தார்.

5. இராமேஸ்வரம் மராட்டிய பிராம்மண சங்கர குருக்கள் மற்றும் ஏனையோர்க்கும் கி. பி. 1659 இல் இராமநாதபுரம் ரகுநாத சேதுபதி நிலக் கொடை வழங்கினர்.

6 இராமநாதபுரம் மாரிதுர்க்கை அம்மனுக்கு நித்திய கட்டளை அபிஷேகம் வகையருக்களுக்கு 1669இல் அல்லிக்குளம் கிராமத்தை சர்வமானிய மாக வழங்கி அந்தக் கோயில் பூசாரிக்கு ரகுநாத திருமலை சேதுபதி பட்டம் வழங்கினர்.

7 பெருங்கரை சொக்கநாத சுவாமி கோயிலுக்கு கொத்தங்குளம் கிராமத்தை இராமநாதபுரம் மன்னர் திருமலை சேதுபதி 1670இல் சர்வ மானியமாக வழங்கினர்.

8 இராமேஸ்வரம் ரகுநாத குருக்களை, இராமேஸ் வரம் ஆலயத்திற்கு முதன்மை குருக்களாக ஏற்படுத்தி, தண்டிகை பட்டுக்குடை, ரெட்டைத் தீவட்டி, உபய சாமரம் முதலிய சிறப்புக்களை இராமநாதபுரம் மன்னர் திருமலை சேதுபதி காத்த தேவரவர்கள் 1680 இல் வழங்கினர்.

9 எழுவாபுரி ஈஸ்வரருக்கு அரிசிலாற்றுப் பாய்ச் சலில் புதுக்கோட்டை, கள்ளிக்குடி இடையன் வயல் கிராமங்களை 1685இல் இராமநாதபுரம் மன்னர் கிழவன் சேதுபதி தானமாக வழகினர்.

10 ராஜசிங்க மங்கலம் சிறுகவயலுக்கும் புல்ல மடைக்கும் தெற்கு, மேற்கு கிழக்கில் உள்ள நான்கு மடைகளுக்கும் எவ்வளவு நிலமுண்டோ

அவ்வளவு நிலத்தையும் இராமேஸ்வரம் இமரா நாதசுவாமிக்கு, இராமநாதபுரம் மன்னர் ரெகுநாத சேதுபதி சர்வ மான்யமாக வழங்கி 1687இல் கட்டளையிட்டார்.

11 கீழக்கரை மீனாட்சி சொக்கநாதர் கோவில் தானிகர் இராமலிங்க குருக்களுக்கு கீழக்கரை துறைமுகத்துப் பேட்டையில் சில சுவந்திரங்களை இராமநாதபுரம் மன்னர் ரகுநாத திருமலை சேதுபதி 1689 இல் வழங்கினார்.

12 திருப்புல்லாணி தெய்வச் சிலைப்பெருமாள் ஆலயத் திற்கு தமக்கு உரிமையுள்ள மன்னர் முத்துச் சலாபத்தில் கலந்து கொண்டு இராமநாதபுரம் சேதுபதி காத்த தேவர் குளிக்க 1697 இல் முத்துக் குளிகை அனுமதி வழங்கினார்.

13 பதினான்கு அந்தணக் குடும்பங்களை அத்தியூத்து கிராமத்தில் குடியமர்த்தி மனை மற்றும் விளை நிலங்களை இராமநாதபுரம் மன்னர் முத்து விஜய ரகுநாத சேதுபதி 1713இல் தானமாக வழங்கினார்.

14 இராமேஸ்வரம் பர்வதவர்த்தினி அம்மன் அறைக்கட்டளைக்கு சின்னத் தொண்டி, நரிக்குடி புதுக்கண்மாய் உள்ளிட்ட நிலங்களை இராமநாத புரம் மன்னர் விஜய ரகுநாத சேதுபதி 1715 இல் தானம் வழங்கினார்.

15 திருப்புல்லாணி, காவல் திட்டு, முப்பனை, கோரைகுட்டம் காவிரிஏந்தல், கோவிந்த னேந்தல், காரையடி முறிவு, வெள்ளா.

குத்தக்கோட்டை, உத்தரவை, மேதலைஓடை, சாமநத்தம், திணைக்குளம், தம்பிராட்டித்தரவை இருவரை வென்றான் பட்டணம் ஆகிய கிராமங் களை இராமநாதபுரம் மன்னர் விஜய ரகுநாத சேதுபதி திருப்புல்லாணி கோயிலுக்கு 1728இல் சர்வமானியமாக வழங்கினார்.

16 இராமேஸ்வரம் கோவில் சபாபதி கட்டளைக்கு குளத்தூர் கிராமத்தை இராமநாதபுரம் மன்னர் குமாரமுத்து விஜய ரகுநாத சேதுபதி 1733 இல் தானமாக வழங்கினார்.

17 பழனிமலை வேலாயுதசாமி சன்னதியில் விளார் பூஜை கட்டளைக்கு கொள்ளனூர், கங்கை கொண்டான் கிராமங்களை இராமநாதபுரம் மன்னர் குமார விஜய ரகுநாத சேதுபதி காத்த தேவர் அவர்கள் 1734 இல் தானமாக வழங்கினார்.

18 ஏர்வாடி பள்ளி வாசலுக்கு பெரிய மாயாகுளம் கிராமத்தை இராமநாதபுரம் முத்துக் குமார விஜய ரகுநாத சேதுபதி 1739 இல் தானமாக வழங்கினார்.

19 இராமநாதபுரம் நகர் புனித ஈசா சாஹிபின் அடக்க இடத்திற்கு வருகை தருகின்ற பயணி களுக்கு உணவு வழங்குவதற்காக முதுகுளத்தூர் வட்டம் கிழவனேரி கிராமத்தை சர்வமானி யமாக இராமநாதபுரம் சிவகுமார முத்து விஜய ரகுநாத சேதுபதி மன்னர் 1744இல் வழங்கினார்.

20 இராமேஸ்வரம் குருக்கள்மார் சபையாருக்கும் நைனக்கள் ஆகிய மகா ஜனங்களுக்கும்

இராமேஸ்வரம் லஷ்மண தீர்த்த பரிக்ஷை விவகாரமாக இராமநாதபுரம் கோட்டைப் பிள்ளையார் கோவிலில் அலிப்புலிராவுத்தர் உட்பட்ட பலநடுவர்களைக் கொண்ட குழு முந்தைய முந்நூற்றுப் பதினேழு ஆண்டு கால ஆவணங்களைப் பார்வையிட்டு 1745இல் தீர்ப்பு வழங்கினர்.

21 இராமேஸ்வரம் ஆபில் காபில் பள்ளிவாசல் தர்மத்துக்கு இராமநாதபுரம் மன்னர் முத்துக்குமார விஜய ரகுநாத சேதுபதி 1745இல் புதுக்குளம் என்ற கிராமத்தை தானமாக வழங்கினர்,

22 இராஜசிங்கமங்கலம் சேகரம் தென்கரை வடகரை கிராமங்களை இராமநாதபுரம் மன்னர் முத்து விஜய ரகுநாத சேதுபதி 1763 இல் பிரபந்தம் பாடிய புலமை மன்னுரெட்டிகளுக்கு சர்வ மானியமாக வழங்கினர்.

23 இராமேஸ்வரத்திற்கு இராமநாதபுரம் சேதுபதிகள் யாத்திரை செய்யும் பொழுது அவர்களுக்கு சகல வைதீகக் காரியங்களையும் செய்யும் உரிமையை இராமேஸ்வரம் ரகுநாத குருக்களுக்கு 1763இல் இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி காத்த தேவரவர்கள் வழங்கினர்.

O

# கல் வெட்டுக்களில் கண்ட செய்திகள்

1 ஒன்பதாம் நூற்றுண்டில் பள்ளிமடம் பகுதியில் பயன்படுத்தப் பட்ட நாழியின்பெயர் சோழாந் தகநாழி என்பது. சோழாந்தகன் என்பது வீரபாண்டிய மன்னனது பெயர்

-ஏ. ஆர். 423 - 1914

2 திருப்புல்லாணி தெய்வச்சிலைப் பெருமாள் கோயிலில் நந்தாவிளக்கு தர்மத்திற்காக நாள் ஒன்றிற்கு ஆழாக்கு நெய் வழங்குவதற்காக திருப்புல்லாணி இடையரிடம் மிழலைக்கூற்றம் கூத்தன் திருமங்கை ஆழ்வான் என்பவர் கொண்டுவிட்டது எழுபது ஆடுகள். (கிபி. 1082)

-ஏ. ஆர். 107-1903

3 திருப்புத்தூர் ஆலய அறங்காவலர்கள் அனை வரும் முக்கியமான காரியமாக மதுரை சென்று மன்னரைச் சந்தித்துப் பேச புறப்பட்டனர். அவர்களது வழிச் செலவிற்காக கோயிலுக்குச் சொந்தமான காணி ஒன்றிற்காக ஒரு குறிப் பிட்ட தொகையைப் பெற்றுக் கொண்டு அந்த காணிக்கு வரிவசூலில் இருந்து விலக்கு அளித்தனர். இந்த நிகழ்ச்சி கிபி. 1198 இல் நிகழ்ந்தது.

ஏ.ஆர். 103 - 1908

4 கீழ்ச் செம்பிநாட்டு பவித்திரமாணிக்கப் பட்டி னத்தின் கீழ்பால் அமைந்திருந்த சோனக சாமந்தரது பள்ளிவாசலுக்கு ஆம்புத்தூர்

முதலான கிராமங்களை மாறவர்மன் சுந்தர பாண்டியன் கிபி. 1224 இல் தானமாக வழங்க உத்தரவிட்டான்.

-ஏ. ஆர். 116 - 1903

5 கி.பி. 1218இல் தேவிபட்டினம் போக்கீஸ்வர முடைய நாயனுர் திருக்கோயில் நாளு தேசிக திருவாசலுக்கு வருகை தந்த பலநாட்டு வணிகர் குழுவினர், தேவிபட்டினத்திலும் ஏனைய துறைமுகங்களிலும் கொண்டு செல்லும் சிறுபடகிற்கு அரைப்பணமும், தோணிக்கு காற் பணமும், கலங்களில் ஏற்றப்படுகிற சரக்கு களின் கட்டு ஒன்றிற்கு அரைக் காற்பணமும் ஒரு ஆள் சுமைக்கு ஒரு மாப்பணமுமாகக் கொடுக்க இசைந்தது.

ஏ. ஆர். 119-1903

6 தீர்த்தாண்ட தானம் கோயில் முன்னர் குடி இருந்த பலநாட்டு வர்த்தகக் குழுக்களில் ஒரு பிரிவின்ரான அரபுநாட்டு குழுவினர் (அஞ்சு வண்ணத்தினர்) அந்தக் கோயில் திருப்பணிக்கு உதவ முன் வந்தனர். இந்த நிகழ்ச்சி கி.பி. 1269இல் நடந்தது.

-ஏ. ஆர். 598-1926

7 கி.பி. 1198 இல் அழகை மாநகரில் கூடிய பதினெட்டு மண்டலங்களின் அறங் காவலர்கள் அந்தப் பகுதியில் உள்ள தேவரடியார், அப் பகுதியில் உள்ள பல திருக்கோயில்களுக்கும் ஆற்றிய புனித சேவைக்காக, புதியதிருமேனிகள் செய்து வைத்து, புதிய பிரகாரங்கள் கட்டு வித்ததற்காக அவளுக்கும் அவளது குடும்பத்

தினருக்கும் திருக்கோயிலுக்கு வரும் பொழுது சங்கு ஊதி பறைமுழக்கிக் கொள்ளும் உரிமை வழங்கியது.

-ஏ. ஆர். 33-1924

8 வடமாநிலத்தினின்றும் வந்த அந்தண விதவை ஒருத்தியிடம் தகாத முறையில் திருப்புத்தூர் ஆலய மேலாளர் நடந்து கொண்டது பற்றி விசாரித்த கோயில் அறங்காவலர் குழு மதுரையில் உள்ள மன்னனது தீர்ப்பை நாடினர். (கி.பி. 1291)

-ஏ. ஆர். இ. 1909 Part II (28)

9 பிரான்மலே கோயிலில் அரிசி, பருப்பு முதலிய வைகளை அளப்பதற்கு 'திருநாவுக்கரசு நாழி' என்ற பெரும்படி பயன்படுத்தப் பட்டது. (கி.பி. 1273)

-ஏ. ஆர். 152-1903

10 கிழக்கு இராமநாதபுரம் பகுதியில் தொகுதியாக அமைந்த இருபத்து நான்கு ஊர்களில் உள்ள மேல் ஜாதிக்காரர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிவந்த ஒற்றுமைக் குறைவு ஒரு கட்டத்தில் பல உயிர்கள் பலியாவதற்கு காரணமாகி விட்டது. இந்நிலேயில் காங்கையராயன் என்ற அரசு அலுவலர் தலேயிட்டு அந்த சாதிப்பூசலேத் தீர்த்து வைத்தார், அவரது அறிவுரைப்படி பறையர்கள் மற்ற சாதிக்காரர்களது நன்மை தீமையான காரியங்களின் பொழுது பறை முழக்க வேண்டும். அதற்கு கூலியாக பறையர்கள்

பதக்கு நெல்லும் ஒரு கோழியும் பெறுவர் (கி.பி. 1376)

ஏ. ஆர். இ. 1924 Part II (34)

11 அழகாபுரி கோயிலைச் சுற்றி குடி இருந்து வருப வர்கள் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை, கோயிலில் விளக்கு வசதி செய்வதற்காக கோயில் அறங்காவலர்கள் தானம் வழங்கினர். (கி. பி. 1283)

-ஏ. ஆர். 109-1924

12 பதினான்காம் நூற்றாண்டில் கிராமச்சபையின் நிலச் சீர்திருத்ததை ஊக்குவித்த நிகழ்ச்சி ஒன்று. கரடுமுரடான சில நிலத்தை கிராம சபையினர் சற்று குறைவான விலைக்கு விற்ற துடன் அதற்கான தண்ணீர் தீர்வையையும் ரத்து செய்து உத்திரவிட்டனர். சிறிது காலத் திற்குப் பிறகு அதே நிலம் மீண்டும் விற்பனைக் குக் கொண்டு வரப்பட்டது. அதன் மதிப்பு அப்பொழுது பன்னிரண்டு மடங்கிற்கும் அதிக மாக இருந்தது. (கி. பி. 1320/1324)

-ஏ. ஆர் 15,16-1924

13 காளையார் கோயில் பகுதியில் உள்ள நிலங்களை அளப்பதற்கு பதின்மூன்றும் நூற்றாண்டில் சுந்தர பாண்டியன் கோல் என்ற அளவுகோல் பயன் படுத்தப் பட்டது.

-ஏ. ஆர். 577-1902

14 மதுரை சுல்தான்களது ஆட்சியில் கண்டதேவி கந்தப்பெருமாள் கோயில் தானத்தார், மதுரை ஆட்சியாளருக்கு சில உறுதிமொழிகளை கல்லில் வெட்டிக் கொடுத்துள்ளனர். அவற்றை நிறை வேற்றத் தவறினால் ''எங்களுக்குச் சத்துருவான மனிதருக்கு மீசை சிறைத்து, இவர்களுக்கு குடும்பமாக இருக்ககடவோ மெனவும் எங்களுடைய பெண்டு பிள்ளைகளை எங்களுக்குச் சத்துருவான மனிதருக்கு, வித்வான்கள், பாடகர் பரணர், புலவர் இவர்கள் பிடித்துக் கொண்டு போய் தானப்பொறி பொறித்து சிறு பசங்களுக்குக் குடுக்க கடவார்கள் என்றும்,. எங்கள் உருவத்தை பெண்உருவமாக வகுத்து, பின்னர் புலையர், பள்ளர், பறையர் மற்றும் உள்ள கீழ்சாதிகளும்...... இவர்கள் சிறுபசங்கள் காலில் கட்டி இழுத்துக் கொண்டு திரியக் கடவர்கள்'' என அக்கால சிறுமைச் செயலைச் சித்தரிக்கின்றது. (கி.பி. 1350)

-கண்டதேவி கல்வெட்டு

15 இந்த மாவட்டத்தின் தென் பகுதியில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஒரு மா நிலத்திற்கு மூன்று கலம் தானியம் தீர்வையாக அரசுக்கு அளக்கப்பட்டது. ஆனால் அதே காலத்தில் கோயில்களுக்கான நிலங்களுக்கு ஆறுகலம் தீர்வையாகப் பெறப்பட்டது.

ஏ. ஆர். 409-1914

16 கிழக்கரையில் இருந்த நினைத்ததை முடித்த பிள்ளையார் வழிபாட்டுச் செலவுகளுக்கும் கோயில் திருப்பணிக்கும் பயன்படுத்துவதற்காக,

அதே ஊரில் விற்கப்படுகின்ற 100முத்துக்களுக்கு கால்பணம் வீதம் மகமை வசூலிக்கப்பட்டது. (கி.பி. 1531)

ஏ. ஆர். 396-1907

17 இராமநாதபுரம் மன்னர் திருமலை சேதுபதி காத்த தேவர் அனுமந்தக்குடி பள்ளிவாசல் தருமத்திற்காக கி.பி. 1673இல் நிலக்கொடை வழங்கியது.

ஏ.ஆர். 280

18 திருவாடானை ஆலயத்திற்காக, அந்தப் பகுதியில் உள்ள ஒவ்வொரு ஊரிலிருந்தும், ஒருகாசும் ஒரு பணமும், ஒருகலம் நெல்லும் வழங்க வேண்டும் என 12-1-1636இல் இராமநாதபுரம் சேதுபதி மன்னரது கார்யஸ்தர் திருமலையான் என்பவர் ஆணையொன்று வழங்கினார்.

ஏ.ஆர். 433-1914

பதின்மூன்றாம் நூற்றாண்டில் காளையார் கோவிலில் பணியாற்றிய அரசு அலுவலர்களில் சிலர் (கல்வெட்டில் கண்டவாறு)

1. அரசரில் அஞ்சாத பாண்டியர்
2. அலைவில் அஞ்சாத பாண்டியர்
3. அழகிய சொக்கனார்
4. ஆதிப்பட்டத்து பல்லவராயன்
5. உருவநாராயண தேவன்
6. உடப்பிறப் பழகியார்
7. காணவினிய பாண்டிய தேவன் காளியங்கராய தலைக் கோலி

8. தவச் சக்கரவர்த்தி
9. தவமழகியார்
10. திசைவென்ற பாண்டியன்
11. பகைமதியாத பாண்டிய தேவன்
12. படி வழங்கு பாண்டியன்
13. முடி வழங்கு பாண்டியன்
14. நம்பி அதிகைமான் தேவன்
15. வழுதி சிங்க தேவன்
16. வீரவிச்சாதிர தேவன்
17. விசைய சிங்க தேவன்
18. தென்ன கங்க தேவன்

## முன்னாள் ஆலயத் திருமேனிகள்
(கல் வெட்டுக்களில் கண்டவாறு)

1. அருப்புக்கோட்டை - 1 அருந்தவஞ்செய்தநாச்சியார்
2 எனக்கு நல்ல பெருமாள்
3 குறள் மணீசுரமுடையார்
2. காளையார் கோவில் - 1 திருக்கானபேருடையநாயனார்
2 கொட்டத்து நாச்சியார்
3 சூரியப் பிள்ளையார்
3. குன்றக்குடி 1 திருமலையுடையதேனாற்று நாயகர்
2 தேனாற்று மாதேவர்
4. கொடுமளூர் 1 உத்தம பாண்டிய ஈசுவரம் உடையார்
5. கோவிலாங்குளம் - 1 குணஞானபரண எம்பெருமாள்
. கோயில் மாரியூர் - 1 பவளநிற வல்லி அம்மன்
67. திருப்புத்தூர் - 1 திருத்தளியாண்டநாயனார்
2 திருக்கற்றளிப் பாத்தரர்

| | |
|---|---|
| | 3 திருப்பள்ளியறை நாச்சியார் |
| | 4 திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார் |
| | 5 கூத்தாடு தேவர் |
| 8. திருவாடானை | - 1 ஆடானை நாயகர் |
| | 2 அன்பிற்பிரியாத அம்மன் |
| 9. பிரான்மலை | 1 திருக்கொடுங் குன்றமுடைய நாயனார் |
| 10 இராமேஸ்வரம் | 1 சேதுமாதவப்பெருமாள் |
| | 2 மலைவளர் காதலி |
| 11 திருப்புல்லாணி | 1 தெய்வச்சிலைப் பெருமாள் |

## திருக்கோயில்களில் இருந்த மடங்கள்

### (கல்வெட்டுக்களில் கண்டவாறு)

| | |
|---|---|
| 1 காளையார்கோவில் | - சுந்தர மூர்த்தி நாயனார் மடம் |
| 2 குன்றக்குடி | - ஞானியார் மடம் |
| 3 திருப்புத்தூர் | - 1 திருத்தொண்டர்தொகைமடம் |
| | 2 திருஞான சம்பந்தன் மடம் |
| 4 பள்ளி மடம் | - மகாவிரதினிகள்மடம் |

O

# கல்வெட்டுக்கள்

முத்தமிழ்க் காவலர்களான பாண்டியர்களது நாடாக பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை விளங்கியது இராமநாதபுரம் மாவட்டம். இம் மாவட்டத்தின் பல இடங்களில் பாண்டியப் பேரரசர்களது கல்வெட்டுக்கள் மட்டுமல்லாது சோழர்கள், மதுரைச் சுல்தான்கள், நாயக்கர்கள், வாணாதிராயர்கள், சேதுபதிகள் ஆகிய முடியுடை மன்னர் பலரது ஆட்சிக்கால கல்வெட்டுக்கள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில அரசினரால் இந்த நூற்றாண்டு துவக்கம் வரை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. பெரும் பாலான கல்வெட்டுக்கள் திருப்புத்தூர், திருத்தலியாண்ட நாயனார் திருக்கோயிலும், பிரான்மலை மங்கைபாகர் ஆலயத்திலும், ராமேஸ்வரம் இராமநாதசுவாமி ஆலயத்திலும் படி யெடுக்கப்பட்டுள்ளன.

எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொன்மையான சில கல்வெட்டுக்கள் எதிர்க்கோட்டை, பள்ளிமடம், திருச்சுழியல், குன்றக்குடி, திருப்புத்தூர், இராமேஸ்வரம் ஆகிய ஊர்களில் உள்ளன இவை இன்றைய தமிழின் தொன்மை வடிவமான வட்டெழுத்துக்களில் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இவை போன்றே புராதனமான கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் பெருங்கருணை, பிரான்மலை இராமேஸ்வரம், திருப்புத்தூர் ஆகிய ஊர்களில் உள்ளன. மேலும் பழமையான உலகமொழிகளான ஹிப்ருவிலும், அரபியிலும் அமைந்த கல்வெட்டுக்கள் பெரியபட்

டினத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.
இவை தவிர பாண்டியர்களில் காலத்தால் மிகவும் முற்பட்ட வரகுண பாண்டியன். மாறன் சடையன், வீரபாண்டியன் ஆகிய மன்னர்களது ஆட்சிக் கால கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. அவைகளும் இன்னும்பிற மன்னர்களது கல்வெட்டுக்களும் இந்த இந்த மாவட்டத்தில் எங்கெங்கு உள்ளன என்ற விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1, | வரகுணபாண்டியன் என்ற மாறன் சடையன் (கி.பி. 765-790) - | திருப்புத்தூர்<br>பள்ளிமடம் |
| 2. | பிக்ரபாண்டியன் (1180-90) - | தேவிபட்டினம்<br>திருப்புத்தூர் |
| 3. | இராஜராஜசோழன் (985-1013) - | திருப்புத்தூர்<br>திருச்சுழியல்<br>எதிர்க்கோட்டை |
| 4. | வீரபாண்டிய தேவன் (946-966) - | எதிர்க்கோட்டை<br>பள்ளிமடம்<br>காளையார்கோவில்<br>பெருங்கருணை<br>குன்றக்குடி<br>பிரான்மலை<br>திருப்புத்தூர் |
| 5. | முதலாவது குலோத்துங்க சோழன் (1070-1122) | கோவிலாங்குளம்<br>குன்றக்குடி<br>திருப்புத்தூர் |
| 6. | குலசேகர தேவ பாண்டியன் - | சோழபுரம்<br>கோவிலாங்குளம் |

| | | |
|---|---|---|
| 9. காரையூர் | - | செல்லப்பாபுரம் |
| 10. கீழக்கரை | - | கோதைமங்கலம் (அருந்தொகைமங்கலம்) |
| 11. குருவடிமிதி | - | ஜினேந்திரமங்கலம் |
| 12. குதக்கோட்டை | - | குத்தக்கோட்டை |
| 13. கூத்தகுடி | - | அதிசயபாண்டியநல்லூர் |
| 14. காளையார்கோவில் | - | தலையாலங்கானம் காலைப்பேர் |
| 15. கொடுமளூர் | - | உத்தமபாண்டியநல்லூர் |
| 16. சூடியூர் | - | சுடுவூர் |
| 17. சூரக்குடி | - | கூறைக்குடி |
| 18. சோழந்தூர் | - | முடிந்தரை வயல் |
| 19. சோழபுரம் | - | விக்ரமபாண்டீச்சுரம் |
| 20. தேவிபட்டினம் | - | ஸ்ரீவல்லபபட்டிணம் (உலகமாதேவிபட்டினம்) |
| 21 திருப்பாலைக்குடி | - | மானாபரணன்பட்டினம் |
| 22. நேமம் | - | நியமம் |
| 23. பள்ளிமடம் | - | பள்ளிப்படை |
| 24. பெரியபட்டினம் | - | பவித்திர மாணிக்க பட்டினம் |
| 25. பெருங்கருணை | - | கலிசேகரமங்கலம் |
| 26. பிரான்மலை | - | பறம்புமலை (திருக்கொடுங்குன்றம்) |
| 27. மகிபாலன்பட்டி | - | பூங்குன்றம் |
| 28. மரைக்காயர்பட்டினம் | - | ஹபீபுஅரசர்பட்டினம் |
| 29. மட்டியூர் | - | மட்டியூர் சிவபுரி |
| 30. மானாமதுரை | - | மானவீர மதுரை |
| 31. முததூர் | - | கோவிந்தராஜ சமூத்திரம் |
| 32. முத்துராமலிங்கபுரம் | - | செப்பேடுகொண்டான் |
| 33. முறையூர் | - | விக்கிரபாண்டிய நல்லூர் (கீர் சார்ந்த மங்கலம்) |

| | | |
|---|---|---|
| 34. ராஜகம்பீரம் | - | ராஜகம்பீரச் சதுர்வேதி மங்கலம் |
| 35. ராஜசிங்கமங்கலம் | - | ராஜசிம்மன்மங்கலம் |
| 36. தேத்தாங்கால் | - | தேற்ருன்கால் |
| 37. ஆனந்தூர் | - | .அவிகர சுந்தரனல்லூர் |
| 38. திருத்தங்கல் | - | திருத்தங்கால் |
| 39' ஆருவயல் | - | செம்பொன்மாரி |
| 40. இராமேஸ்வரம் | - | தேவைநகர் |
| 41. சாலைக்கிராமம் | - | குலோத்துங்க சோழ நல்லூர் |
| 42. பட்டமங்கலம் | - | பட்டத்தார் மங்கலம் |
| 43. இளையாத்தகுடி | - | குலசேகரபுரம் |

O

ஜீவனமாக கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம், அப்பொழுது உழவுத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் 100-க்கு 51 லிருந்து 70 பேராக உயர்ந்ததை அந்த நூற்றுண்டு தொழிற் புள்ளி விபரங்கள் காண்பிக் கின்றன. உழவுத் தொழிலுக்கும் பல இடர்ப்பாடு கள். பருவ மழை தவறியது. பாசன வசதி குறைவு வரிச்சுமை, மகசூலில் பங்கு என்ற பெயரில் கொள்ளை, நிலச்சுவான்தாரின் கொடுமைகள். மற்றும் தமிழ்ச் சமுதாயத்தில் வாழையடி வாழையாக வளர்ந்து மக்களிடையே முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் உருக்குலைத்து வந்த சாதிக் கொடுமைகள்.

இவைகளுக்கெல்லாம் சிகரமாக, சோணுடு சோறு டைத்து என புலவர்கள் போற்றிய சோற்றுக் களஞ்சியமான தஞ்சை மாவட்டத்திலும், அதனை ஒட்டிய பகுதிகளிலும் 1859, 1871, 1872ஆம் ஆண் டுகளில் சூறையாடிய புயலும், பிற மாநிலங்களில் 1875, 1876, 1895-இல் ஏற்பட்ட பெரும் பஞ்சங் களும் இந்திய மக்கட் சமுதாயத்தை சிதைத்து சின்னுபின்னமாக்கியது. இந்த காலக்கட்டத்தில் இரண்டு கோடிக்கும் மிகுதியான மக்களை பஞ்சங்கள் விழுங்கி ஏப்பமிட்டதாக அரசாங்க அறிக்கையில் குறிக்கப் பட்டிருக்கிறது. எஞ்சியிருந்தவர்களில் ஒரு பிரிவினர் பிறந்த நாட்டை விட்டே ஓடிப்பிழைக்க வேண்டிய கூலிகளாக மாறினர். அன்று பரங்கிகளின் பேச்சு வழக்கிற்கு வந்த பதம் தான் ''இந்தியக் கூலிகள்'' என்பது. நாடாண்ட பரம்பரை; நாகரீகத்தின் முன்னுேடிகள், நுண் கலைகளில் வல்ல வர்கள்; வேதமும்; வியாகரணமும் கண்டவர்கள்; விஞ்ஞானமும் மெய்ஞானமும் வளர்த்தவர்கள்; வானியலும் வேதியலும் அறிந்தவர்கள்; இவர்

களுக்கு வழங்கப்பட்ட விருதுதான் ''கூலிகள்'' இருளடைந்த நாடு என்று எவரோ சொன்னார். அந்த இழிவும் ஒருபெருமை எனஎண்ணி வாழ்ந்தஅடிமைநிலை.

அப்பொழுது ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளான கயானா. டிரினிடாடு, ஜமைக்கா, உகாண்டா, நேட்டால், மொரீசியஸ், இலங்கை, சரவாக், பிஜி, ஆகியவைகளில் மண்டிக்கிடந்த இயற்கை வளங்களை பெருக்குவதற்கு ஏராளமான மனித சக்தி தேவைப்பட்டது. குறிப்பாக கரும்பு, வாழை, கோக்கோ, ரப்பர், தேயிலை தோட்டங்களை அமைத்து காக்க கறுப்பர்களின் கடுமையான உழைப்பு இன்றியமையாததாக இருந்தது. மானமும், வீரமும் மடிந்து விட்ட காலை உயிரையும், உடலையும் வளர்ப்பதற்கு நம்மவர்கள் கடலையும் கடந்து அங்கெல்லாம் கூலிகளாகச் சென்றதில் வியப்பில்லைதான்.

காடு மேடுகளைத் திருத்திய கரங்கள் அவர்களுடையது. காலமெல்லாம் உழைத்து உருக்குலைந்தது அவர்களது மேனி. கிள்ளிய தேயிலைக் கொழுந்தைப் போல ஓய்வு ஒழிவு இல்லாமல் கரிந்து பொசுங்கியது அவர்களது வாழ்க்கை. குளிரிலும், பனியிலும், மழையிலும் நனைந்து மலைகளின் கொடு முடிகளிலும் காடுகளிலும் தேயிலையையும், ரப்பரையும் காத்து வளர்த்து இலங்கையின் தேசிய செல்வப் பெருக்கத்துக்கு உறுதுணையாக இருந்தவர்கள் இலங்கை இந்தியர்கள். நான்கு தலைமுறைகளாக அவர்கள் நல்கிய உழைப்பு சிந்திய கண்ணீர், வியர்வை, ரத்தம் இலங்கைத் தேயிலைக்கு உலகச் சந்தையில் உயர்ந்த நிலையையும் அன்னியச் செலாவணியையும் ஈட்டிக் கொடுத்திருப்பதை எவரும்மறுக்க முடியாது. என்றாலும் வரலாற்

றையும் பழமையையும் மறந்தபுதிய ஆளவந்தார்களின் கண்களை இலங்கை இந்தியரின் எளிய கோலம் உறுத்தியது. கள்ளத்தோணிகள், நாடற்றவர்கள் என எள்ளி நகையாடினர். பிறந்து வளர்ந்த பூமியில் இருந்து வாழக்கூட உரிமையில்லை என வாதாடினர். மூதாதையர் வந்த வழியில் மூட்டை கட்டிச் செல்வதுதான் முறை என முழங்கினர். உச்சிக்குச் செல்ல உதவிய ஏணியை உட்கார்ந்து கொண்டு உதைத்து எறிந்த கதை.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களை ஒரே அணியில், ஒரே குரலில், ஒரே குறிக்கோளில் நிலைத்து நிற்க்ச்செய்தன. சிங்கள ஆளவந்தார்களின் அரசியல் சிறுமையும் இன வெறியர்களின் இகழ்ச்சியும் இலங்கை இந்தியரின் கிளர்ச்சியை தடுத்துநிறுத்த இயலவில்லை. பல்லாண்டுகளாக புரையோடிய இந்தப் பிரச்சினைக்கு இந்திய அரசின் தலையீடு ஒரு வகையாக தீர்வு கண்டது. இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியும், இலங்கைப்பிரதமர் சிரீமாவோவும் டில்லியில் கைச்சாத்திட்ட 1964-ம் வருட ஒப்பந்தம்.

ஐந்து லட்சத்திற்கும் அதிகமான இலங்கைஇந்தியர்களை தமது குடிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க இந்திய அரசு இசைந்தது. இதனையொட்டி தென்னாட்டில், ஆந்திரம் கர்நாடகம், கேரளம், தமிழ் நாடுஆகிய மாநிலங்களில் மறு வாழ்வுத் திட்டங்களாக பல கோடி ரூபாய் முதலீட்டில் ரப்பர், காப்பி, தேயிலைத் தோட்டங்கள் துவக்கப்பெற்றுள்ளன. கூட்டுறவுத்துறையைச்சேர்ந்த நூற்பு ஆலைகள் பலவற்றில் பல லட்சம் ரூபாய்களை பங்குத் தொகையாக முதலீடு செய்து பயிற்சி, வேலை

வாய்ப்புத் திட்டத்திற்கு இந்திய அரசு வகைசெய்துள்ளது. மற்றும் சிறு தொழில்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கு சிறிய அளவில் கடன் வழங்கி உதவும் திட்டத்தையும் வகுத்துள்ளது. இதைப்போன்று தாயகம் திரும்புவோர்க்கு தமிழ்நாடு அரசுவிவசாயக் காணிகளையும், குடியிருப்புக் காணிகளையும் வழங்கி வருவதுடன் பலவிதமான சலுகைகளையும் வழங்கசட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இத்தகைய மறு வாழ்வு வசதிகளுக்காக இந்திய அரசையும் தமிழக அரசையும் தாயகம் திரும்பியோர் காலமெல்லாம் போற்ற கடமைப்பட்டிருக்கின்றனர். 1969-லிருந்து இதுவரை இந்தியாவிற்கு ஏறத்தாழ நான்கு லட்சம் பேர்திரும்பியிருக்கின்றனர்.

| ஆண்டு | குடும்பங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1966 | 338 | 3153 |
| 1967 | 655 | 5030 |
| 1968 | 998 | 3883 |
| 1969 | 2299 | 7200 |
| 1970 | 3189 | 11,103 |
| 1971 | 6596 | 26,802 |
| 1972 | 8304 | 33,977 |
| 1973 | 10,053 | 42,088 |
| 1974 | 11,098 | 45,955 |
| 1975 | 6184 | 24,976 |
| 1976 | 11,282 | 46,182 |
| 1977 | 10,257 | 40,145 |
| 1978 | 7,746 | 29,621 |
| 1979 | 6428 | 23,904 |
| 1980 | 5058 | 18.848 |
| 1981 | 7336 | 26,019 |
| 1982 | 7926 | 29,120 |
| மொத்தம் | 1,05,747 | 4,19,006 |

- இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலையாகத் தங்கிய இலங்கை இந்திய வம்சா வழியினர் 3536
- இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பர்மா விலிருந்து திரும்பிய இந்தியவம்சா வழியினர் 4984
- இராமநாதபுரம் மாவட்டத்திற்குவியட்நா மிலிருந்துதிரும்பிய இந்திய வம்சா வழியினர் 22
- தாயகம் திரும்பியவர்களின் வேலைவாய்ப்புக்காக இங்கு துவக்கப்பட்ட தேசிய பஞ்சாலை வாரியத்தின் துணி விற்பனை நிலையங்கள் வருமாறு:

  அ) திருப்புவனம் - 15-6-80
  ஆ) மானாமதுரை - 26-7-80
  இ) திருப்புத்தூர் - 14-2-81

- துவக்கப்பட்ட கூட்டுறவு தொழிற் கழகம்:

  தந்தை பெரியார் முந்திரி பதனிடும் பணியாளர் தொழிற் கூட்டுறவுக் கழகம் குன்றக்குடியில் ஏற்படுத்தப்பட்டது.

O

# துறைமுகப் பட்டினங்கள்

இந்த மாவட்டத்தின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ள முன்னூறு கிலோ மீட்டர் தொலைவு கடற்கரை பாக் நீரிணைப்பையும் மன்னார் வளைகுடாவையும் தொட்டுக் கொண்டு இருக்கிறது. வடக்கே சுந்தர பாண்டியன் பட்டினத்திலிருந்து தெற்கே கன்னி ராஜபுரம் வரையிலாக இந்த நீண்ட கடற்கரை காலத்தின் பல நிகழ்ச்சிகளுக்கு நிலைக்களனாக அமைந்து வரலாறு படைத்துள்ளது. இங்கு பல பட்டினங்கள் எழுந்து சிறப்புற்றது போல, அவை நலிந்து மறைந்தும் இருக்கின்றன. இன்னும் சில பட்டினங்கள் பழமையின் பெருமையைப் பறைசாற்றும் சின்னமாக மட்டும் இன்றுவரை இருந்து வருகின்றன. அவைகளில் தொண்டி, தேவிபட்டினம், பெரியபட்டினம், கீழக்கரை ஆகியவை குறிப்பிடத்தக்கன. அவை பற்றிய சிலதகவல்கள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

**கீழக்கரை**

கிழக்குக்கரையில் உள்ள பட்டினம் என்ற பொருளில் தான் கீழக்கரை கடந்த முன்னூறு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. வடகரை, தென்கரை, பெருங்கரை, மடக்கரை என்ற தமிழ்நாட்டு சிற்றூர் களைப் போன்று இந்த ஊரின் பெயரும் கரை என்ற விகுதியுடன் உள்ளது. இந்த ஊரின் உண்மையான பெயர் என்ன என்பதை அறுதியிட இயலவில்லை. என்றாலும் இங்குள்ள பதினேழாவது நூற்றாண்டு கல்வெட்டின்படி இந்த ஊர் நினைத்ததை முடித்த விஜயன் பட்டினம் என்றும், அறுந்தொகை மங்கலம் என்றும் பெயர் பெற்று இருந்ததாகத் தெரிகிறது.

வகுதை, தென்காயல் என்பனவும் இந்த ஊருக்கான இலக்கியப் பெயர்களாகும். பதினாறாவது நூற்றாண்டிற்கு முன்னதாக உள்ள நிகழ்ச்சிகளுடன் இணைக்கத்தக்க வரலாற்றுச் சான்று எதுவும் இங்கு இதுவரை கிடைக்கவில்லை.

இராமநாதபுரம் திருமலைச்சேதுபதி மன்னர் வழங்கிய செப்பேடு ஒன்றிலிருந்து, இந்தப் பட்டினத்துப் பேட்டையில் முத்து, நெல், நவதானியங்கள், பாக்கு, மிளகு, செம்பு, துத்தநாகம், பட்டுப்புடவை, பன்னீர், ஏலம், கிராம்பு, சாதிக்காய், பத்திரி, பட்டு நூல், கருப்புக்கட்டி, புளி, தேங்காய், பலசரக்கு ஆகிய பொருட்களில் சிறப்பான வாணிபம் நடைபெற்றமை தெரியவருகிறது. இதன் காரணமாக பல நாட்டாரும் இங்கு வந்து வதிந்து இருந்ததை இங்குள்ள பன்னாட்டார் தெரு என்ற பகுதி நினைவூட்டுகிறது. இந்த வணிகத்தில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயர்ந்து நின்றவர்கள் சோனகர்கள் என்று அழைக்கப்பட்ட இஸ்லாமியர். கிழக்குக் கடற்கரையெங்கும் சிறு சிறு தொகுதிகளாக அஞ்சு வண்ணங்களில் ஆங்காங்கு குடியமர்ந்த அவர்கள், இந்த ஊரிலும் நிலைத்து ஏற்றமுடன் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மன்னார் வளைகுடாவில் போர்த்துக் கேகியரின் ஆதிக்கம் மிகுந்ததன் காரணமாக இங்குள்ள இஸ்லாமியரின் வெளிநாட்டு வாணிபம் சுருங்கியது என்றாலும் ஒரு நூற்றாண்டு காலவரம்பிற்குள்ளாக மீண்டும் தங்களது வளமையான வாணிபச் சிறப்பை எய்தியதன் சின்னமாக வள்ளல் சீதக்காதி விளங்கினார். அவரது வற்றாத செல்வமும் வளர்ந்து ஓங்கிய கொடையும்' செத்தும் கொடுத்த

சீமான் சீதக்காதி' எனச் செந்தமிழோர்க்கு கீழக் கரையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. அவர்அங்கு அமைத்த பள்ளி வாசல் சோனக திராவிட கட்டுமானக் கலைவிருந்தாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

வள்ளல் சீதக்காதியின் ஆன்மிக குருவாக இலங்கியவர் ஸதக்கத்துல்லா அப்பா அவர்கள் கீழைநாட்டு ஏகத்துவ நெறியின் தத்துவப் பேழையாகவும், அரபு மொழி உலகம் அனைத்தும் ஏற்றிப் போற்றும் மகா கவியாகவும் வாழ்ந்த அவர்களது போதனையிலும் பயிற்சியிலும் பயன்பெற்ற இறையன்பர்களையும், புலவர் பெரும் களையும் தோற்றுவித்த பெருமை இந்த ஊரின் மண்ணுக்கு உண்டு. மாப்பிள்ளை லெப்பை ஆலிம், கவ்வத்து நாயகம், செயிது அப்துல் காதிர், ஆலிம் புலவர், குணங்குடி மஸ்தான் ஆகியோர் அவர்களில் சிலராவர்!

மேலும், செந்தமிழ் இலக்கியங்களான சீறாப்புராணம், சின்ன சீறா, ராஜநாயகம் போன்ற ஒப்பற்ற காவியங் களின் கொடை நாயகர்களான அபுல் காசிம் மரைக் காயர், சின்ன நயினார் லெப்பை மரைக்காயர், அப்துல் காதிர் மரைக்காயர் ஆகியோர் அனைவரும் அந்தக் கீழக் கரை வள்ளல் பெருமக்களின் வழிவந்தவர்கள் ஆவர். இந்த ஊரில் சோனகரைத் தவிர சிறுபான்மையினரான மறவர்களும், பரவர்களும் உள்ளனர். போர்த்துக் கேசியர், டச்சுக்காரர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட பண்டக சாலைகளும் தேவாலயங்களும் இன்றும் சிதைந்த நிலையில் இருக்கின்றன.

### தொண்டி

சங்க இலக்கியமான ஐங்குறு நூறில் தொண்டியைப் பற்றிய சில பாடல்கள் உள்ளன. அகப்பாடல் ஒன்றை யாத்த சாத்தனர் என்பவர் தொண்டியா மூரைச்

சேர்ந்தவராகக் குறிக்கப்பட்டுள்ளது. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்ருன சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் ''வங்க ஈட்டத்து தொண்டியோர் இட்ட அகிலும், துகிலும்,ஆரமும்'' பற்றி மதுரையில் பேசப் படுகிறது. இன்னும் ஏழாம் நூற்றாண்டு இலக்கியமான பாண்டிக் கோவையில் பாண்டியன் நெடுமாறனது பட்டினமாக தொண்டி புகழ்ந்து உரைக்கப்படுகிறது.

இலக்கியச் செறிவு இணைந்த இந்தப் பட்டினம் சேரனுக்குச் சொந்தமான கடல் தொண்டி போல இந்தத் தொண்டி சோழனது சொத்தாக இருந்து பாண்டியருக்கு மாறி இருக்கிறது.

தமது எட்டாவது ஆட்சியாண்டில் பாண்டிய நாட்டிற்குள் படை நடத்திவந்த ராஜராஜ சோழ தேவன், கடந்தவுடன் தொண்டியை வந்தடைந்த பிறகுதான் தமது இலக்கை நோக்கிச் செல்லும் வழியில் மாறுதலைச் செய்தான். அவன் புதிதாக அமைத்த அந்தப் பாண்டிய நாட்டுப்பாதை பின்னர் ஜனநாதன் வழி என வழங்கப்பெற்றது. இலங்கைத் தண்ட நாயகன் ஜகத் விஜயன் தலைமையில் கி.பி.1168இல் இலங்கையிலிருந்து வந்த படைகளுக்கும் பாண்டியன் குலசேகரனது படைகளுக்கும் இந்தப் பட்டினத்தில் பல போர்கள் நடைபெற்றன. பாண்டிய இளவரசன் வீரபாண்டியனுக்குப் பரிந்து வந்த இலங்கையரை. இந்தப் பட்டினத்திற்கு அண்மையில் குடியேறிய இஸ்லாமியர், பரிசுப் பொருட்களுடன் வரவேற்பு அளித்ததாக இலங்கை வரலாறு மகாவம்சம் பதிவு செய்துள்ளது. இன்னொரு கல்வெட்டுச் செய்தியின் படி, தொண்டிக்கு அண்மையில் தீர்த்தாண்டதானம் திருக்கோயில் கி.பி. 1269 இல் குழுமிய பல நாட்டு

வணிகரில் இஸ்லாமிய அஞ்சு வண்ணத்தவரும் இருந்ததாகத் தெரிகிறது.

இங்ஙனம், இஸ்லாமியர் - அரபு நாடுகளில் இருந்து வணிகத்திற்காக கிழக்கு கரைக்கு வந்தவர்கள் இந்த ஊரில் வலசையாக வாழ்ந்தனர். பதின்மூன்றும் நூற்றுண்டில் பாண்டிய நாட்டவரும் அரபு நாடு களுக்கும் இடையே விறுவிறுப்பாக நடந்த குதிரை வாணிபத்தில் இந்தப் பட்டினத்திற்கும் பங்கு இருந் திருக்க வேண்டும். இன்னும் இந்தப் பகுதியில் "தொண்டி மட்டக் குதிரை போல" என்ற வழக்கு இருப்பது பழமையை நினைவு கூர்வதாக உள்ளது. பதினுன்காவது நூற்றுண்டில் வாழ்ந்த அரபுநாட்டுப் பயணி இந்த ஊரை திண்டா (Dynda) எனக் குறித்துள்ளார்.

கி.பி. 1639 முதல் இந்தப் பகுதியில் போர்த்துக் கீசியரின் நடமாட்டமும் கிறிஸ்துவமத பிரச்சாரமும் நீடிப்பதற்கு திருமலை மன்னர் காரணமாக இருந்தார். அப்பொழுது யாழ்ப்பாணத்தை (இலங்கை) தங்களது ஆட்சியில் வைத்திருந்த போர்த்துக்கீசியர் எதிர்க் கரையில் உள்ள தொண்டியுடன் மது, மிளகு, பட்டு ஆகியவைகளில் வியாபாரத் தொடர்பு கொண்டிருந் தனர். என்ருலும் சேதுபதிகளது கடுமையான நட வடிக்கை காரணமாக போர்த்துக்கேசியர் இங்கு நீடிக்க முடியவில்லை.

தொண்டியந்துறைக் காவலன் என்ற விருதுகள் உரி யவர்களாக சேதுபதிகளது இந்தஊர் கி.பி. 1730இல் புதிதாக அமைக்கப்பட்டசிவகங்கை சீர்மையுடன்சேர்க் கப்பட்டது. ஆங்கிலேயருக்கும் சிவகங்கை பிரதானி களான மருது சகோதரர்களுக்கும் இடையில் நிகழ்ந்த பல போர்களில் இந்த ஊரும் சம்பந்தப்

பட்டிருந்தது. அப்பொழுது ஆற்காட்டு நவாப் முகம்மது அலி வாலாஜா இந்த ஊரில்பெரும் படையுடன் முகாமிட்டிருந்ததாக சிவகங்கை சரித்திரக் கும்மியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலப்போக்கில் இங்கு கடல், கரையைக் கடந்து ஊருக்குள் வந்து விட்டதால் துறைமுகம் பழுதுற்று கப்பல் போக்குவரத்துக்கு தகுதியற்றதாகி கடல் வாணிகத்தைப் பாதித்து விட்டது. இந்த ஊர் மக்களும் சென்ற நூற்ருண்டில் பிழைப்பிற்காக இலங்கை, மலேஷியா நாடுகளுக்கு குடிபுகுந்து விட்டனர். ஆனுல் இந்த ஊரில் தமிழ் விளேச்சலுக்கு மட்டும் என்றும் தட்டுப்பாடு ஏற்படவில்லே. அரபு மொழியிலும், தமிழிலும் வல்ல பெரும் புலவர்களும் வேதாந்திகளும் இந்தப் பட்டினத்தை தமிழ் உலகம் மறந்து விடாமல் இருக்கும் வண்ணம் பல படைப்புக்களேத் தந்துள்ளனர். அவர்களில் சுல்தான் செய்யிது அப்துல் காதிறு என்ற குணங்குடி மஸ்தானிலிருந்து மு.ரு.மு முகமது காசிம் வரையான பலர் இந்த மண்ணில் மலர்ந்த வாடாத மலர்கள்.

## தேவி பட்டினம்

இதிகாசகாலத்துடன் இணேத்துக் குறிப்பிடப்படுகின்ற பல ஊர்களில் இந்தப் பட்டினமும் ஒன்ருகும். இந்தியா முழுவதும் உள்ள ஐம்பத்து இரண்டு சக்தி பீடங்களில் இந்த ஊரும் ஒன்ருகக் கருதப்பட்டு வருகிறது. கி.பி 993/994 இல் பாண்டிய நாட்டிற்குள் புகுந்த ராஜ ராஜ சோழ தேவனது பெரும்படையணிக் காலத்தில் இந்தப் பட்டினம் சிறப்புற்றிருக்க வேண்டும். மேலும் ராஜராஜனது ஈழப்படையெடுப்பிற்கும் இந்த துறை முகம் பிரதான உதவிதளமாக விளங்கி இருக்க

வேண்டும். இதன் காரணமாக இந்த ஊரைப் பலவகைகளிலும் சிறப்புறச் செய்து, தனது பட்ட மகிஷியான லோகமகாதேவியின் பெயரில் இந்தப் பட்டினத்தை ராஜராஜ தேவன் ''உலகமகா தேவிபட்டினம்'' என்ற பெயரில் வழங்கினுன் என்பது வரலாற்று ஊகமாக அமைகிறது. இந்தப் பெயரின் சுருக்கமான 'தேவி பட்டினம்' என்பது இன்றைய வழக்காகும்.

செவ்விருக்கை நாட்டில் அமைந்த இந்தப் பட்டினம், ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லப தேவன் பெயராலும் வழங்கப் பட்டதை அந்த ஊரில் உள்ள இன்னெரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. பன்னிரண்டாம் நூற்ருண்டில் இலங்கையில் இருந்து வந்த ஈழப்படைகளுக்கும் குலசேகர பாண்டியனது தமிழ்ப் படைகளுக்கும் நடைபெற்ற போரில் இந்த ஊர் இருவர் பக்கலிலும் கைமாறியது. இந்த ஊருக்கு அண்மையிலும் இந்தப்போர் தொடர்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. மதுரை மன்னன் கிருஷ்ணப்ப நாயக்கனது பெரும்படையொன்று கி பி.1565இல் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று இலங்கையை வெற்றி வாகை சூடி திரும்பிய விவரம் மதுரைநாயக்கர் வரலாற்றில் காணப்படுகிறது. இத்தகைய வெற்றி விஜயம் ஒன்றை சேதுபதி மன்னரது பர்வத வர்த்தினி என்ற கப்பல் மேற்கொண்டதாக பிற்கால இலக்கியமான சேதுபதி ஏலப்பாட்டு என்ற சிற்றிலக்கியம் வர்ணிக்கிறது.

பிற்காலப் பாண்டியப் பேரரசின் பிரதான அங்கமான குதிரைப் படைக்குத் தேவையான குதிரைகள் ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கில் அரபு நாடுகளில் இருந்து பெறப்பட்டன. அவை இறக்கப்பட்ட பாண்டிய நாட்டின் மூன்று துறைகளில் இந்தப் பட்டினமு

ஒன்றாகும் என உலகப் பயணி வஸ்ஸாப் எழுதியுள்ளார் இதன் காரணமாக இந்தப் பட்டினத்தின் தென்பகுதியில் அரபுநாட்டு இஸ்லாமியரின் அஞ்சு வண்ணமும் குடியேற்றமும் ஏற்பட்டன. ஏற்கனவேபாண்டிய நாட்டிற்கும் அரபுநாடுகளுக்குமான வணிகத் தொடர்புகள் வலுப் பெற்றன.

இங்குள்ள சையது அகம்மது பாக்தாதி என்பவரது அடக்கவிடம் இதனை உறுதி செய்கிறது. (ஈராக் நாட்டின் தலைநகரான பாக்தாத்திலிருந்து வந்தவர்களைக் குறிக்கும் சொல் பாக்தாதி என்பதாகும்).

மன்னார்குடாவில் போர்த்துக்கேயரின் கடலாதிக்கம் மிகுந்த இந்தப் பட்டினத்து மரக்கலராயர்களான இஸ்லாமியரது வெளிநாட்டு வணிபத் தொடர்புகள் சுருங்கின. மற்றும் இந்தத் துறைமுகம் கடல் கோளாறினால் பாதிக்கப்பட்டு பெருங்கப்பல்களைக் கரைக்கு அண்மையில் கொண்டு வருவது இயலாது போயிற்று. இந்த நூற்றாண்டின் துவக்கம் வரை எதிர்க்கரையில் உள்ள ஈழத்துடன் மட்டும் கப்பல் தொடர்பு நீடித்தது.

இப்பொழுது இந்த ஊர் இந்து சமயத்தினரது யாத்திரைத் தலமாக மட்டும் இருந்து வருகிறது.

### பெரியபட்டினம்

சின்னஞ்சிறு ஊராக உள்ள இன்றைய பட்டினத்தின் பெயரும் நிலையும் கடந்த பல நூற்றாண்டுகளில் வேறுவிதமாக இருந்ததை வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. முட்டாச் சிறப்புடைய பட்டினம் என மூதறிஞர்களால் பாராட்டப் பெற்ற அந்தப் பெருநகரம் கற்பனையிலுங் காண முடியாத எளிமைக்

கோலத்தில் இன்று காட்சியளிக்கிறது. பராக்கிரம பட்டினம் எனவும், பவித்திரமாணிக்கப் பட்டினம் எனவும் வரலாற்றில் பதின்மூன்றும் நூற்றுண்டுவரை இந்த ஊர் குறிப்பிடப் பட்டுள்ளது. அந்த நூற்றுண்டில் பாண்டிய நாட்டிற்கு வருகைதந்த வரலாற்று ஆசிரியர் வஸ்ஸாப் இந்த ஊரினைப் பத்தன் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் மாறவர்மன் குலசேகர பாண்டியனது மூன்று பெரும் துறைமுகங்களில் இந்தப் பட்டினமும் ஒன்று எனவும் குறித்துள்ளார்.

கி. பி. 1318இல் டெல்லியிலிருந்து தென்னகம் நோக்கி வந்த தளபதி குஸ்ருகான் இந்தப் பட்டினத்தைச் சூறையாடியதாகவும், அங்கு சிறப்புடன் விளங்கிய சுல்தான் ஸிராஜுத்தீன் என்ற அரபு வணிகரையும் அவரது குடும்பத்தினர் உடமைகளையும் கொள்ளை கொண்டு கொலை செய்ததாக கவிஞர் இஷாமி தமது கவிதை நூலில் குறித்துள்ளார். இலங்கையிலிருந்து மாலித்தீவு நாட்டிற்குப் புறப்பட்ட உலகப் பயணி இபுன் பதூதா கி. பி. 1334இல் மரக்கலங்கள் அழிவுக்குள்ளாகித்திசைமாறி வந்துஇந்த'பத்தனில்'பலநாட்கள் தங்கி இருந்தார். இந்தத் துறைமுகத்தின் சிறப்பையும் வளமையையும் தமது குறிப்புகளில் விவரமாகக் குறித்துள்ளார்.

பத்தன் என்பது அரபு மொழியில் பட்டினம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு நேரான பொருளைக் கொடுப்பதாகும். இந்தப் பட்டினத்தை வரலாற்று ஆசிரியர்கள் அமீர்குஸ்ருவும், திமிஷ்கியும் கூட பத்தன் என்ற அரபுச் சொல்லையே பயன்படுத்தியுள்ளனர். ஆனால் மாறவர்மன் சுந்தர பாண்டியனது எட்டாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இந்த ஊர் பவித்திர மாணிக்கப்பட்டினம் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது.

தூத்துக்குடியில் இருந்து நாகபட்டினம் வரையான கடற்கரை பற்றிய விவரங்களைத் தருகிற கிறித்துவ சமயச் சான்றோர் நியூ ஹோஃப், இந்த ஊரைப் பதினேழாம் நூற்றுண்டில், பெரியபட்டினம் என்றே குறிப்பிட்டுள்ளார். அப்பொழுது இந்தப் பகுதியில் வழக்கில் இருந்த இராமேஸ்வரப்பட்டினம், தொண்டிப்பட்டினம் ஆகிய கடற்றுறைகளை விட அளவிலும், சிறப்பிலும் பெரிது என்பதைக் குறிக்க இந்த ஊரின் பெயரில், பெரிய' என்ற சொல் இணைந்து இருத்தல் வேண்டும்.

பராக்கிரம பட்டினம், பவித்திர மாணிக்கப் பட்டின மாகி, பத்தன் என்ற வழக்குப்பெற்று இப்பொழுது பெரியபட்டினமாகப் பெயர் பெற்றுள்ளது.

இங்குள்ள மக்கள் இஸ்லாமியர்; சோனகர் என அழைக்கப்படுவர். தென்னகத்திற்கு அரபு நாட்டி லிருந்து வந்த மாலிக் இபுனுதீனர் தலைமையில் வந்த சமயப் பணிக் குழுவின் காலந்தொட்டு இங்கு இஸ்லாமியரது குடியேற்றம் ஏற்பட்டதாக கருதப் படுகிறது. ஆனல் பன்னிரண்டாம் நூற்றாண்டில் மதினத்திலிருந்து வந்த புனித சுல்தான் சையது இபுராகீம் ஷகீது அவர்கள், இங்கு ஆட்சி செய்த விக்கிரம பாண்டியனை வென்று தங்களது ஆட்சியை நிலைநாட்டியதன் காரணமாகவும் அடுத்து அரபு நாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்குமிடையில் நடை பெற்ற விறுவிறுப்பான குதிரை வியாபாரம் காரண மாகவும் இந்தப் பகுதியில் இஸ்லாமிய மக்களது பெருக்கம் மிகுந்திருத்தல் வேண்டும்.

இவர்கள் அனைவரும் கடல் வாணிகத்தில் தேர்ந்து இருந்தது போல, முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல்,

மீன் பிடித்தல், சிப்பி, பவளம் சேகரித்தல் போன்ற தொழில்களிலும் திறம்படத் திகழ்ந்தனர். என்றாலும் வெள்ளைப் பரங்கிகளான போர்த்துக்கீசிய, டச்சு, ஆங்கில நாட்டவரின் கடுமையான போட்டி, மோதல் ஆகியவைகள் காரணமாக இவர்கள் தங்களது இயல்பான கடல் தொழிலை விட்டு, விவசாயத்தில் ஈடுபட்டனர் என்றாலும், முத்துக் குளித்தலிலும், சங்கு எடுத்தலிலும் சிறந்த தொழிலாளிகள் தொகுதியாக இந்த ஊரில் இன்றளவும் வாழ்ந்து வருகிறார்கள். தெற்கு கடலையும் இந்த ஊரையும் இணைக்கும் கப்பலாறு என்ற இயற்கையான ஆற்றுவழி மணல் மேடிட்டு விட்டதால் இந்த ஊர் துறைமுகப்பட்டினமாகத் தொடர்ந்து விளங்கும் தகுதியை இழந்து விட்டது. இங்குள்ளவர்களுக்கு கடல் தொழில் வாய்ப்பும் அருகி விட்டது.

ஆனால் இந்த ஊரின் பழமையான வரலாற்றுப் பாரம்பரியத்தை விளக்கும் சின்னங்களாக இங்கு அகழ்வில் கிடைத்த சோழ, பாண்டிய, பல்லவ, நாயக்க சேதுபதி மன்னர்களது பொன், வெள்ளி, செம்பு நாணயங்களும், ஹிப்ரு, அரபி, தமிழ் கல்வெட்டுக்களும் அமைந்துள்ளன. மற்றும் இங்குள்ள சிதைவுற்ற கோட்டைச்சுவர், கடற்கரைப் பகுதி, கட்டுமானங்களும் கடந்த காலச் சிறப்பைக் கட்டியங் கூறும் சின்னங்களாக விளங்குகின்றன.

O

# விடுதலைப் போராட்டம்

அடிமைப்பட்ட நமது நாட்டை ஆங்கில ஏகாதிபத்தினின்றும் மீட்பதற்காக கி. பி. 1945 வரை பல இயக்கங்கள், போராட்டங்கள், புரட்சிகள் நடை பெற்றன. மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் நாட்டுணர்வை வளர்த்து மக்கள் அனைவரையும் இன, மொழி, மதம், சாதி என்ற வேறுபாடுகளேக் களைந்து ஒரே கொடியின் கீழ் ஒற்றுமைப் படுத்தி நிறுத்தியது. கிலாபத் இயக்கம் (1921) ஒத்துழையாமை இயக்கம் (1930) கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணி எதிர்ப்பு மறியல் (1932) நாக்பூர் கொடிப் போராட்டம், நீலன்சிலை அகற்ற மறியல், தனிநபர் மறியல் (1941) போர் உதவி எதிர்ப்பு இயக்கம் (1940) பம்பாய் கடற்படையினர் புரட்சி (1945) விமானப் படையினர் புரட்சி (1945) என்ற இயக்கங்களின் வாயிலாக அந்நிய ஆட்சியாளர்களுக்கு இந்திய ஜனசக்தியின் ஒன்றுபட்ட குரலை, உணர்வை, உறுதியை உணரும் நிலே ஏற்பட்டது.

இன்னும் பஞ்சாபின் கத்தார் சங்கம், சிட்டகாங் இளைஞர் அணி, வங்க புரட்சிக்குழு, இந்திய சோஷியலிஸ்ட் இயக்கம் என்றுஇனங்காட்டக்கூடிய இளைஞர் அமைப்புக்கள், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் தங்களது தீவிர நடவடிக்கைகளினுலும் தியாகங்களினுலும் ஆட்சியாளர்களின் ஆதிக்கப் பிடியை தளர்த்துமாறு நிர்ப்பந்தித்தன. இவையனைத்தும் இந்திய விடுதலை இயக்கம் என்ற நெடிய பயணத்தின் இடைவெளிகளாகும்.

ஆனால், இந்திய விடுதலைப் புரட்சியை விரைவு படுத்தியது, 1942 ஆகஸ்டு மாதம் 8ம் நாள் பம்பாயில் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் தலைமையில் கூடிய இந்திய தேசியக் காங்கிரஸ் இயற்றிய "வெள்ளையனே வெளியேறு" என்ற தீர்மானம் ஆகும். இதனால் பீதியடைந்த பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் தேசியத் தலைவர்கள் அனைவரையும் சிறைப்படுத்தி வைத்து அவர்களது இயக்கங்களை பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு பயங்கரமாக நசுக்கியது. இந்த அடக்குமுறைக்குப் பணியாது ஆயிரக்கணக்கான மக்கள் ஆட்சியாளருக்கு எதிராக கிளர்ந்து எழுந்தனர். அவர்கள் அனைவருக்கும் வருடக்கணக்கில் கடுங்காவல் தண்டனை வழங்கப் பட்டு நாடெங்கும் உள்ள சிறைகளில் நிறைத்து பூட்டப்பட்டனர்.

இந்த கால கட்டத்தில் இந்த மாவட்டத்திலும் நாட்டு விடுதலையில் நாட்டமுள்ள நல்லவர்கள் நூற்றுக் கணக்கில் அடக்கு முறையை எதிர்த்துக் கைது ஆகி தண்டனை பெற்றனர். குறிப்பாக தேவ கோட்டை கோட்டத்தில் உள்ளவர்கள் கொடுமையைக் கண்டு குமைந்தவர்களாக, கொடுங்கோலை அதனுடைய அனைத்து வடிவங்களிலும் எதிர்த்தனர். நிராயுதபாணிகளான அவர்களது, நிமிர்ந்த நெஞ்சங்களை ஏகாதிபத்தியத்தின் குண்டுகள் துளைத்துச் சென்றன. கொடூரமான கசையடிகள், தாய்மார்களுக்கு தலைகுனிவு, சொத்துக்கள் பறிமுதல், கிராமங்களுக்கு கூட்டு அபராதம் என பல்வேறு கொடுமைகளுக்கு ஆளானார்கள். பூலாங்குறிச்சி, தேவகோட்டை, திருவாடானை மக்களின் கொதிப்பு அடங்கவில்லை. அரசு அலுவலகங்கள், கருவூலம், காவல்நிலையம், நீதிமன்றம் ஆகிய அனைத்தையும்

தீக்கிரையாக்கினர். போலீஸ், ராணுவம் நடத்திய தாக்குதலை மக்கள் நேருக்கு நேர் சந்தித்தனர்.

வன்செயல்களை நடத்தியதாக, நடத்தத் தூண்டியதாக, நூற்றுக் கணக்கானவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு மதுரை மத்திய சிறைக்குள் விசாரணை மன்றத்தில் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விடுதலை இயக்கப்பகுதியில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாண்மையினரை காலம் கவர்ந்து சென்று விட்டது. மக்களும் மறந்து விட்டனர். அவர்களைப் பற்றி அரசாங்கப் பதிவுகளில் உள்ள ஒருசில விவரங்களை இங்குதொகுத்து தரப்படுகிறது

**திருவாடனை வட்டம்**

| பெயர் | சொந்தஊர் | தண்டனைக்காலம் |
|---|---|---|
| ஆதிசண்முகம் | வெள்ளிக்கட்டி | 7 ஆண்டு |
| அழகன். சோ | காவதுகுடி | 1 ஆண்டு |
| அழகர். சி | பண்ணைவயல் | 3 ஆண்டு |
| அழகர். கா | வன்னியூர் | 1 மாதம் 15 நாள் |
| காளிமுத்துஅம்பலம். க | திருவாடானை | 2 மாதம் |
| கருப்பன்அம்பலம். வா | அரசூர் | 2 வருடம் 10 நாள் |
| கருப்பையாஅம்பலம். கா | பாப்பனம் | 14 வருடம் |
| கருப்பையாஅம்பலம். வீ | காக்காய்ச்சி யேந்தல் | 11 மாதம் |
| லெஷ்மணஅம்பலம். கரு | பழுவன்காடு | 7 வருடம் |
| முத்துடையார்அம்பலம். மு | கற்களத்தூர் | 2 வருடம் |
| பழையப்பன்அம்பலம். கே. பீ | வெள்ளியூர் | 7 வருடம் |
| பால்சாமிஅம்பலம். கரு | வன்னியூர் | 7 வருடம் |
| பெரியகருப்பன்அம்பலம். க | அரசூர் | 7 வருடம் |
| ராமையாஅம்பலம். கே.ஆர் | பழுவன்காடு | 7வருடம் |

| | | |
|---|---|---|
| சாமிஅய்யாஅம்பலம். சு | திருவாடானை | 11 வருடம் |
| சுவாமிநாதஅம்பலம். சு | வன்னியூர் | 3 வருடம் |
| ஆறுமுகம். கே | திருவேகம்பத்து | 6 மாதம் |
| ஆறுமுகம்சேர்வை. க.ரு | களத்தூர் | 7 வருடம் |
| ஆதியப்பஆசாரி. மு | விளங்காட்டூர் | 9 மாதம் |
| ராமன்ஆசாரி | திருவாடானை | 3வருடம் |
| சுப்பன்ஆசாரி. கா | உசிலங்கோட்டை | 11வருடம் |
| சுப்பையாஆசாரி. கா | கொத்துக்குடி | 7வருடம் |
| பூச்சி | பண்ணைவயல் | 13 வருடம் 6 மாதம் |
| செல்லத்துரை. பி | திருவேகம்பத்து | 3 மாதம் |
| சொக்கலிங்கம்செட்டியார் | குமாரவேலூர் | 3 மாதம் |
| குருநாதன்செட்டியார். கு | காவதுகுடி | 8 மாதம் |
| லட்சுமணன்செட்டியார். தி | திருவாடானை | 3 ஆண்டு 4 மாதம் 11 நகள் |
| சின்னக்கருப்பன். கா | திருவாடானை | 2ஆண்டு |
| சின்னப்பயல். லா | பண்ணைவயல் | 2 ஆண்டு |
| சின்னையா. கரு | அரசூர் | 3 ஆண்டு 22 நாள் |
| சொக்கம்மா. க | முப்பையூர் | 3 ஆண்டு 6 மாதம் |
| துரைக்கண்ணுதேவர். மை | இரவியமங்கலம் | 7 ஆண்டு |
| ஜெயராமன்பிள்ளை. மா | திருவேகம்பத்து | 7 ஆண்டு |
| கதிரேசன்பிள்ளை. ர | திருவாடானை | 2 ஆண்டு |
| கலியன். எம் | விளங்காட்டூர் | 3 மாதம் |
| காளிமுத்து. கோ | திருவேகம்பத்து | 2 ஆண்டு |
| காளிமுத்துகோனர். கரு | திருவாடானை | 11 ஆண்டு |
| காளிமுத்துசேர்வை. ப | திருவேகம்பத்து | 9 மாதம் |
| காளிப்பயல். கே | விளங்காட்டூர் | 7 ஆண்டு |
| கார்மேகம்சேர்வை. சொ | கோட்டூர் | 2 ஆண்டு |
| கருப்பையா. கரு | இரவியமங்கலம் | 7ஆண்டு 3மாதம் |

| | | |
|---|---|---|
| கருப்பையாஅம்பலம். பழ | திருவாடானை | 2ஆண்டு 12நாள் |
| கருப்பன். அ | காவுதுகுடி | 1ஆண்டு |
| கருப்பன். இ | ககவதுகுடி | 10மாதம் |
| கருப்பன், கே | பண்ணைவயல் | 2ஆண்டு |
| கருப்பையா. கே | இரவியமங்கலம் | 7 ஆண்டு |
| கருப்பையாபிள்ளை | திருவேகம்பத்து | 2 ஆண்டு |
| கருப்பையாஅம்பலம் | விளங்குளத்தூர் | 3 ஆண்டு 2 மாதம் 81 நாள் |
| கருப்பையாஅம்பலம். வி | திருவாடானை | 7 ஆண்டு |
| கருத்தமுத்தன். பி | காவதுகுடி | 2ஆண்டு1மாதம் |
| காயாம்புபண்டிதன் | கல்லூர் | 11ஆண்டு |
| அழகர்கோனார். அ | கல்லூர் | 3ஆண்டு22நாள் |
| குப்பம்மாள் | பண்ணைவயல் | 3மாதம் |
| செல்லையாக்கோனார். எம் | திருவாடானை | 11ஆண்டு |
| சிதம்பரக்கோனார் | காவதுகுடி | 1மாதம் |
| சிதம்பரக்கோனார் | திருவாடானை | 6மாதம் |
| காளிமுத்துக்கோனார் | திருவடிமிதியூர் | 7ஆண்டு |
| காளிமுத்துக்கோனார். க | திருவேகம்பத்து | 4ஆண்டு |
| காளிமுத்துக்கோனார். கரு | திருவேகம்பத்து | 2ஆண்டு 10மாதம்15நாள் |
| கருப்பையாகோனார் | திருவேகம்பத்து | |
| கருப்பையாகோனார் | விளங்காட்டூர் | 1ஆண்டு |
| முனியாண்டிக்கோனார் | வட்டப்பேட்டை | 11ஆண்டு |
| பெரியம்பலக்கோனார். கொ | திருவாடானை | 7ஆண்டு |
| ராமகோனார். இ | திருவாடானை | 7ஆண்டு |
| ரத்னக்கோனார் | பண்ணைவயல் | 7ஆண்டு |
| சுப்பையாக்கோனார். கரு | பாப்பாங்கோட்டை | 3ஆண்டு |
| காளிமுத்துக்கோனார். கரு | திருவாடானை | 11ஆண்டு |
| ராமுக்கோனார் | பண்ணைவயல் | 1ஆண்டு |
| கூலையன். கரு | அரசூர் | 1ஆண்டு |
| ஆறுமுகக்குறவன். கு | திருவாடானை | 7ஆண்டு |

| | | |
|---|---|---|
| காளிமுத்துக்குறவன். மு | திருவாடானை | 1ஆண்டு 4மாதம் |
| ரங்கக்குறவன். உ | திருவாடானை | 7ஆண்டு |
| பூச்சிக்குடும்பன். சோ | களத்தூர் | 7ஆண்டு |
| குமரன். கரு | பண்ணைவயல் | 11ஆண்டு |
| லெஷ்மணஅம்பலம். கரு | திருவேகம்பத்து | 7 ஆண்டு |
| மாங்காளை. கா | பண்ணைவயல் | 11 ஆண்டு |
| மாங்காளை. எம் | விரசூர் | 1ஆண்டு |
| மங்கான். ஆ | பண்ணைவயல் | 2ஆண்டு |
| மாணிக்கம்அம்மாள் | திருவேகம்பத்து | 5மாதம் |
| மாரிமுத்துக்கோனுர். மு | திருவாடானை | 7ஆண்டு |
| மாசிலாமணி மு. | வன்னியூர் | 7வருடம் |
| மாயாண்டி | காவதுகுடி | 1வருடம் |
| ஆறுமுகமுதலியார் | திருவடிமிதியூர் | 7வருடம் |
| காயாம்புமுதலியார் | ஆண்டிவயல் | 11வருடம் |
| மூக்கன்சாம்பான் | திருவாடானை | 2வருடம் 12நாள் |
| முனியன் சி. | விளங்காட்டூர் | 1வருடம் |
| முனியன் சி. | திருவேகம்பத்து | 6மாதம் |
| முனியன் அ. | பண்ணைவயல் | 2வருடம் 6மாதம் 22நாள் |
அடுத்து அரபு நாடுகளில் இருந்து ஆண்டுதோறும் பதிறையிரம் குதிரைகள், தேவிபட்டினம், பெரியபட்டினம், காயல்பட்டினம் வழியாக கரை இறக்கப்பட்டன. அவைகளைக் கண்காணிப்பதற்கு மாறவர்மன் குலசேகர பாண்டியனது அமைச்சர் சுல்தான் ஐக்கியுத்தின் பொறுப்பில் சிறப்பான அமைப்புகள் செயல்பட்டன. இந்த அமைச்சரும் ஒரு இசுலாமியர். அரபு நாட்டைச் சேர்ந்த பெருவணிகர். அவரது மகன் சுல்தான் சிராஸுதீன். பெரியபட்டினத்தில் தமதுகுடும்பத்துடன் நிலைத்து வாழ்ந்ததை வரலாற்று ஆசிரியர் அமீர்குஸ்ரு கிபி 1318 ல் குறித்து வைத்துள்ளார்.

இத்தகைய வாணிபத்தில் அரபுநாட்டு இசுலாமியர் பண்டமாற்றுமுறை நடைமுறையில் இருந்த தமிழ் நாட்டில், தங்கள் நாட்டு நாணயங்களானதினர் (தங்கம்) திர்கம்(வெள்ளி) ஆகிய நாணயங்களை பண்டமாற்றுக்குப்பதிலாக செலாவணியில் முதன்முறையாகப் பயன்படுத்தினர். அவை பாண்டியநாடு முழுவதும்பதினைன்காம் நூற்றாண்டுவரை புழக்கத்தில் இருந்து வந்தது குறிப்பிடத் தக்கதாகும். இந்த அராபிய வர்த்த

கர்களின் நடமாட்டம் இந்தமாவட்டத்தில் அதிகரித்து வந்த நிலையில் அவர்களைத் தொடர்ந்து துருக்கி, ஸிரியா, அரேபியா அலெக்ஸான்டிரியா, மிஸ்று ஆகிய நாடுகளில் இருந்து சமயச்சான்றோர்களும் தொண்டர்களும் இங்கு வரத்துவங்கினர். அன்றைய, புதிய சமயமாகிய இசுலாத்தையும், ஏகதெய்வக் கொள்கை நெறிகளையும் பரப்பும் பணியில் ஈடுபட்டனர். இறுதியில் இந்தமண்ணிலே தங்களது தொண்டையும்வாழ்க்கையையும் முடித்துக்கொண்டனர். அவர்களில் சிலரது அடக்க இடங்கள் அனுமந்தக்குடி, தொண்டி, நம்புதாழை, திருப்பாலைக்குடி, தேவிபட்டினம், பெரியபட்டினம், சுந்தரமுடையான், வாணி, ஏறுபதி ஆகிய ஊர்களில் அமைந்துள்ளன.

இந்தப் பகுதிகளில் கிபி 1090ல், ஹஜாத் அலியார்ஷா, மாலிக்-உல்-முல்க் என்ற இருபெரும் சமயச் சான்றோர்கள் இசுலாம் மார்க்கத்தைப் பரப்ப முயன்ற முன்னோடிகள் எனத் தெரிய வருகிறது. ஆனால் கிபி 1182ல் மதினத்தில் (அரேபியா) இருந்து வந்த சுல்தான் ஸையதுஇபுராகிம்ஷஹீது அவர்களது தன்னலமற்ற தொண்டினாலும் உயிர்த் தியாகத்தினாலும் இந்த மாவட்டம் முழுவதும் இசுலாம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவர்களைத் தொடர்ந்து, ஆக்கப்பணியில் இன்னும் பல நூறு சமயச் சான்றோர்கள் அரபு நாடுகளில் இருந்து இங்கு வந்து புதிய மார்க்கத்தின் போதனையில் முனைந்து நின்றனர். அவர்களைத் தொடர்ந்து இன்னும் பலர். ஆனால் அவர்களைக் காலம் இனங்காட்டத் தவறிவிட்டது. என்றாலும், அவர்களில் மூவரைப் பற்றிய தொண்டினை மக்கள் இன்னும் மறக்காமல் ஏத்திப் போற்றி வருகின்றனர். அவர்கள்

சுந்தரமடையான் சீனியப்பா, நாகூர்சாகுல்ஹமீது ஆண்டவர்கள், கீழக்கரை ஸதக்கத்துல்லா அப்பா ஆகியோர் ஆவர்.

இந்த மாவட்டத்தில் இசுலாம் வாணிப வழியாக மக்கள் உள்ளங்களில் புகுந்ததால், இங்குள்ள இசுலாமியர் பெரும்பாலும் வணிகர்கள். அந்த வழி வழிவந்த வள்ளல் சீதக்காதியைப் பற்றித் தெரியாத வர்கள் யாரும் இருக்க முடியாது. அவர் தமிழ் உலகைக் காத்ததோடு, விரிந்த வாணிப உலகின் ஏகச் சக்கரவர்த்தியாகவும்விளங்கினார். இவர்கீழக்கரையைத் தாயகமாகக் கொண்டவர் என்பது தெரிந்ததே.

இங்குள்ள பொருளாதார நிலைகள் உழைப்பிற்குகந்த ஊதியத்தை நல்காத காரணத்தால், பெரும்பாலும் பர்மா, இலங்கை, மலேஷியா, ஸரவாக், புருணை, பிஜி ஆகிய நாடுகளுக்குச் சென்றனர். தங்களது உழைப்பினைக் கொண்டு, மிகவும் பிற்பட்ட அந்த நாடுகளின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தியுள்ளனர். இன்றைய இளம் தலைமுறையினரும் ஆயிரக்கணக்கில் வேலை வாய்ப்புகளைநாடியவர்களாக அரபிக்குடா நாடுகளுக்குச் சென்றவண்ணம் இருக்கின்றனர். அவர்களது சிந்தனையும் உழைப்பும் அந்த நாடுகளின் நலத்திற்காகவே செல விடப்படுகின்றன. இந்த நாடு விடுதலையடைந்து முப்பத்தேழு ஆண்டுகள் நிறைவுற்ற போதிலும், இந்த நாட்டின் சிறப்பிற்கு, உயர்விற்கு, உலகத்தலைமைக்கு உழைக்கும் வாய்ப்பு அவர்களுக்கு இல்லை. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் கவிஞர் ஒருவர் பாடியவாறு

"பிறந்த நாட்டை நினைச்சுப் பார்த்துப் புறப்பட்டு வாங்க" என்று இவர்களைத் தாயகத்திற்குத் திரும்ப

அழைக்கக் கூடிய தெம்பு இதுவரை ஆட்சியாளர்களுக்கு ஏற்படவில்லை! ஆதலால், இம்மாவட்ட இசுலாமியரது இந்த வாழ்க்கைப் பிரச்னை — வேற்றுநாட்டில் உழைத்துப் பிழைக்க வேண்டிய பிரச்னை தொடர்கிறது.

ஆங்கில ஆட்சியாளர், இந்த சமூகத்தினரை, ''லெப்பை'' என்று மட்டும் வகைப்படுத்தி கல்வி, பொருளாதார நிலைகளில் பிற்பட்ட வகுப்பினராக அறிவித்தனர். பெருந்தொகுதியினராக இந்த மக்கள் உள்ள சிற்றூர்களிலும் பேரூர்களிலும் ஆங்காங்கு பல துவக்கப் பள்ளிகளையும் உயர் தொடக்கப் பள்ளிகளையும் இந்த சமூகத்தினர் நடத்தி வருகின்றனர். விருதுநகர், சித்தார்கோட்டை, அபிராமம், இராமநாதபுரம், கீழக்கரை, இளையான்குடி, இளையான்குடி புதூர் ஆகிய ஊர்களில் இந்த சமூகத்தினரது மேனிலைப் பள்ளிகளும், தொழிற்பயிற்சி கல்விக்கூடமும் (பாலிடெக்னிக்) செயல்பட்டு வருகின்றன.

சமயக் கல்விக்கென மத்ரஸா எனப்படும் அரபிமொழிப் பள்ளிகளும் இந்த மாவட்டத்தில் இசுலாமியர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. தங்களது மூதாதையரது மொழியான அரபியிலும் தாய்மொழியான தமிழிலும் தேர்ந்த பல பேரறிஞர்கள் இந்த மாவட்டத்தின் சிறந்த மரபுக்கு அணிகலனாக விளங்குகின்றனர். கனககவிராயர், மீர் ஜவ்வாது புலவர், வண்ணக்களஞ்சியப்புலவர், வண்ண பரிமளப் புலவர், குணங்குடி மஸ்தான், மாப்பிள்ளை லெப்பை ஆலீம், சையது ஆலிப் புலவர், உமறுகத்தாப் புலவர் அவர்களில் தலையாயவர்கள் ஆவர். இசுலாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி என்ற பாரம்பரியத்தை அவர்களது ஆக்கங்கள் என்றென்றும் பறைசாற்றுவனவாக உள்ளன.

# கிருஸ்துவர்கள்

இந்த மாவட்டத்தின் சிறுபான்மை சமூகத்தில் குறிப்பிடத்தக்க இன்னொரு பெரிய சமூகம் கிறித்துவ சமூகத்தினராகும். இவர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து கிடைத்துள்ளன. பாண்டிய நாட்டின் ஆட்சியை ஏற்று இருந்த மதுரை நாயக்கர்களிடம் கடற்படை இல்லாத காரணத்தினால் இந்த மாவட்டத்தின் கடல் எல்லையைக் கண்காணிக்க இயலவில்லை. கி.பி. 1502ல் நெல்லைப் பகுதியில் காலூன்றிய போர்ச்சுக்கீசியர், யாழ்ப்பாணம் வரையான கடற்பரப்பில் தங்களது வாணிப வளர்ச்சியையும் அதிகார வரம்பையும் நிலைநாட்ட முயன்றனர். இதனையொட்டியே இந்த மாவட்டத்தில் கிறித்துவ சமயம் நுழைந்தது. இதற்கு இடையூறாக இருந்த இசுலாமியர்களுடன் மோதி, அவர்களது வாணிபச் செல்வாக்கை குறைத்ததுடன் அவர்களிடம் கொத்தடிமை போல் கட்டுப்பட்டுக்கிடந்த பரவர்களைப், பட்டங்கட்டிகளை கிறித்துவ மதத்திற்கு மாற்றுவதற்குப் பெரிதும் முயன்றனர்.

இந்த மத மாற்றும் பணியில் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் அப்பொழுது ஈடுபட்டு இருந்தவர் இத்தாலிய நாட்டு அந்தோனிபா கிரிமிஆனினி என்பவர் ஆவர். இவரது முயற்சியினால் மதமாற்றம் பெற்ற கிறித்துவர்களையும் அவரது ஆதரவாளர்களான போர்ச்சுகீசியரையும் கி.பி 1549ல் வேதாளைப் பகுதியில் இருந்த முஸ்லீம்களது ஆதரவுடன் நாயக்கப் படைகள் எதிர்த்தனர். எதிரிகள் அழிக்கப்பட்டதுடன்.

எஞ்சியவர்கள் கரையில் இருந்து மூன்று மைல் தொலை விலுள்ள முயல்தீவிற்குத் தப்பிச் சென்று பிழைத் தனர். அவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடு பட்ட அந்தப் பாதிரியார் படுகொலை செய்யப் பட்டார். கிறித்துவ சமய பரப்புதலுக்காக இந்த மாவட்டத்தில் இரத்தம் சிந்திய முதல்தியாகி இவர். இவரைத் தொடர்ந்து இத்தாலிய, போர்ச்சுகல் நாட்டுச் சமயத் தொண்டர்கள், இங்குள்ள மீனவர் களை மதமாற்றம் பெறுமாறு தீவிர பிரச்சாரம் செய்தனர்.

மதுரை மன்னர் திருமலைநாயக்கருக்கும் இராமநாதபுரம் மன்னர் சடைக்கன் சேதுபதிக்கும் கிபி 1659 இல் நடைபெற்ற போரில், போர்ச்சுகீஸியரின் ஆயுத உதவி பெறுவதற்கு நிபந்தனையாக, பாம்பனுக்கும் தொண் டிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஒன்பது கிறித்துவ ஆலயங்களை அமைப்பதற்கு போர்ச்சுகீஸியருக்குத் திருமலைமன்னர் அனுமதி வழங்கி, கிறித்துவ மத மாற்றத்திற்கு மறைமுகமாக அங்கீகாரம் செய்தார். என்றாலும், மறவர்சீமையில் மதமாற்றம் காண்பது மிக அரியதொன்றாகவே இருந்தது. அப்பொழுது, சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் மறவர் சீமை வழியாக கொச்சிக்குச் செல்ல முயன்ற ஆண்ட்ருரோப்பஸ், கொன்ஸ்லாவ் பேய்ஸ் ஆகிய இரண்டு பாதிரிகள் மறவர் கையில் அகப்பட்டு, பிணைத்தொகை கொடுத்தும் அங்கிருந்து மீள்வதே பெரும்பாடாகி விட்டது.
என்றாலும், முப்பதாண்டுகள் கழித்து கிபி 1663 ல் அந்தோனியா-டி-பிரான்ஸா என்ற பாதிரியாரது பகீரதப் பிரயத்தனம் காரணமாக 252 இந்துக்கள் கிறித்துவ மதத்தைத் தழுவினர். இவர்களில் இரு

பெரும் இந்து சாமியார்களும் இருந்தனர். அவர்கள் தங்கள் பெயர்களை முடியப்பன், அருளப்பன் எனவும் முறையே மாற்றிக் கொண்டனர். முடியப்பன் என்பவரிடம் இருந்த சில அரிய ஆற்றல்களினால் - தீராத நோய்களைத் தீர்த்து வைக்கும் திறன்காரணமாக - கிறித்துவ சமயப் பிரசாரம் வலுவடையும் சூழ்நிலை நிலவியது.

கிபி 1665ல் சேதுபதி மன்னரது தளபதி ஒருவர் கிறித்துவமதத்தை தழுவியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதுடன், இந்து—கிறித்துவ சமயவாதிகளிடம் பிணக்கும் பூசலும் வளர்வதற்குக் காரணமாகவும் இருந்தது இதனால், கிபி 1669இல் கிறித்துவ, கிறித்துவசமய அனுதாபிகள் மீது கடுமையான நெருக்குதல்கள் ஏற்பட்டன.

இந்தச் சூழ்நிலையில் போர்ச்சுகல் நாட்டு சமயப்பிரச்சாரகர் ஜான்—டி—பிரிட்டோ கிபி 1686ல் மறவர் சீமைக்குள் தஞ்சைப் பகுதி வழியாக நுழைந்து வெள்ளான்குளம், பனங்குடி, பாகணி ஆகியஊர்களில் சமயப்பிரசாரத்தைத் தொடங்கினார். இதனால் சீற்றங்கொண்ட பிரதானி குமாரப்பிள்ளை அவரையும் அவரது இரு சீடர்களையும் கைது செய்து, சித்திரவதைக்கு ஆளாக்கினார். சிறிதும் மனந்தளராத அந்தச் சமயத் தொண்டர்களது உறுதியைக் கண்ட பிரதானி அவர்களை இராமநாதபுரம் அரசரது விசாரணைக்கு அனுப்பி வைத்தார். ஏசுமதம் பற்றிய விளக்கங்களைக் கேட்டறிந்த மன்னர் கிழவன் சேதுபதி அந்தத் தொண்டர்களை எச்சரித்து விடுதலை செய்தார் அத்துடன் தமது முதல் முயற்சியில் வெற்றி கண்ட ஜான்—டி—பிரிட்டோ தாயகம் சென்றுவிட்டு,

இந்தியா திரும்பியவுடன் மீண்டும் மறவர் சீமைக்கு வந்தார். அரசியல் விளைவுகளைச் சிறிதும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், தமது பணியைத் தீவிரமாகத் தொடர்ந்தார். புளியால் கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள முன்னி என்ற சிற்றூரில் அவரும் அவரது தொண்டர்களும் தங்கி இருந்த பொழுது கைது செய்யப்பட்டு, இராமநாதபுரம் மன்னரிடம் இழுத்துச் செல்லப்பட்டனர். பாதிரியாரிடம் இப்பொழுது அரசருக்குப் பரிவு ஏற்படவில்லை. காரணம், கிறித்துச் சமயத்தைத் தழுவிய மன்னரது நெருங்கிய உறவினர்கள் அவரது ஆட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஏற்கனவே ஈடுபட்டிருந்தனர்.

ஆதலால், பாதிரியாரை சில நாட்கள் இராமநாதபுரம் சிறையில் இருத்தி வைத்தபின்னர், ஓரியூர் கோட்டைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அவர் 4-2-1693ல் கொல்லப்பட்டார். அவரது உயிர்த் தியாகம் அந்தப்பகுதி மக்களிடம் குறிப்பாக, இந்து சமயப் பிரிவினர்களான உடையார்கள், கடையர்கள் ஆதிதிராவிடர் ஆகிய பிரிவினரிடையே அனுதாபத்தை வளர்த்ததுடன் பிற்காலங்களில் அவர்கள் பெருமளவில் இந்த சமயத்தை ஏற்றுக் கொள்வதற்கு காரணமாக இருந்தது. மறவர் சீமையின் வடபகுதியிலும் கீழ்பகுதியிலும் இந்தப் புதிய கிறிஸ்துவர்களுக்கான வழிபாட்டுத் தலங்கள் எழுந்தன. ஓரியூர், காரங்காடு சருகணி, கிளாஞ்சுனை, புளியால், திருவரங்கம், கமுதி, இடைக்காட்டூர், சூராணம், கொக்கூரணி ஆகிய ஊர்களில் சமயப் பணியுடன் கல்விப்பணியும் துவக்கப்பட்டது. இராமநாதபுரத்தில் கி. பி, 1785ல் பத்து மாணவர்களுடன் சுவாட்ஸ் பாதிரியார் ஆங்கிலப்பள்ளியொன்றைத் துவக்கியது இங்கு குறிப்பிடத்தக்கது. மக்களது ஆதரவைப் பெற்ற அவர்

களது பணி கடந்த இருநூறு ஆண்டுகளாகச் சமயத்துடன் நில்லாமல், கல்வி, மருத்துவம், சமூகநலம் என்ற துறைகளைத் தொட்டுத் தொடர்ந்து வருகின்றன. இவைகளில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ள ஆயிரம் ஆயிரம் கிறித்துவ சமயக் சான்றோர்களையும், ஏசு சபையினரையும் அவர்களுக்குப் பின்னணியாக உள்ள ஸ்வீடிஸ், ஜெர்மன், டச்சு சமயக் குழுக்களையும் வரலாறு மறந்து விடாது,

## வடுகர்

இஸ்லாமியரும், கிறிஸ்தவர்களும் வேறு நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு குடிபெயர்ந்ததைப் போன்று, வேற்று மாநிலங்களில் இருந்தும் இந்த மாவட்டத்தில் குடியேறியவர்களும் உண்டு. அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்:— நாயக்கர், இராசுக்கள், ரெட்டியார், கம்பளத்தார் என்ற பிரிவுகளில் அடங்கும் வடுகர் ஆவர். இவர்கள் அனைவருக்கும் தாய்மொழி தெலுங்கு பின்பற்றும் சமயம் வைணவம். இந்து சமயத்தின் பிற நெறிகளை பேணுவதற்கும் இவர்கள் தயங்குவதில்லை. இவர்களில் கம்பளத்தார் என்னும் தொட்டிய நாயக்கர்கள் மட்டும் தங்களது மூதாதையர்களையும், தங்களது முன்னோர்களில் கன்னிகையாக இருந்து உயிர் நீத்தவர்களையும் குலதெய்வமாக வழிபடும் பழக்கம் உடையவர்களாக இருந்து வருகின்றனர். இன்னும் சிறப்பான செய்தி, இந்தப் பிரிவைச் சேர்ந்த ஆண், பெண் இருபாலரும் மாந்திரிக ஆற்றல்களில் சிறந்த பயிற்சி உடையவர்களாக விளங்கினார்கள்.

இவர்கள், நமது அண்டை மாநிலமான ஆந்திரத்தை நாயகமாகக் கொண்டு இருந்ததை ''வடதிசை மருங்கின், மருங்கின் வடுகு வரம்பாக'' என காக்கை பாடினியார் போன்ற சங்ககாலப் புலவர்களது பாடல் கள் புலப்படுத்துகின்றன. இவர்களது பூர்வீகம் இன்றைய விஜயநகருக்கு வடக்கே உள்ள பகுதியென சொல்லப்படுகிறது. பாமினி சுல்தான்களின் ஆட்சியினுல் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் பிரிவினர் ராயர்களது ஆரசியலில் தஞ்சம் பெற்றனர். பின்னர் அவர்களது சார்பான மதுரை அரசில் குடிபுகுந்து திண்டுக்கல்லுக்கு வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், பரவலாக குடியேற்றங்களை அமைத்தனர். 14-ம் நூற்ருண்டின் இறுதியில் மதுரை சுல்தான்களின் ஆட்சியை முழுமையாகக் களைந்த கம்பள உடையார் என்ற வடுக மன்னரது ஆட்சியில், ஆந்திரத்திலிருந்து வடுகர்கள் தென்பாண்டிச் சீமைக்கு குடிபெயரத் துவங்கினர். மதுரையில் விஜயநகர பேரரசின் பிரதிநிதியாக இருந்த விசுவநாத நாயக்கர் ஆட்சிக்காலத்திலிருந்து கி.பி. 1736 வரை இவர்களது குடியேற்றம் பரவலாக ஏற்பட்டது.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்களது குடியேற்றம் 15-ம் நூற்ருண்டில் துவங்கியது. மைசூர்ப் படையெடுப்பிலிருந்து மதுரையை மீட்டு உதவியதற்காக இராமநாதபுரம் மன்னர் ரகுநாத திருமலைச் சேதுபதியை மதுரை மன்னர் திருமலை நாயக்கர், பாராட்டி பரிசளித்துபெருமைப்படுத்திஞர். இதனுல் ஏற்கனவே முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் மதுரைக்கும் இராமநாதபுரத்திற்கும், இடையில் ஏற்படுத்தப்பட்ட நல்லுறவுகள் வலுப்பட்டன. இராமநாதபுரம் சீமையிலும் நாயக்கர்களது

ஆட்சிமுறையும் அரசியல் மொழியாக தெலுங்கும் கைக் கொள்ளப்படுகிறது. சேதுபதி மன்னர்கள் ஆணைகளை தெலுங்கில் கையெழுத்து இட்டு வெளியிட்டனர். கி.பி. 1760வரையான காலப்பகுதியில், திருமலை சேதுபதி, விஜயரகுநாத சேதுபதி, குமாரமுத்துவிஜய ரகுநாத சேதுபதி ஆகிய மன்னர்கள் தெலுங்கில் கையெழுத்திட்டுள்ள செப்பேடுகள் உள்ளன. இந்த மன்னர்களது ஆட்சிக்காலத்தில், கணிசமான அளவில் வடுகர்கள் நிர்வாகத்தில் நியமனம் பெற்றனர். இதே மக்களது குடியமைப்புகள், சமுத்திரம், பட்டி என வழங்கப்பட்டன.

கவரயர், பலிஜா என்ற பிரிவுகளுடைய இந்தமக்கள் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் வட்டங்களில் மிகுதியாக உள்ளனர். பலிஜா பிரிவினர், தங்கள் பெயருடன் நாயுடு என்ற விகுதியையும், கவரயர்களும், கம்பளத்தார்களும் நாயக்கர் என்ற விகுதியையும் சேர்த்து வழங்குகின்றனர். இவர்கள் பெரும்பாலும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். உடல் அமைப்பிலும், பழக்க வழக்கங்களிலும் இவர்கள் வேறுபட்டவர்களான ரெட்டிகள், அருப்புக்கோட்டை திருச்சுழியல் வட்டங்களில் உள்ள புஞ்சை நிலங்களைப் பயன்படுத்தி பருப்பு, நெல், கம்பு, வரகு' சோளம் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்கின்றனர். ராஜூக்கள் என்ற ராஜாக்களும் ஆந்திரத்திலிருந்து வந்தவர்கள் தான். மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இந்த மாவட்டத்தில் கீழராஜகுலராமன் என்றஊரில் குடியேறிய இந்தப் பிரிவினர், பின்னர் ராஜபாளையத்திலும் நிரந்தரமாக நிலைத்து விட்டனர்.

இவர்களது மணவினை போன்ற சமூக உறவுகளை ராஜபாளையம் வட்டத்திற்குள் உள்ள தங்கள் இனத்

தவர்களிடையே மட்டும் கொண்டுள்ளனர். இந்தப் பண்பு ஒருவகையில், அவர்களுக்கு பயனுள்ளதாக வும் இருந்து வந்துள்ளது. அவர்களது பிணைக்கப் பட்ட உறவுடன் கடுமையான உழைப்பும், பொரு ளாதாரமும், ஒருசேர இணைந்து வளர்ச்சியுற்று, அண்மைக் காலத்தில் ராஜபாளையம் தமிழகத்தின் சிறந்த தொழில் மையமாக அமைவதற்கு உதவி யுள்ளது. ராஜாக்கள் பாளையம் என்ற பெயருடன் சிற்றூர் ஒன்று பரமக்குடி வட்டத்தில் உள்ளது. இந்த வட்டத்திலும், கமுதி வட்டத்திலும் தொட் டியல் என்ற கம்பளத்தார் உள்ளனர்.

இந்தப் பிரிவினரது தலைவரது கம்பளத்து நாயக்கர், அல்லது கோடங்கி நாயக்கர் என அழைக்கப்படுகின் றார். அவர்க்கு மதிப்பும், மரியாதையும் அந்த மக்க ளிடம் உண்டு. பிறப்பு, இறப்பு, மணவிழா போன்ற அனைத்துப் பொது நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்து கொள்வார். இந்த மக்களது மணவிழா சடங்குகள் புதுமையானவை. ஏழுகலம் நிறைவுள்ள கம்பு தானி யத்தை கொடுத்துத்தான் மணப்பெண் நிச்சயிக்கும் முறை அண்மைக்காலம்வரை இந்த சமூகத்தாரிடையே இருந்தது.

பொதுவாக, வடுகர் உழைப்பாளிகள். வேட்டையாடு வதில்மிகுந்த வேட்கை கொண்டவர்கள். சேவல் சண்டைகதுவாழிச் சண்டை, செப்பிடு வித்தை, மகுடி ஜாலம் ஆகிய பொழுது போக்குகளும், உறுமி மேளம்' நையாண்டி மேளம் ஆகிய நாட்டுப்புற இசைக்குழுவையும் தமிழகத்திற்கு புகுத் தியவர்கள் இந்த மக்கள்தான். மேலும், இன்று தமிழக மக்களது காதுகளிலும், கழுத்திலும் இடம்

பெற்றுள்ள பல்வேறு வகையான விலைமதிப்பில்லாத காதோர அணிகலன்களும், கங்கனம்(வளையல்) ஆகிய வைகளையும் இங்கு பழக்கத்தில் ஈடுபடுத்தியவர்களும் இவர்கள்தான். நாயக்கர் தன்மை என்ற பொருளில் நாயக்கர் என்ற சொல் அமைந்திருந்தாலும், நாளடை வில் இந்த மாவட்டத்திலுள்ள வடுகர்களை மட்டும் சுட்டும் குழூஉக் குறியாக உள்ளது.

O

# மறவர்

''போரெனில் புகலும் புனை கழல் மறவர்'' என புறப்பாட்டும், '' பகையெனில் கூற்றம் வரினும் தொலையான்'' என கலித்தொகையும் சிறப்பித்துக் கூறுகின்ற மறவர் குடிமக்கள் இந்த மாவட்டத் தைச் சேர்ந்தவர்கள். இராமநாதபுரம், முதுகுளத்தூர், கமுதி, திருவாடானை சிவகங்கை வட்டங்களில் பெரும்பான்மையினராக இவர்கள் வாழ்ந்து வரு கின்றனர். தமிழ் மாநிலத்தின் ஐவகைத் திணைகளில் ஒன்றான பாலைத் திணையின் பண்புகள் அனைத்தையும் வாய்க்கப் பெற்ற இந்தப் பெருங்குடி மக்களை இந்த மாவட்டத்தின் தொன்மையான குடிகள் எனக் கொள்ளுதல் பொருத்தமாகும். பிறப்பினால் பெரு மிதமும், போர் ஆற்றலில் பெருவிருப்பும், பழி கொள்ளும் மான உணர்வும் மிக்க இந்த மக்கள் மாற்றானுக்கு மண்டியிட்டது கிடையாது. தங்களது மரபினரான பாண்டிய சோழ, சேதுபதி மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும் இவர்கள், அவர்களுக்கு

கட்டுப்பட்டு வாழ்ந்தனர். ஆனால் அடுத்து வந்த நாயக்க மன்னர்களும் ஆற்காட்டு நவாப்பும் அவர்களை தங்கள் ஆட்சி வரம்புக்குள் உட்படுத்துவதற்காக பல போர்களில் ஈடுபட வேண்டியதாயிறறு.

கிழக்கு இந்தியக் கம்பெனியாரது நிர்வாகத்தின் பொழுது, இந்த மக்கள் அவர்களுக்கு எதிராகப் பெரும் புரட்சியில் ஈடுபட்டனர். இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியின் தலைமையில் ஒரு பெரும் பிரிவும், சிவகங்கை ராணி வேலுநாச்சியார் பிரதானிகள் மருது சகோதரர்கள் அணியில் இன்னொரு பிரிவுமாக இந்த மக்கள் கிளர்ந்து எழுந்து வெள்ளை ஆதிக்கத்தைத் தமிழ் மண்ணில் இருந்து வேரோடு களைந்தெறியப் போராடினர். கி,பி. 1801 இல் இந்தப் போராட்டம், துரோகிகளது செயல்களாலும், வெடிமருந்து பலத்தினாலும் தோல்வி கண்டது. வெற்றி பெற்ற கும்பெனியார் இந்த மக்கள் ஆயுதம்தாங்கும் உரிமையைப் பறித்து கோட்டைகளில் தொகுதிய க வாழக்கூடியகூட்டுவாழ்க்கையையும்குலைத்து,கோட்டைகளை இடித்து தகர்த்து விட்டனர். மீண்டும் இந்த மக்கள் ஆங்கில அரசுக்கு எதிராக அணி திரளக்கூடாது என்பதற்காக, நாளடைவில் இந்த மக்களை சட்ட பூர்வமாக குற்ற பரம்பரையினராகத் தீர்மானித்து அவர்களது சமூக நிலையைத் தாழ்த்தி பெரும் கொடுமைக்குள்ளாக்கினர். இந்த நிலையைக் கண்டு நெஞ்சு நெகிழ்ந்த மகாகவி பாரதியார் 'பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை'' என விடுதலை பாடினார். 1947இல் நாடு விடுதலை பெற்றவுடன் ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் ஆட்சியாளர், அந்த குற்ற பரம்பரைச் சட்டத்தை நீக்கி மறக்குடி மக்களது சமூக நிலையை மீண்டும் உயர்த்தி சலுகைகள் பெறுவதற்காக வளர்ச்

்க்கான penotifide tribeஎனவும்சமூகப்பொருளாதார நிலைகளில்மிகவும் பிற்பட்ட வகுப்பினராக அறிவித்தனர். இளம் சந்ததியினருக்கு கல்விச் சலுகைகளும், உணவு, தங்கும் விடுதி வசதிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தமக்களிடையே தொன்று தொட்டு ஏழு பிரதானமான பிரிவுகள்உள்ளன. அவையாவன:—

1. செம்பி நாட்டு மறவர்
2. கொண்டையன் கோட்டை மறவர்
3. ஆப்பனூர் நாட்டு மறவர்
4. அகத்நா நாட்டு மறவர்
5. ஓரியூர் நாட்டு மறவர்
6. உப்பி கோட்டை மறவர்
7. குறிஞ்சி கோட்டை மறவர்

இந்தப் பிரிவுகளுக்குள்ளும் வேறு சில உட்பிரிவுகளும் இருக்கின்றன. ஆனல் இவை ஒரு பிரிவினர் மற்ற பிரிவினருடன் பழகுதல், உறவு கொள்ளுதல் போன்றவைகளுக்கு இடையூறுகள் இல்லை. இவர்கள் அனைவரும் இந்து மத சைவ நெறியைச் சார்ந்தவர்கள் என்ருலும் அன்ருட வாழ்க்கையில், எல்லா நெறிகளையும், மரபுகளையும் பின்பற்றுபவர்களாக உள்ளனர். இவர்களில் கொண்டையன் கோட்டைப் பிரிவினரைத் தவிர ஏனைய பிரிவினர்களில் பெண்கள் மறுமணம் அங்கீகரிக்கப்பட்டதொன்ருக உள்ளது. கொண்டையன் கோட்டைப் பிரிவைச் சேர்ந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர் குலத்தைச் சேர்ந்த மங்கையர் கணவனை இழந்து கைம்மை நிலையடையும் பொழுது கணவனேடு தீக்குளித்து மாயும் தொன்மையான

பழக்கத்தையும் கொண்டிருந்தனர். கி.பி.1710ல் கிழவன் சேதுபதி இறந்த பொழுது அவரது மனைவிகள் அனைவரும் தீப்புகுந்த சோக நிகழ்ச்சியை இராமநாதபுரம் மானுவல் என்ற நூல் விவரிக்கிறது.

மறவர்களில் மூத்தகுடியாக சேதுபதி மன்னர்கள் விளங்கிவந்தனர். இந்த மக்களது அன்புக்கும் மரி மரியாதைக்கும் என்றென்றும் உரியவர்களாக இந்த மன்னர்கள் விளங்கியதால் பதினேழாம் நூற்றாண்டில் பெரிய மறவர்சீமை தன்னேரிலாத தன்னரசாக விளங்கியது. சேதுபதி மன்னர்களது ஆணை பிறபிக்கப்பட்டால் இரண்டே நாட்களில் இருபதுமுதல் முப்பது ஆயிரம் திண்தோள் மறவர்கள் அணி திரளும் வாய்ப்பு இருந்தது. இவ்விதம் மிகக்குறைந்த கால அளவில் திரட்டப்பட்ட மறவர் அணியொன்று கி. பி. 1659ல் ரகுநாத திருமலை சேதுபதி தலைமையில் மதுரைக்குச் சென்று மதுரைக் கோட்டையை முற்றுகை இட்டிருந்த மைசூர் படைகளை முறியடித்தனர். அவர்களை கொங்குநாடு வரை துரத்திச் சென்று மதுரை அரசின் எல்லைக்கு அப்பால் விரட்டி விட்டு திருமலை மன்னருக்கு ஏற்பட்ட நெருக்கடியை நீக்கியது.

இத்தகையதொரு நெருக்கடி திருச்சியில் ஆட்சி புரிந்த மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு ஏற்பட்டபொழுதும் இராமநாதபுரம் மன்னர் கிழவன் சேதுபதியின் தலைமையில் சென்ற மறவர்படை திருச்சியில் கோட்டையை எதிரிகளிடமிருந்து விடுவித்து நாயக்க மன்னரையும் காப்பாற்றியது. இவைபோன்று தமிழக வரலாற்றுத் திருப்பங்களை ஏற்படுத்திய நிகழ்ச்சி பலவற்றுள் இராமநாதபுரம் சீமையில் மறவர்படை

கலந்து கொண்டு தங்களது தனித்தன்மையை நிலை நிறுத்தி உள்ளனர். பிறவி வீரர்களான இந்த பெருங்குடியினரை, சேதுபதி மன்னர்கள் பலவாறும் பெருமைப்படுத்தி வந்தனர். பட்ட(வர்) காணி, உதிரப்பட்டி, வரிசை வாரம், ஜீவிதம், திசைகாவல் தலக் காவல் என்ற பலதரப்பட்ட மானியங்களை ஏற்படுத்தி அந்த மக்களது வாழ்க்கை வசதிக்கு விளை நிலங்களை அன்பளிப்பாக வழங்கி ஆதரித்தனர். அன்றுபோல் இன்றும், இந்த மக்கள், மல்யுத்தம், சிலம்பம், வேல் எறிதல், களரிவிசுதல், ஏறுதழுவுதல் போன்ற விர விளையாட்டுகளில் மிக்க ஈடுபாடு கொண்டவர்களாக பேராண்மை. தியாகம் ஆகிய பண்புகளுக்கு எடுத்துக் காட்டாக வாழ்வது வருகின்றனர்.

O

# அகம்படியார்

மறவர், கள்ளர் ஆகிய சமூகத்தினர்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்கள் இவர்கள். இவர்களையும் இணைத்து முக்குலத்தோர் என்று இந்த மூன்று சமூகத்தினரையும் அழைத்தல் வழக்கம். அகம்படியர் என்றும், அகமுடையார் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர். பத்து, பதின்மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்த ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகிய சோழமன்னர்களது கல்வெட்டுக்களில் அகம்படி, அகம்படி முதலி, அகம்படியார்பெண்டு என்ற வழக்காறுகள் திருச்சி, தஞ்சை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் காணப்படுகின்றன.

இவைகளில் இருந்து, இந்தச் சமூகத்தினர், சோழர்கள் ஆட்சியின் பொழுது, வாணாதரையர்களைப் போன்று, பாண்டி நாட்டில், அதன் ஒரு பகுதியான கிழக்கு இராமநாதபுரத்தில் குடிபுகுந்தவர்கள் என்பது உறுதியாகிறது. இங்குள்ள பூர்வ குடிகளான மறவர்களுடனும், பின்னர் வேளாளர்களுடனும் அந்நியோன்னியமாக வாழ்ந்து வந்ததன் காரணமாக, விவசாயம், நிர்வாகம் ஆகிய துறைகளில் ஈடுபட்டு, அவற்றைத் தங்களது வாழ்க்கை நிலைகளாகக் கொண்டுள்ளனர். அடுத்து, பதினெட்டாம் நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கிய இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களிடமும் சிவகங்கை அரசர்களிடமும் பல அரசியல் பணிகளில் ஈடுபட்டு உயர்ந்து நின்றனர். இதனைக் குறிக்கும் வகையில் தங்கள் இயற்பெயருடன் சேர்வை அல்லது சேர்வைக்காரர் என்ற விகுதியையும் இணைத்து வழங்கினர். சேர்வை என்பது பணி (சேவை) என்ற பொரு

ளைத் தருகின்ற சொல்லாகும். இந்த உண்மையை இராமநாதபுரம், சிவகங்கை சமஸ்தான ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இவர்களில் வரலாற்றுப் புகழ்படைத்து விளங்கியவர் சிலரும் உண்டு. சேதுபதி மன்னரது தளவாயாக கி.பி. 1736 வரை பணியாற்றிய ஆறுமுகம் சேர்வைக்காரர், தேவிபட்டினத்தை அடுத்த பெருவயல் கிராமத்தில் முருகப் பெருமானுக்கு சிறப்பான ஆலயம் ஒன்றை அமைத்துள்ளார். அவரது விசாலமான இதயத்தைப் போன்று 'இந்த ஆலயமும்', 'இந்த சேர்வைக்காரரது முருக பக்தியையும், சாதனையையும் பறைசாற்றும் பண்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பிரதானியான இராமநாதபுரம் வெள்ளையன் சேர்வைக்காரர், சிறந்த ராணுவ தளபதியாகவும், அரசியல் அறிஞராகவும் விளங்கினார். கி. பி. 1751 இல் மைசூர் படைகளுக்கு தலைமை தாங்கி மதுரை கோட்டையை ஆக்கிரமித்த ஆங்கிலத் தளபதி கோப்பை, நேருக்கு நேர் போரிட்டு தோல்வியுறச் செய்து மதுரையை மீட்ட மாவீரன் இவர்.

அத்துடன் சிவகங்கைச் சீமை, வெள்ளிக்குறிச்சியில் முடங்கிக் கிடந்த ராணி மீனாட்சியின் வளர்ப்பு மகன் விஜய குமாரபங்காரு திருமலை நாயக்கரை சிவகங்கை பிரதானி தாண்டவராயபிள்ளை மூலம் தேடிப் பிடித்து கி. பி. 1752 இல் மதுரை மன்னராக முடிசூட்டி மகிழ்ந்தார் இவர். மேலும் தம்முடன் முரண்பட்ட சேதுபதி மன்னர் ஒருவரை நீக்கிவிட்டு, பிறிதொரு இளவலை இராமநாதபுரம் அரசுகட்டிலில் அமர்த்தியவர். மறவர் சீமையின் மாண்பை நிலைநாட்ட களம்பல கண்ட கர்மவீரன். சேது யாத்திரை பயணிகளுக்கென திருப்புல்லாணியில் சத்திரம் ஒன்றை அமைத்து காஞ்சிரங்குடி என்ற ஊரையும் தானமாக வழங்கிய சீமான்.

அடுத்து இங்கு குறிப்பிடத்தக்கவர் சிவகங்கை மன்னரது பிரதானியாக விளங்கிய முக்குளம் பயந்த முத்துக்கள் மருது சகோதரர்கள். தமிழக விடுதலை இயக்க வேள்விக்கு, தங்களையும் தங்களது குடும்பத்தினரையும் பலியிட்டு தியாகிகளாக வரலாற்றில் வாழ்ந்து வருபவர்கள். இந்த மாவட்டத்து 'அகம்படியர் குலத்தின் அணையாத தீபங்கள். இவர்களது இன்றைய வழியினரான இந்தச் சமூகத்தினர் இந்த மாவட்டத்தின் கிழக்கு வட்டங்களில் அரசுப் பணியிலும், விவசாயத்திலும் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை உடையவர்களாக உள்ளனர். "கள்ளர், மறவர், கனத்ததோர் அகம்படியர், மெல்ல மெல்ல வந்து வெள்ளாளர் ஆயினர்" என்பது இங்கு வழங்கும் முதுமொழி.

O

# கள்ளர்

பல நூற்றுண்டுகளுக்கு முன்னர், செங்கை மாவட்டத்தின் காஞ்சி நகருக்கருகில் உள்ள வல்ல நாட்டின் பூர்வ குடிகளான கள்ளர் தங்கள் வேட்டை நாய்களுடன் தெற்கு நோக்கி வந்தனர். மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களின் வட பகுதிகளிலும் திருச்சி மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளிலும் நிலைத்து வாழத்தொடங்கினர். தாங்கள் வாழ்ந்த பகுதிகளை நாடுகள் என வழங்கினர். உஞ்சனை நாடு, பாலையூர்நாடு, அம்புநாடு, குலமங்கலநாடு, பாப்பாநாடு, வடமலைநாடு, தேன்மலை நாடு, சிறுவயல்நாடு என்பன அவை.

இவர்களில் அம்புநாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும் தங்களை மற்ற பிரிவினர்களை விடச் சிறந்தவர்களாகக் கருதினர். கடவுள் வழிபாடு, சமூகபழக்க வழக்கங்கள் ஆகியவைகளில் வைதீக இந்து மரபுகளைப் பின்பற்றினர். இவர்களது பெண்களும் மூடு பல்லக்கில் செல்லுதல், நிலைமுக்காடு, மேலாடை, ரவிக்கை ஆகியவைகளை அணிதல், கருகமணி, பச்சை, கருவளையல், காப்பு, காரை, கம்மல் ஆகிய அணிகலன்களை பயன்படுத்தல் ஆகிய பழக்கங்களைப் பின்பற்றினர்.

பாலை நிலப்பண்புகளான கொடுந்தொழில்களை வாழ்க்கையாகக் கொண்ட இந்த ஆறலைக் கள்ளர் தன்னரசு நாட்டங்கொண்டவர்களாக, மதுரை மண்டல நாயக்க அரசுக்கு கட்டுப்படாமல் இருந்ததனால் அரசினருக்கும் அவர்களுக்கும் பல மோதல்கள் ஏற்பட்டன. அவ்வப்பொழுது நிலவிய நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு அரசினரை அச்சுறுத்தி அப்பாவி மக்களைத் துன்புறுத்தி வந்தனர்.

அவர்களது போர் ஆற்றலை நன்கு உணர்ந்த இராமநாதபுரம் மன்னர் கிழவன் சேதுபதி, அவர்களில் சிறந்து விளங்கிய ரகுநாதராயத் தொண்டமானையும் அவரது சகோதரர் நமணத் தொண்டமானையும் இராமநாதபுரத்திற்கு வரவழைத்து தமது ராணுவ சேவையில் அமர்த்தி கௌரவித்ததுடன், அவர்களைச் சார்ந்தவர்களையும் தம்முடைய திருமெய்யம், கீழாநிலை அறந்தாங்கி ஆகிய கோட்டைகளில் காவல் பொறுப்பில் ஈடுபடுத்தினர். நாளடைவில் தொண்டைமான்களது சகோதரியான காதலிநாச்சியாரை தமது இரண்டாவது மனைவியாக சேதுபதி மன்னர் ஏற்றுக் கொண்டார்.

இதன் காரணமாக தமது மைத்துனர்களாகிவிட்ட தொண்டமான்களது அரசியல் அந்தஸ்த்தை உயர்த்தினார். அதுவரை அவர்கள் பிலாவிடுதி என்ற ஊரின் நிலக்கிழரர்களாக மட்டும் விளங்கியவர்களை தமது திருமெய்யம் கோட்டைக்கு அதிபதியாக நியமனம் செய்து சின்னரர்மபாணம் என்ற சிறந்த வீரவாளையும் வலம்புரிச் சங்கம் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கினர். இது நடைபெற்றது கி.பி. 1685—இல். இதனைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஏற்பட்ட அரசியல் விளைவுகளினால் புதுக்கோட்டை என்ற தன்னரசு உருப் பெற்று, கள்ளர் சமூகத்தினரான தொண்டமான்களது ஆட்சியில் கி. பி. 1947 வரை நீடித்தது.

கிழவன் சேதுபதியின் மறைவுக்கு (கி.பி. 1710) பின்னர் தொண்டமான்களுக்கும் சேதுபதிகளுக்கும் நல்ல உறவு நீடிக்கவில்லை. விஜயரகுநாத சேதுபதியின் ஆட்சிக் காலத்தில் இராமநாதபுரம் சீமையின் வடபகுதியில் கள்ளர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி நூற்றுக்கணக்கான ஆடு மாடுகளைக் கவர்ந்து சென்றனர். ஆத்திரங் கொண்ட சேதுபதி மன்னர்

அவர்களைப் பின்தொடர்ந்து தாக்குதல் நடத்தி அவர்களில் இரண்டாயிரம் கள்ளர்களைப் படுகொலை செய்தார். அதுமுதல் இந்த மாவட்டத்தில் கள்ளர்களினால் தொந்தரவு எதுவும் ஏற்படவில்லை. அவர்களும் விவசாயத்தில் ஓரளவு ஈடுபட்டு மன்னருக்கு அடங்கிய குடிகளாக இருந்து வந்தனர்.

இன்றைய சிவகங்கை, திருப்புத்தூர், காரைக்குடி, தேவகோட்டை ஆகிய வட்டங்களில் உள்ள சிற்றூர்களில் கள்ளர் சமூகத்தினர் ஆங்காங்கு வாழ்ந்து வருகின்றனர். நாட்டார் என்றும் அம்பலக்காரர் என்றும் அவர்கள் பிற சமூகத்தினரால் மரியாதையுடன் அழைக்கப்படுகின்றனர். முக்குலத்தோர் என்ற பெரும் அமைப்பில் இவர்களும் ஒரு பகுதியாகி விட்டதால், இவர்களது நடை, உடை, பழக்க வழக்கங்களில் வேறுபாடு எதுவும் இல்லை. ஆனால் பெண்கள் மட்டும் தங்கள் கூந்தலை வாரி, தலையின் பின்பாக சற்று உயரமாக கொண்டை அமைத்துக் கொள்வதில் இருந்து இந்தப் பெண்களை மறவர் அகம்படியர் ஆகிய பெண்களிடமிருந்து பாகுபடுத்தித் தெரிந்து கொள்ள இயலும். சீதக்காதி நொண்டி நாடகம், திருப்புல்லாணி நொண்டி நாடகம், காட்டு பாவா சாகிபு அம்மானை, சேதுபதி விறலிவிடு தூது ஆகிய பிற்கால இலக்கியங்களில் கள்ளர் பற்றியும், அவர்களது களவுத் தொழில் பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன. தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட பொதுப்பெயர். அவர்களது தொழிலும் வாழ்க்கைநிலையும் மாறிவிட்ட பொழுதும் தொடர்ந்து அதே பெயரில் அந்த சமூகத்தினர் இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றனர். மேலும் அண்மை மாவட்டங்களான புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களின் சில பகுதிகளில் இந்த மக்கள் பெரும்பான்மையினராக இருந்து வருகின்றனர்.

# செட்டிகள்

இந்தப் பெயரில் வழங்கப் பெறும் சமூகத்தினர் நான்கு வகையினர் இந்த மாவட்டத்தில் உள்ளனர். அவர்கள் நாட்டுக் கோட்டை அல்லது நகரத்தார், மஞ்சப்புத் தூர் அல்லது ஆயிரவைசியர், தெலுங்குச்செட்டி அல்லது கோமுட்டி செட்டி, வேளாண் அல்லது வெள் ளாளச் செட்டி எனப்படுவர். தங்கள் இயற்பெயரின் தொடர்பாக செட்டி அல்லது செட்டியார் என்ற சொல்லையும் இணைத்து அவர்கள் வழங்கி வருகின்றனர். இந்தச் சொல் தமிழ்ச்சொல் அல்ல. தமிழில் வந்துள்ள திசைச் சொல்லாகும். சிரேஷ்டி என்ற வடசொல்லின் திரிபு என்றும் எட்டி என்ற தமிழ்ச் சொல்லின் விகாரம் தான் செட்டி என அறிஞர்கள் கருதுகின்றனர்.

## 1. நகரத்தார்

இது நாட்டுக்கோட்டைச் செட்டிகளைக் குறிப்பதாகும். முந்தைய தமிழ்ச் சமுதாயத்தின் வணிகப் பிரிவினர் களின் குடியிருப்பு நகரம் என்றும் நேமம் எனவும் குறிக் கப்பெற்று வந்தது. அந்த மரபினரின் வழியினர் என் பதற்காகவே இவர்கள் நகரத்தார் என வழங்கப்பெற் றனர். இந்த மாவட்டத்தில் திருப்புத்தூர், காரை குடி, தேவகோட்டை, சிவகங்கை ஆகிய வட்டங்களில் இவர்கள் ஆங்காங்கு வாழ்ந்து வந்த பொழுதிலும் இவர்களது பூர்வீகம் சோழவளநாட்டு பூம்புகார் எனச் சொல்லப்பட்டு வருகிறது. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் புகார் நகரம் கடற்கோளினால் அழிவு எய்திய பொழுது, அங்கிருந்து வெளியேறிய மக்கள் கூட்டத் தொகுதியினரின் வழியினராக இவர் கள் கருதப்படுகின்றனர். தென் புலத்தில் பாண்டிய நாட்டில் வைகை ஆற்றுக்கு வடக்கேயும், பிரான்

மலைக்கு கிழக்கேயும், வெள்ளாற்றுக்குத் தெற்கேயும் இவர்களது குடியேற்றங்கள் ஏற்பட்டன.

ஆனால், முதலில் இன்றைய இளையாத்தங்குடியில் சிறிது காலம் தங்கி இளைப்பாறிய பிறகு, சிறுசிறு தொகுதியினராக ஒன்பது ஊர்களில் குடியேறினர். இன்று அந்த ஒன்பது ஊர்களையே தங்கள் பூர்வகிளை களாகக் கொண்டு மணவினை உறவினை உருவாக்கிக் கொள்கின்றனர். ஒரே கிளையினர் தங்களுக்குள் மண உறவுகள் கொள்வது இல்லை. ஆனால் பங்காளிகளாக பாந்தத்துடன் பழகிக் கொள்கின்றனர். இளையாத்தங் குடி, மாத்தூர், இரணியூர், பிள்ளையார்பட்டி, வைரவன்கோவில், இலுப்பக்குடி, நேமம், சூரக்குடி, வேலங்குடி ஆகியவைகளே அந்த ஒன்பது ஊர்களாகும். இன்னும் இந்த மக்கள் அருவியூர் என்ற குலசேகர பட்டணத்திலும், பிரான்மலையிலும் பன்னெடுங் காலம் நிலைத்து இருந்தமைக்குச் சான்றாக அந்த ஊர்களில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. இந்த ஊர்களைத் தவிர கீழச் சேவல்பட்டி, செவ்வூர் கண்டனூர், கானாடு காத்தான், பள்ளத்தூர், கோட்டையூர், காரைக்குடி, அரியக்குடி, தேவகோட்டை, நாட்டரசன் கோட்டை ஆகிய ஊர் களிலும் பெரும்பான்மையினராக இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழகத்தின் தொன்மையான வணிகச் சாத்துக்களான நானா தேசிகளையும், திசையாயிரத்து ஐந்நூற்று வரை யும் சித்திர மேழி சாத்தினரையும் நினைவுபடுத்தும் வண்ணம் அண்மைக் காலம் வரை கடல் கடந்த நாடு களில் வாணிபத்தில் ஈடுபட்டு வற்றாத பெருஞ் செல் வத்தை ஈட்டினர். இந்த வணிகத்திற்கு அவர்களது பேச்சு வழக்கில் ''கொண்டு விற்றல்'' என வழங்கப் படுவதுஉண்டு. இவர்களது வணிகமரபின் தொன்மை

யை நினைவுபடுத்தும் வண்ணம், மணவிழாவின் பொழுது இவர்களது மணமகன் குதிரையின் மீது வந்து பெண் கொள்ளுதலை இன்றும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். மேலும், மணவிழா சம்பந்தப்பட்ட கைக்கூலி, மாமியார் பணம், நகைவகைகள் அளவு, முந்தைய செலாவணியான வராகன் கணக்கில் நிர்ணயிக்கப்படுகின்றன. இன்றும் இவர்களது இல்லங்களில் நடைபெறும் சமூக நிகழ்ச்சிகளும் நல்ல தமிழில் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். புதுமை, கார்த்திகைப்புதுமை திருவாதிரைப் புதுமை, பொங்கல், சாந்தி, படைப்பு, மருந்திடல், தீர்த்தம் குடித்தல், பிள்ளையார் நோன்பு, பந்தல் பிடுங்கல் ஆகியன அவைகளாகும்.

இரண்டாவது உலகப் போரின் தொடர்பாக இலங்கை, பர்மா, சயாம், மலேஷியா ஆகிய நாடுகளில் இருந்து வெளியேறிய இந்த சமூகத்தினர் நமது தாயகத்தில் பலதுறைகளிலும் ஈடுபட்டு சிறப்பாக உழைத்து வருகின்றனர். நல்ல பண்பாடும், சிறந்த வாழ்க்கை நிலையும் கொண்ட இவர்கள் சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். இதன் காரணமாக திருவண்ணாமலை, தில்லை, மதுரை, இராமேஸ்வரம் ஆகிய சிவாலயங்களில் குடமுழுக்கு திருப்பணிகளை நிறைவேற்றியுள்ளனர். சமய நெறிகளில் இந்த சமூகத்தினர் உபதேசம் பெறுவதற்காக ஆடவருக்கு கிளாமடம், பாதரக்குடி ஆகிய ஊர்களிலும், மகளிருக்கு துலாவூரிலும் மடங்கள் நிறுவப் பெற்றுள்ளன. இன்றும் தலயாத்திரையாகச் செல்லும் நகரத்தார்கள் வசதியாகத் தங்கி வருவதற்கு இந்தியா முழுவதிலும் கோயில் உள்ள ஊர்களில் 'நகரத்தார் விடுதி'களையும் நிர்மாணித்து பராமரித்து வருகின்றனர்.

## 2. ஆயிரவைசியர்

செட்டி என்ற விகுதியுடன் வழங்கப்படும் இந்த மக்கள் நகரத்தாருக்கு—நாட்டுக் கோட்டை செட்டி மக்களுக்கு—அடுத்த படியான எண்ணிக்கையில் இந்த மாவட்டத்தில் உள்ளனர். இவர்களது பூர்வீகம் பற்றிய பலவிதமான செவிவழிச் செய்திகள் உள்ளன. ஆனால் வரலாற்று வடிவிலான தடயங்கள் எதுவும் இல்லை. எனினும் அவை, இந்த சமூகத்தினர், நகரத்தார் போன்று வடபுலத்தினின்றும் இந்த மாவட்டத்தில் குடிபுகுந்தவர்கள் என்பதையே குறிக்கின்றன. பெரும்பாலும் சோழ நாட்டிலிருந்து தென் திசைக்கு வந்தவர்கள் என்பது பெரும்பான்மையினரது கருத்து. ஆனால் எட்கார் தர்ஸ்டன் என்ற நூலாசிரியர் இவர்கள் தொண்டை மண்டலம், மஞ்சக்குப்பம் பகுதியினின்றும் வந்தவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் திருவாடானை, இராமநாதபுரம், பரமக்குடி. இளையாங்குடி ஆகிய வட்டங்களில் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். திருவாடானை வட்டத்திலுள்ள பாண்டுகுடியும், பரமக்குடி வட்டத்தில் உள்ள பரமக்குடியும் இவர்களது பழம்பெரு பகுதிகளாகக் கருதப்படுகின்றன. இவர்கள் பெரும்பாலும் ஜவுளி, அரிசி, பலசரக்கு வணிகத்தில் ஈடுபட்டு உள்ளனர். இவர்களை மஞ்சப்புத்தூர் செட்டிகள் எனக் குறிப்பிடுவது உண்டு. ஒரு வேளை மஞ்சள்குப்பம் ஊரை தாயகமாக உடையவர்கள் என்ற காரணத்தின் அடிப்படையாக வந்த வழக்காக இருக்கலாம். இவர்களில் சிறுபிரிவினர் பொன், வெள்ளி, நகைகள் வியாபாரத்திலும் அந்த நகைகள் ஈட்டின் பேரில் கடன் தொகை வழங்கும் தேவா தேவிலும் ஈடுபட்டு உள்ளனர். இவர்களைக் காசுக் கடை செட்டிகள் அல்லது மதுரைச் செட்டிகள் என வழங்குதல் வழக்கமாக உள்ளது.

இராமநாதபுரம் சீமையை ஆண்ட சேதுபதிகளின் சிறப்பு மிக்க ஆட்சிக்காலத்தில் இந்தச் சிறுபான்மை சமூகத்தின் சிலர் சேது நாட்டின் பெருமைக்குரிய குடி மக்களாக இருந்ததை கி.பி.1745 ஆம் ஆண்டைய செப்புபட்டயம் ஒன்று சுட்டிக் காட்டுகிறது. பின்னர் தொடர்ந்த கிழக்கிந்திய கம்பெனியார் ஆட்சிக்காலத் தில் சென்னையில் தழைத்து ஓங்கிய 'பேரி' செட்டி களைப் போன்று இவர்கள் எந்தவித முன்னேற்றமும் எய்தவில்லை.

நாடு முழுவதும் தேசிய விடுதலை உணர்வினால் உந்தப் பட்டு அரசியல் எழுச்சி கொண்ட பொழுது இந்த சமூ கத்தினரும் தங்களது தியாககாணிக்கையை நாட்டிற்கு நல்கினர். ஆனால் நாட்டு விடுதலையின் தாக்கம் அவர் களுடைய சமூக நிலையில் தீவிர மாற்றங்களைக் கொணர வில்லை. தொடர்ந்து வைதீக பழக்க வழக்கங்கள், வர தட்சணைக் கொடுமை, கல்வியில் பின்னடைவு ஆகிய வை அவர்களிடையே நிலைத்துள்ளன.

என்றாலும் பரமக்குடி நகரில் உள்ள இந்த சமூகத்தினர் மட்டும் மிகவும் ஐக்கியமான முறையில் ஆயிரவைசியர் சபை என்ற அமைப்பின் கீழ் தங்களது சமூகம் சம்பந் தப்பட்ட பொதுக் காரியங்களை நிர்வகித்து வருகின்ற னர். பரமக்குடி நகரில் உள்ள ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ் வரர் திருக்கோயில், ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி திருக் கோயில், ஆயிரவைசியர் மேல்நிலைப்பள்ளி, ஆயிரவை சியர் உடற்பயிற்சி சாலைகள் ஆகியவைகளை இந்தச் சபையினர் பராமரித்து நிர்வகித்து வருவதுடன், பர மக்குடி அய்யாச்சாமி செட்டியார் வகையறாக்கள் இந் தச் சமூகத்தினரது நலனுக்காக ஏற்படுத்தியுள்ள "நந் தவன கட்டட டிரஸ்ட்" என்ற பொது அமைப்பினையும் இந்தச் சபை இயக்கி வருகிறது.

### 3. வைசியர்

இந்து சமயத்தில் இரண்டாவது நிலையில் உள்ள இந்த மக்கள், இந்த மாவட்டத்தில் இராமநாதபுரம், இராமேஸ்வரம் வட்டங்களில் மட்டும் உள்ளனர். இவர்கள், இன்றைய ஆந்திர மாநிலத்தினின்றும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு குடியேறியவர்கள். என்றாலும், அவர்களது நடை, உடை, பாவனைகள் தமிழ்ச் சமுதாயத்தின் சூழலில் முற்றிலும் மாற்றம் பெற்றுள்ளன. ஆனால் அவர்களது பேசும்மொழிமட்டும் தெலுங்காக இருந்து வருகிறது.

வைதிக இந்து சமுதாயத்தைப் பின்பற்றும் இவர்கள் சைவ, வைணவ நெறிகளைக் கடைப்பிடித்தாலும், சக்தி வழிபாட்டில் மிகுதியாக ஈடுபட்டு உள்ளனர். சக்தியை கன்னித் தெய்வமாக வாசவி என்றும், கன்னிகா பரமேஸ்வரி என்று வழங்கி வழிபட்டு வருகின்றனர். ஏனைய செட்டி மக்களைப் போன்று இவர்களும் வாணிபத்தை குறிப்பாக பலசரக்கு வாணிபத்தைத் தங்களது வாழ்க்கையாக மேற் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில், சிறந்து விளங்கியவரும் நாகூரை இருப்பிடமாகக் கொண்டிருந்தவருமான தனவணிகர் ஒருவர் கி. பி. 1434 இல் இராமேஸ்வரம் திருக்கோயிலின் மேற்கோபுர அமைப்பிலும், ஆலயத்திருமதில்களை நிர்மாணிப்பதிலும் பெரும்பங்கு கொண்டதாகத் தெரிய வருகிறது. இத்தகைய திருப்பணியினை இராமநாதபுரம் கோதண்டராம சுவாமி ஆலயத்திலும், இந்தக் சமூகத்தைச் சேர்ந்த சென்னை தம்புசெட்டி கி. பி. 1715-20 இல் நிறைவேற்றியதாகத் தெரிகிறது. மற்றும் இந்த நூற்றாண்டில் இந்தச் சமூகத்தினர் இராமநாதபுரம் பகுதியில் சிறப்புடன் இருந்ததை சேதுபதி மன்

னரது கி. பி. 1745 ஆம் ஆண்டைய ஆவணங்களும், இதர அரசு ஆவணங்களும் உறுதி செய்கின்றன. ஆனால், இன்று இவர்களிடையே சமுதாய உணர்வும், அரசியல் ஈடுபாடும் இல்லாத காரணத்தினால், கல்வி மேம்பாடு, பெண்கள் முன்னேற்றம் ஆகிய துறைகளில் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களைப் போன்று குறிப்பிடத்தக்க நிலைகளை இவர்கள் எய்தவில்லை.

O

## 4. வேளாண்செட்டி முதலியோர்.

இந்த மாவட்டத்தில் செட்டி எனத் தங்களை அழைத்துக் கொள்ளும் இன்னும் சில பிரிவினர்கள் உண்டு. அவர்களில் சிறப்பாக குறிப்பிடத்தக்க சிறுபான்மையினர் வேளாண் செட்டி என்னும் பிரிவினர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய வட்டங்களில் உள்ளனர். செட்டி என்ற தங்களது அடைமொழிக்கு ஏற்ப, இவர்கள் முழுமையாக வியாபாரத்தில் இல்லை. விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வாணிகத்தின் ஏற்றத் தாழ்வுகள், அரசியல் சூழ்நிலைகள் காரணமாக இவர்களது முந்தையோர், வாணிகத்திலும் விவசாயத்திற்கு மாறி இருக்கலாம்.

இவர்கள் இந்து சமயத்தினராக இருந்தாலும் இவர்கள் குலதெய்வம் பட்டாணி என வழங்கப்படுகிறார். இளம்பிறைக் கொடி தாங்கி, பரிமேல் அமர்ந்தவரான வீரத்திரு உருவம் தான் இவர்களது பட்டாணி எனப்படுகிறார். இந்தக் குதிரைக் கோல் ராவுத்தரை ஆயிர வைசிய செட்டிகளும் பட்டாணி அல்லது கோரக்கி நாதர் என வழங்கி வழிபட்டு வருவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. (திருப்புவனத்தை அடுத்து இந்த பட்

டாணி கோரக்கி நாதர் ஆலயம் ஒன்று உள்ளது.) தமிழக இஸ்லாமியருக்கும் இந்த செட்டி மக்களுக்கும் இடையில் பன்னிரண்டு, பதின்மூன்றும் நூற்றாண்டு களில் ஏற்பட்ட வணிகத் தொடர்பின் அடிப்படையில் பிற்க லத்தில் 'பட்டாணி' தெய்வ வழக்கும் வழிபா நும் புகுந்து இருக்கலாம்.

இவர்களை தவிர, அருப்புக்கோட்டை திருச்சுழியல் வட்டத்தில் உள்ள சாலியரும் தங்களைச் செட்டிகள் என அழைத்துக் கொள்கின்றனர். சேணியர் என்றும் சேடர்கள் என்னும் இவர்களது தொழிலும் வாணிபம் இல்லை. மாறாக நெசவுத் தொழில்தான் இவர்களது நிகரற்ற வாழ்க்கையாக உள்ளது. தேவர்களுக்கும் ஏற்ற ஆடைகளை நெய்து தரவல்லவர்கள் என்ற பொ ருளில் இவர்களைத் தேவாங்கர் எனவும் வழங்குதல் உண்டு. பிறிதொரு பிரிவினர், இலை வாணிபச் செட்டி கள் என்ற பிரிவினர், எள்ளில் இருந்து எண்ணெய் வடிக்கும் செக்காலைகளை இயக்குபவர்கள். ''செக்காரச் செட்டி மக்கள்'' என்பது மகாகவி கம்பனது வாக்கு. இன்று விஞ்ஞானம் வளர்ந்து மனித வாழ்க்கைக்கு உத வும் பணியில் பொறிகள் ஈடுபடும் நிலைக்கு வந்த பிறகும் இவர்கள் மாடுகள் பூட்டிய செக்கடிகளைக் கைவிடுப வர்களாக இல்லை.

O

# சாணார்

தென்னிந்திய பூர்வகுடிகளான இவர்கள்; வெவ்வேறு பெயர்களில் கேரளத்திலும் கர்நாடகத்திலும் வழங்கப் பட்டாலும், இந்த மாவட்டத்தில் சாணூர் என்றே வழங்கப்பட்டு வருகின்றனர். பதினோராவது நூற்றாண் டிற்கு முன்னர் இந்தச் சொல் தமிழக இலக்கியங்களி லும் கல்வெட்டுக்களிலும் காணப்படவில்லை. கள் இறக் கும் தொழிலையுடையவர்களை ஈழவர், பழையர், படு வர், துவசர் என்ற பெயர்களில் அழைக்கப்பட்டு வந்த னர். அவர்களது குடியிருப்பு ஈழச்சேரி என வழங்கப் பட்டது. பின்னர் தமிழ்நாட்டில் வடமொழி பிடிப்பு இறுகிய நிலையில் இந்த மக்களைக் குறிக்கசௌந்திகர் என்ற வடசொல் தமிழ்ச் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டது. அத்துடன் கிராமணி என்ற வடசொல்லும் நாடார் என்ற தமிழ்ச் சொல்லும் வழக்கிற்கு வந்தன. சாறு என்ற சொல் மூலத்திலிருந்து சாணூர் உருப்பெற் றதாக ஒரு சிலரும், சான்றோர் என்ற சொல்லின் திரிபு என இன்னும் சிலரும், இந்தச் சொல்லுக்கு தொன்மை கற்பிப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை. கள் இறக்கும் மரத்தில் ஏறுவதற்கு முன்னர் கால்களில் அணிந்து கொள்ளும் "நாறின் வளை" விரித்த கையின் (சாண்) அளவு இருப்பதால், அதனுடைய அடிப்படை யில் "சாண் நாறு" என மாற்றம் பெற்று இருப்பதாக வேறுசில ஆய்வாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர் இந்தச் சொல்லின் மூலம் எப்படி இருந்தாலும் அதனுல் சுட்டப்படுகிற பொருள் கள் இறக்கும் தொழிலை உடை யவர் — என்பதுதான். இந்தத் தொழிலில் அபாயமும் சிரமமும் இருந்தாலும் இந்தத் தொழிலினை இந்த சமூ கத்தினர் முழுக்கவும் தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு

உரியதாக கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்வரை நம்பி இருந்தனர். அதன் காரணமாக இவர்கள், இந்து சமயவாதிகளால் தீண்டப்படாதவராகப் புறக்கணிக் கப்பட்டு நடத்தப்பட்டனர். சமுதாய சமத்துவத்திற் காக இந்த சமூகத்தினர் மேற்கொண்ட கிளர்ச்சி யொன்று இந்த மாவட்ட வரலாற்றில் அல்லாமல் இந்த நாட்டு சமூக இயக்கங்களின் முன்னோடியாக என் றென்றும் விளங்கும் என்பது திண்ணம்.

அந்த வரலாற்று நிகழ்ச்சி 14. 5. 1897 இல் கமுதியில் நடைபெற்றது. அன்று சாணார் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் திரண்டு எழுந்தவர்களாக, அங்குள்ள விசுவ நாத ஆலயத்திற்குள் நுழைந்து இறைவழிபாட்டை நடத்தினர். இறைவனை வழிபடுவதற்கு ஏனைய மக்கட் பிரிவைச் சேர்ந்தவர்களைப் போல தங்களுக்கும் சம உரிமை உண்டு என்பது சாணார்களது கோரிக்கை. இந்தப்புரட்சி நடவடிக்கையால் தங்களது ஆலயத்தின் புனிதம் பாதிக்கப்பட்டு விட்டதாக ஆலய நிர்வாகி யும் மற்றவர்களும் சேர்ந்து ஆலயத்தை அடைத்து விட்டு, மாவட்ட வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கின் தீர்ப்பு ஆலய நிர்வாகி களுக்கு சாதகமாக அமைந்து விட்டது. ஆகம விதி களுக்குப் புறம்பாக சாணார்களது ஆலயப் பிரவே சத்தை அனுமதிக்க இயலாது என்று இந்த மக்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் முறையீடு தொடுத் தனர். எதிரான தீர்ப்புத்தான் அங்கும் கிடைத்தது. இறுதியாக, இந்தியர்களுக்கு அப்பொழுது மிக உயர்ந்த நீதி வழங்கும் அமைப்பாக இருந்த இங்கி லாந்தில் இருந்த பிரிவுகவுன்சிலுக்கும் மேல் முறையீடு செய்தனர். அங்கும் எதிர்பாராத தீர்ப்புதான் கிடைத்

தது. ஆனால் இந்தியா விடுதலையடைந்த பிறகு இந்தச் சமூகத்தினரது கோரிக்கை சட்டரீதியாக நிறைவேறியது.

சமுதாய சமத்துவம் பெற்ற இந்த மக்களது வாழ்வு கடந்த நாற்பது ஆண்டுகளில் முழுக்க முழுக்க மாறி விட்டது. கள்வடிக்கும் தொழிலில் ஐந்து சத மக்கள் கூட ஈடுபடவில்லை. ஆனால் தானியங்கள், பலசரக்கு, தீப்பெட்டி தயாரித்தல், பெயிண்ட் உற்பத்தி, வெடி மருந்து, செம்பு அலுமினிய பாத்திரங்கள் தயாரிப்பு, அச்சுப்பதித்தல் (வித்தோ), அச்சிடுதல் ஆகிய தொழில் களில் ஈடுபட்டு அவைகளைத் தங்கள் வயப்படுத்திக் கொண்டுள்ளனர். இத்தகைய புதிய தொழில்களின் பிரதானக் கேந்திரமாக சாத்தூர், சிவகாசி, விருது நகர் ஆகிய ஊர்கள் விளங்கி வருகின்றன.

இவர்களுடைய இந்த துரித வளர்ச்சிக்கு அவர்களி டையே உள்ள ஒற்றுமை, பொறுமையோடு உழைக் கும் மனப்பான்மை ஆகியவை காரணியங்களாகும். இவை களுக்கு மேலாக இந்த சமூக மக்களது நலன் கருதி ஆங்காங்கு அவர்கள் அமைத்துள்ள மகிமை என்ற பொதுநிதியும், இந்த மக்கள் உழைத்திட, உழைப் பால் உயர்ந்திட ஊக்கமளித்து வருகிறது.

இவர்களிடையே தக்ஷிண மாற நாடார் என்றும் இந்து நாடார் என்றும் இருபெரும் கிளைகள் இருந்து வந்த பொழுதிலும், அவர்களது உறவு முறை, தொழில் முன்னேற்றம் ஆகியவைகளுக்கு அவை இடையூறாக இருந்து வரவில்லை. இவர்களில் ஒரு பகுதியினர் கிறித் துவ மதத்தை தழுவியுங்கூட இவர்களுக்கிடையில் மணவினை உறவுகள் தொடர்ந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

# சௌராஸ்டிரர் அல்லது பட்டுநூல்காரர்

இந்த மாவட்டத்தில் உள்ள மிகச் சிறுபான்மையோரில் ஒரு பிரிவினர் சௌராஸ்டிரர் இவர்கள் இராமநாத புரம், பரமக்குடி ஆகிய இரு நகரங்களில் மட்டும் உள்ளனர். சாதாரணமாக இவர்கள் பட்டு நூல் காரர் கள் என்றே அழைக்கப்படுகின்றனர். தமிழகத்தில் பல விதமான நெசவாளிகள் இருந்து வந்த பொழுதிலும், அவர்களினின்றும் இவர்களைப் பிரித்துக் காட்டுவதற் காகவே இவர்கள் இங்ஙனம் அழைக்கப்பட்டனர்.

இவர்களைப்பற்றிய பழமையான செய்திகளில் ஒன்று இவர்கள் வடஇந்தியாவில் மத்ராவில் இருந்து குஜராத் தில் குடியேறினரென்றும்' பின்னர் பன்னிரண்டு பதின் மூன்றுவது நூற்றுண்டுகளில் குஜராத்தில் இஸ்லா மியரது படையெடுப்புகளின் பொழுது தெற்கு மேற்கு கடற்கரைகளிலிருந்து உள்நாட்டில் குடியேறினர் எனத் தெரியவருகிறது. பதினாரும்நூற்றுண்டின் துவக்கத்தில் விஜயநகரப் பேரரசு சிறப்புடன் விளங்கிய பொழுது இவர்கள் அந்த அரசில்குடியேறி தங்களது கைவண்ணத் தாலும் கற்பனைத்திறத்தாலும் பேரரசரும்' பாமர ரும் அணியத்தக்க புத்தாடைகளை நெய்து உதவினர் அதே அரசு பின்னர் கன்னியா குமரிவரை வியாபித்த பொழுது, இந்த மக்களும் தெலுங்கு நாட்டில்இருந்து தமிழ்நாட்டில் குடியேறினர், குறிப்பாக அவர்சள் மதுரையில் நிலைகொண்டனர். ஆடம்பரத்திலும், ஆலய விழாக்களிலும் பெரு விருப்புகொண்ட திருமலைக் மன்னரது ஆட்சியிலும் அடுத்து ராணி மங்கம்மாள் ஆட்சியிலும் அரசியல் ஆதரவு பெற்றுத் திகழ்ந்தனர்,

பின்னர் பரமக்குடி பாளையத்தில் தும்பிச்சி நாயக்கரது ஆதரவினாலும் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது ஆதரவினாலும் இந்த மாவட்டத்தில் குடியேறினர். இந்துமத அனுஸ்டானங்களை, பிராமணர்களைப் போல இவர்களும் மேற்கொள்ளலாம் என்று தெளிவாக கி.பி. 1705 இல் அரசியல் உரிமை வழங்கிய ராணி மங்கம்மாளின் சாசனத்தில் இந்த சமூகத்தினர் 'பட்டு நூல்காரரர்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நாளடைவில், இவர்கள் தங்களைசௌராஷ்டிரர் எனவும் சௌராஷ்டிர பிராமணர் எனவும் அழைத்துக் கொண்டனர். தமிழக பிராமணர்களைப் போன்று தங்கள் பெயர்களின் விகுதியாக ஐயர், ஐயங்கார், ராவ் பாகவதர், சாஸ்திரிகள் என்ற சொற்களை இணைத்துக் கொண்டனர். இந்துமத வைணவப் பிரிவை (வடகலை)ச் சார்ந்து ஒழுகிவரலாயினர். ஆண்கள் பிராமணர்களைப் போன்றும் பெண்கள் தெலுங்கர் போன்றும் தங்கள் ஆடை அணிகலன்களினால் தோற்றமளிக்கின்றனர். இன்னும், இவர்கள் பேசுகின்ற சௌராஸ்டிரமொழியில் தெலுங்கு மொழிச் சொற்களின் கலப்பு மிகுதியாக உள்ளது.

பரமக்குடி நகரில், வைகை ஆற்றங்கரையின் இருகரைகளிலும் நிலைத்து வாழுகின்ற இவர்கள் நெசவுத்தொழிலை மேற்கொண்டுள்ளனர். சமூக, பொருளாதார நிலைகளில் பின்தங்கியவர்களாக இருந்தாலும் அரசியல் விழிப்புடையவர்களாக இருக்கின்றனர். இது காரணமாக பல இயக்கங்களில் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளனர்.

O

# நிகழ்ச்சிக் கோவை

- பாண்டிய மன்னர்களது வாரிசு உரிமைப் போரில் பராக்கிரம பாண்டிய தேவருக்கு உதவுவதற்காக இலங்கையிலிருந்து பெரும் படையொன்று இராமேஸ்வரத்தில் கரையிறங்கியது. (1168)
- பாண்டிய நாட்டில் இஸ்லாமிய பிரச்சாரம் செய்வதற்காக மதீனத்திலிருந்து தொண்டர்களுடன் வந்த செய்யது இபுறுகிம் (வலி) அவர்கள் பாண்டியர்களுடன் போரிட்டு உயிர்த் தியாகியானது. (1192)
- பிரபல வெனீஸ் நகரச் சுற்றுலாப்பயணி மார்க்கோ போலோ இராமநாதபுரம் மாவட்ட கடற்கரைப் பகுதிக்கு வருகை தந்தது. (1292)
- அலவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக்காபூர் டில்லியிலிருந்து இராமேஸ்வரம் வரை பயணம் வந்தது. (1311)
- இலங்கையிலிருந்து மாலிதீவுகளுக்குப் புறப்பட்ட உலகப்பயணி இபுனு பதுத்தா கடற்கொந்தளிப்பினால் கிழக்குக் கடற்கரை வந்து சேர்ந்தது. (1344)
- மறவர் சீமையில் மதமாற்றம் சம்பந்தமாக போர்ச்சுக்கல் நாட்டு பாதிரியார் கான்சால்வோ பெர்ணாண்டிஸின் சுற்றுப்பயணம். (1606)
- இராமநாதபுரத்தில் சாத்தஞர் ஆலயம் அமைக்கப்பட்டு சேதுபதி மன்னரால் நிலக்கொடை வழங்கப்பட்டது. (1628)

- திருமலை நாயக்கரது தளபதி ராமப்பையனுக்கும் ராமநாதபுரம் மன்னர் இரண்டாவது சடைக்கன் சேதுபதிக்கும் போர் நடைபெற்றது. (1639)
- முதலாவது உலகப் போரில் நேச நாடுகளின் உதவிக்காக இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி விமானம் ஒன்றை வாங்கி ராம்நாட் என்று பெயர் சூட்டி வழங்கியது. (1915
- வெள்ளைப் பரங்கியர்க்கு எதிராக தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே சுதேசிக் கப்பல் சேவை ஒன்றைத் துவக்க திரு வ. உ. சிதம்பரம் முயன்ற பொழுது இராமநாதபுரம் வள்ளல் பாண்டித் துரைத் தேவர் ஒரு லட்சம் ரூபாய்க்கு அதிகமான தொகையை மூலதனமாக வழங்கியது. (1915)
- தென்னிந்திய ரயில்வே கம்பெனியினால் தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கு மிடையே கப்பல் போக்குவரத்துத் துவக்கம் (1916)
- உள்ளாட்சி இயக்கத்திற்கு பலத்த ஆதரவு, இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னரது இயக்க நடவடிக்கைகள். (1916)
- ஒத்துழையாமை இயக்கம் தீவிரம் பெற்று மது விலக்கு, அந்நியத் துணிக் கடைகள் மறியல். (1920)
- காந்தியடிகளும் அலிசகோதரர்களும் சுற்றுப் பயணம் செய்து மக்களிடம் விழிப்பை ஏற்படுத்தினர். திராவிடக் கழகம், பொதுவுடைமை இயக்கம், அரிசன முன்னேற்றம் ஆகியவைகளுக்கான தீவிர பிரச்சாரம்.

ஃ சாத்தூரில் தேசிய தொண்டர்கள், பஜனைக் குழுவாகச் சென்று பணவசூல் செய்தனர். விருதுநகர் அஞ்சல் அலுவலகம் வெடிகுண்டால் தாக்கப்பட்டது. விருதுநகரில் தென்னிந்திய காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாடு.

எல்லைப்புற காந்தி அப்துல் கபார்கான் கைது செய்யப் பட்டதைக் கண்டித்து மாவட்டம் முழுவதும் ஹர்த்தால். (1921)

∴ தனுஷ்கோடி முதல் முறையாக கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்டு அழிவடைந்தது. (1922)

∴ பிராமணர் அல்லாதவர் இயக்கத்தில் இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி ஈடுபட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டது.
இராமநாதபுரம் நகரில் முதன்முறையாக இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அருப்புக்கோட்டையில் ஜாதி இந்துக்களுக்கும், நாடார்களுக்கும் இனக் கலவரம்.
(1923

∴ சிவகாசியில் முதன்முறையாக நேஷனல் மேட்ச் ஓர்க்ஸ் என்ற பெயரில் தீப்பெட்டித் தொழிற்சாலையை அய்யநாடார் துவக்கியது. (1927)
சட்ட மறுப்பு இயக்கத்திற்கான ஆதரவு ராஜபாளையம், விருதுநகர், காரைக்குடி, சாத்தூர் ஆகிய பகுதிகளில் பல பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

இராமேஸ்வரத்தில் அரசு உத்திரவை மீறி ஐந்து தொண்டர்கள் உப்புக் காய்ச்சியதற்காக, கைது செய்யப்பட்டனர்.

ராஜபாளையத்தில் கள்ளுக்கடை மறியல். மூன்று கடைகளுக்குத் தீவைப்பு காமராஜர் கைது (1930)

❖ மானாமதுரை திருச்சி ரயில் பாதை ஏற்பட்டது. (1930)

❖ கீழக்கரையில் ஜாதி இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே கலவரம், கொள்ளை (1930)

❖ நாடார் சமூகத்தினருக்கும் இஸ்லாமியருக்கும் இடையே அருப்புக்கோட்டையில் கலவரம் (1930)

❖ ராஜபாளையத்தில் போலீஸ் அணி தாக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட தொண்டர்கள் தப்பிச் செல்லுமாறு செய்யப்பட்டது. விருதுநகரில் கடைகளின் முன்பு மறியல், வெடிகுண்டு வெடிப்பு, ராஜபாளையத்தில் அஞ்சல் அலுவலகத்தை தகர்க்க முயற்சி. மானாமதுரையில் பொது வாசகசாலையில் வெடிகுண்டு வீசப்பட்டது. (1932)

❖ நீதிக்கட்சி மாநாடு விருதுநகரில் நடைபெற்றது. (1935)

❖ சிவகாசியில் நாடார் பிரஸ் என்ற அச்சகத் துவக்கம் இந்தியாவின் அச்சுத் தொழில் வரலாற்றில் பெரிய சாதனைக்கு வழிவகுத்தது (1936)

❖ மாவட்டம் முழுவதும் காங்கிரஸ் கட்சி தலைவர்கள் கைது (1940)

❖ ராஜபாளையத்தில் தேசிய இளைஞர் அணியின் ஆயிரம் தொண்டர்கள் கலந்து கொண்ட அணிவகுப்பு. சாயல்குடி, தரவையில் உப்பு காய்ச்சப்பட்டது. சிவகங்கை, நாட்டரசன் கோட்டை ரயில் நிலையங்களைத் தாக்க முயற்சி, தேவகோட்டை, காரைக்குடி, திருவாடானை, பூலாங்குறிச்சி ஆகிய ஊர்

களில் துப்பாக்கி பிரயோகம், அரசு அலுவலகங்களுக்கு தீவைப்பு
இராமநாதபுரம் மாவட்டக் கழகம் (District board) அரசு நடவடிக்கையைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியது
விருதுநகர் நகராட்சி கலைக்கப்பட்டது (1942

ஃ தேவகோட்டை ரயில் நிலையத்திற்கருகில் திரைப்படத் தயாரிப்பு நிலையத்தை, காரைக்குடி ஏவி. மெய்யப்பச்செட்டியார் துவக்கியது (1943)

ஃ பெருநாழியிலும், முதுகுளத்தூர் ஆனையூரிலும் அரசியல் வேறுபாடு காரணமாக இந்து முஸ்லீம்களுக்கிடையே கலவரம் (1946)

ஃ அபிராமத்திலும் மேலக் கொடும்பலூரிலும் இந்து-முஸ்லீம் சமூகத்தினரிடையே பதட்ட நிலை ஏற்பட்டது (1947)

ஃ சட்டமன்ற நாடாளுமன்ற தொகுதிகளுக்குப் பொதுத்தேர்தல் திருப்பத்தூரில் ராஜா சர் முத்தையா செட்டியாரையும், ராஜபாளையத்தில் குமாரசாமி ராஜாவையும் எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர்கள் போட்டியிட்டனர் (1952)

ஃ மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ராமர் திருவுருவப் படங்களை திராவிடக் கழக தொண்டர்கள் தீயிட்டு கொளுத்தினர் (1956)

ஃ முதுகுளத்தூர் வட்டத்தில் கீழத்தூவல் கீரந்தை பரம்பச்சேரி ஆகிய ஊர்களில் மறவர் அரிஜனங்கள் மோதல் சம்பந்தமாக போலீசார் சுட்டு 14 பேர் இறந்தனர்

பரமக்குடியில் அரிஜன தலைவர் ஒருவர் படுகொலை (1957)

∴ இளையாத்தாங்குடியில் காஞ்சி காமகோடி பீடாதிபதியின் ஆதரவில் புராதன கலைகள் பற்றிய ஒரு மாநாடு. தாய்லாந்து, பிரான்ஸ், அமெரிக்கா பிரிட்டன் ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் (1962)

ஃ இராமேஸ்வரம் தீவும் தனுஷ்கோடியும் புயலினுலும், கடல் கொந்தளிப்பினுலும் பாதிக்கப்பட்டன தனுஷ்கோடி முழுமையாக அழிந்துபோயிற்று (1964)

ஃ இலங்கைஅரசின் சொத்தாகஇருந்துவந்தமண்டபம் முகாம் முழுமையும் தமிழக அரசு 25 லட்சம் ரூபாய்க்கு கிரயம் பெற்றது (1965)

இலங்கை தலைமன்னாரிலிருந்து இந்தியக் கரையான தனுஷ்கோடிக்கு நீந்திவந்து நீச்சல் வீரர் மிகிர்சென் சாதனை ஏற்படுத்தினர் (1965)

ஃ இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கச்சத்தீவை நல்லெண்ண நடவடிக்கையாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு தானம் கொடுத்தது (1965)

ஃ தனுஷ்கோடி புயலினல் அழிவுபட்டதால் இலங்கைக்கான கப்பல் போக்குவரத்து ராமேஸ்வரத்திலிருந்து துவக்கம் (1966)

ஃ இராமநாதபுரம் மாவட்டத்திற்குள் தலைநகரை அமைக்க வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியினல் ஒரு வாரகால இயக்கம் (1969)

ஃ இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இராமேஸ்வரம்

வழியாக மின்அலை செய்தித் தொடர்பு துவக்கம் (1972)

- மதகுபட்டியில் கள்ளர்களுக்கும் அரிஜனங்களுக்கு மிடையே மோதல்கள் (1972)

- இராமேஸ்வரம் தீவை மண்டபத்துடன் இணைப் பதற்காக கடல் மேல் சாலையமைக்கும் திட்டத்தை இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி துவக்கி வைத் தது. (1976)

- தேவகோட்டையை ஒட்டிய உஞ்சனையில் ஜாதி இந்துக்களுக்கும் அரிஜனங்களுக்கும் இடையே கோவில் திருவிழா சம்பந்தமாக மோதல்கள் (1979)

- கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் பகுதிக்கென தமிழகஅரசு பொதுத்துறையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம் துவக்கப்பட்டது (1983)

- சென்னையையும் இராமேஸ்வரத்தையும் மிகக் குறைந்த நேரமாகிய 14 மணியில் இணைப்பதற்காக சேது எக்ஸ்பிரஸ் ரயில் துவக்கம் (1983)

இராமேஸ்வரம் தீவில் வீசிய சூறாவளியினால் பாம் பன், தங்கச்சிமடம் ரயில் பாதை தடைப்பட்டது

- இலங்கையில் நிகழ்ந்த வன்செயல்களினால் இரா மேஸ்வரம் தலைமன்னார் கப்பல் போக்குவரத்துத் தடைபட்டது

இராமநாதபுரம் நகரில் இராமநாதபுரம் மாவட்ட ஆயிரவைசியர்களின் முதல் மாநாடு

இலங்கைத் தமிழினப் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்க ஆசிரியர்களும் மாணவர்களும் அரசு ஊழியர்களும் கருப்புப்பட்டை அணிந்து ஊர்வலங் கள் நடத்தினர்

விருதுநகரில் சுப்பிரமணியன் என்ற நெசவாளிக் தீ குளித்தார்
இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்ப கிழக்கு இராமநாதபுரம் தி.மு.க. மாவட்ட மாநாடு தீர்மானம் இயற்றியது
மத்திய-மாநில அரசுகளின் போக்கினைக் கண்டித்து அனைத்துக்கட்சி ஆர்ப்பாட்டம், கைது (1983)

ஃ மதுரை மன்னர் திருமலை நாயக்கருக்கும் இராமநாதபுரம் மன்னர் திருமலை சேதுபதிக்கும் இடையே ஏற்பட்ட நல்லுறவு காரணமாக இராமநாதபுரத்தில் தெலுங்கு ஆட்சிமொழியாகப் புகுத்தப்பட்டது (1659)

ஃ மறவர் சீமையில் கிறிஸ்துவ பாதிரிகளது சமயத் தொண்டின் துவக்கமும்-மதமாற்றமும் சங்கைக்குரிய தந்தை அண்டோனியோ-டி-புரோயன்சா பணிகள் (1663)

ஃ மறவர் இனத்தவர் கிறிஸ்துவராக மதம் மாற்றம் பெறுவதற்கு பெரும் எதிர்ப்பு (1669)

ஃ மதுரை நாயக்க மன்னருக்குக் கட்டுப்பட்டிருந்த இராமநாதபுரம் சீமையை தன்னரசு நாடாக கிழவன் சேதுபதி பிரகடனம் செய்தது (1683)

ஃ மதுரை மன்னன் முத்து வீரப்பன் (III) இராமநாதபுரம் சீமையைப்பிடிக்க அனுப்பிய பெரும்படை சேதுபுரம் என்ற இடத்தில் மறவர் படையிடம் தோல்வி கண்டது (1686

ஃ சமய பணிக்கென மறவர் சீமைக்கு வந்தபோர்ச்சுக்கீசிய பாதிரியார் ஜான்-டி-பிரிட்டோ ஓரியூர் கோட்டையில் கொல்லப்பட்டது (1693)

ஃ மன்னார் வளைகுடாவில் முத்துச்சிலாபம் (குளித்தல்) நடத்த டச்சுக்காரர்கள் இராமநாதபுரம் மன்னர்

கிழவன் சேதுபதியுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது (1694)

ஃ மதுரை கோட்டையைப் பிடித்து சில மாதங்கள் இராமநாதபுரம் மறவர் படைகள் தங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருந்தது (1697)

ஃ தஞ்சை மன்னருக்கும் சேதுபதிக்கும் ஏற்பட்ட 12 ஆண்டு கால உடன்படிக்கையை மீறியதற்காக கிழவன் சேதுபதி தஞ்சை மீது படையெடுத்துச் சென்றது (1598)

ஃ ராணி மங்கம்மாளது மதுரைப் படைகளும் தஞ்சை மன்னரது படைகளும் இராமநாதபுரம் சீமையின் தெற்கு பகுதியில் நுழைந்தபோது தளபதியை இழந்து படுதோல்வி கண்டது (1702)

ஃ இராமநாதபுரம் சீமை பிரிவினை செய்யப்பட்டு சிவகங்கைச் சீமையென புதிய பகுதி ஒன்று உருவாக்கப்பட்டது (1730)

ஃ இராமநாதபுரம் சீமையின் வடபகுதியை ஆக்ர மித்த தஞ்சை மராட்டியரை இராமநாதபுரம், சிவகங்கை சீமைகளின் இணைப்புப்படை துரத்தி யடித்தது (1732)

ஃ புனித ஜான்-டி-பிரிட்டோ மாய்ந்த ஒரியூர் மண்ணில் தேவாலயம் கட்ட விஜயரகுநாத கட்டத் தேவர் சேதுபதி நிலம்வழங்கியது (1734)

ஃ நெல்லைமாவட்டத்திலுள்ளவடுக பாளையக்காரர்கள் சேது மன்னருக்குப் பணியுமாறு பிரதானி வெள்ளை யன் சேர்வைக்காரன் படை நடத்திச்சென்றது (1749)

ஃ பூலித்தேவனது மதுரைக் கோட்டை ஆக்ரமிப்பை அகற்ற சிவகங்கை பெரிய உடையார் தேவரும்

சேதுபதி மன்னரும் 3000 வீரர்களை வெடிமருந்துகளுடன் கும்மந்தான்கான் சாகிபு தலைமையில் அனுப்பியது (1757)

∴ இராமநாதபுரம் மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதியிடம் டச்சுக்காரர்கள் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு கீழக்கரையில் துணி உற்பத்தி நிலையம் ஒன்றையும், பண்டகசாலையும் அமைத்தது (1759)

ஃ கும்மன்தான்கான் சாகிபிடம் இறுதித்தோல்வியடைந்த பூலித்தேவர் கடலாடியில் தங்கி வாழ்ந்து மறைந்தது (1761)

ஃ ஆற்காட்டு நவாப்பின் படை இராமநாதபுரம் சிவகங்கைக் கோட்டைகளை பிடித்தது (1772)

∴ சிவகங்கைமன்னர்முத்துவடுகத்தேவர் காளையார் கோவில் போரில் வீரமரணம் அடைந்தது (1772)

∴ ஆற்காட்டு நவாப்பின் ஆட்சியில் இராமநாதபுரம் அலிநகர் என்றும் சிவகங்கை ஹுசைன் நகர் என்றும் பெயர் மாற்றம் பெற்றன் (1773)

ஃ மைசூர் மன்னர் ஹைதரலியிடம் ராணுவ உதவி பெற்ற மருது சகோதரர்கள் ஆற்காட்டு நவாபிடமிருந்து சிவகங்கை கோட்டையையும் மாப்பிள்ளை தேவர் இராமநாதபுரம் கோட்டையையும் மீட்டது (1780)

∴ திண்ணைப் பள்ளிகளுக்கு மாற்றமாக மறவர் சீமையில் முதன்முறையாக[ சங்கைக்குரிய சுவாட்ஸ் சாமியார் ஆங்கிலப் பள்ளியைத் துவக்கியது (1785)

ஃ மேனாட்டுப் பயணி வைஸ்கவுன்ட் வாலன்டின இராமநாதபுரம் அரசி ராணி மங்களேஸ்வரி நாச்சியாரை பேட்டி கண்டது. (1802

ஃ சிவகங்கை அரசரது சிப்பந்திகள் வாட்களை அணிந்து கொள்ள கும்பெனியார் அனுமதித்தது. (1812)

ஃ மதுரை மீனாட்சி கோவில் அஷ்டபந்தன விழாவை சிறப்பாக நடத்த இராமநாதபுரம், சிவகங்கை மன்னர்கள் நடவடிக்கை. (1813)

ஃ பாம்பன் கால்வாயை முதன் முறையாக ஆழமான கால்வாயாக மாற்றியமைத்தது. (1841)

ஃ இராமேஸ்வரம் தலயாத்திரையாக வந்த திருவாங்கூர் மன்னரை இராமநாதபுரம் பொதுமக்கள் வரவேற்றது. (1890)

ஃ சிவகங்கையில், சிவகங்கை மன்னரால் உயர்நிலைப் பள்ளி துவக்கப்பட்டது. (1893)

ஃ சிகாகோவில் நடைபெற்ற அனைத்துலக சமயங்களின் மாநாட்டில் கலந்து கொண்டு, கொழும்பு வழியாக பாம்பன் வந்து சேர்ந்த சுவாமி விவேகானந்தருக்கு இராமேஸ்வரம், இராமநாதபுரம், பரமக்குடி மானாமதுரை ஆகிய ஊர்களில் வரவேற்பு வழங்கப்பட்டது. (1897)

ஃ கமுதியில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான வழக்கு முடிவு (1898)

ஃ சிவகாசிப் பகுதியில் சாணார்-மறவர் இனக்கலவரம் 23 கொலைகள் 103 கொள்ளை சம்பந்தமாக 552 பேருக்குத் தண்டனை, ஏழு பேருக்குத்தூக்கு. (1899)

ஃ பள்ளிவாசல் வழியாக சுவாமி புறப்பாடு சம்பந்தமாக இளையான்குடியில் இந்துக்கள் இஸ்லாமியர் இனக்கலவரம் (1900)

ஃ பரிதிமாற் கலைஞன் எனப் பாராட்டப்பட்ட பேரறிஞர் சூரியநாராயண சாஸ்திரியின் கலாவதி நாட

கம் இராமநாதபுரத்தில் பாஸ்கர சேதுபதி மன்னர் அவையில் நடிக்கப் பெற்று, அரங்கேற்றப்பட்டது. (1902)

- சிவகாசியில் நாடார்களுக்கும், மறவர்களுக்கும் இடையே இனக்கலவரம் (1907
- அருப்புக்கோட்டைக்கும் மதுரைக்கு மிடையே முதல் முறையாக பஸ் போக்குவரத்து துவக்கம் (1908)
- தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக வெடி மருந்து, பட்டாசு ஆகியவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை திரு. சண்முகநாடார் என்பவர் சிவகாசியில் தொடங்கியது (1908)
- இந்து நாடார்களுக்கும் பள்ளர்களுக்குமிடையே விருதுநகரில் மோதல் (1912)
- மதுரையில் உள்ள தமிழ்ச்சங்கத்தின் ஆண்டுவிழா இராமநாதபுரம் அரண்மனையில் சேதுபதி மன்னரால் கலைவிழாவாக நடத்தப்பட்டடது (1913)
- பாம்பன் தீவுக்கும் மண்டபத்துக்கும் இடையே இணைப்பு ரயில் போக்குவரத்து துவக்கம் (1914)
- முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்குமிடையே வீரசோழனில் கைகலப்பு. (1915)

நாராயணன் காத்தன் என்ற கருநிலக்குடி நாடாள்வான், ஆலங்குடி, இருப்பக்குடி கண்மாய்களைச் செப்பனிட்டது (1100)

திருக்கோட்டியூர் ஆலயத்தில் கீழைத்திருநிலைஎனப்படும் பகுதியில் உள்ள பள்ளியறைப் பெருமாள் முன் துண்டாவிளக்கு எரிக்க ஒருபெண் பொருள்தானம் செய்தது. (1120)

திருமலை (சிவகங்கை) யில் உள்ள ஆலயத்தில் ஐநூற்றுவள் திருக்காவனம் என்ற அரங்கு பொதுமக்களது உபயோகத்திற்காக அமைக்கப்பட்டது (1233)

பெரிச்சிகோவில் (திருப்பத்தூர்) பகுதியில் சோழர் களின் ஆட்சியில்ஏற்பட்ட வரிப்பளுவை பாண்டியனது அரசியல் தலைவன் காங்கேயன் என்பவன் நிலங்களை சரியாக அளந்து மகசூலுக்கு தக்க வரிவிதிப்பை ஏற் படுத்தியது (1245)

தில்லியிலிருந்து புறப்பட்ட வந்த இசுலாமிய படை களுக்குப்பயந்தஸ்ரீரங்கத்துபிள்ளைலோகாத்கார்யாவின் தலைமையிலான குழுஒன்று ஸ்ரீரங்கநாதரது பொன் மேனியையும் விலையுயர்ந்த பொருள்களையும் எடுத்துக் கொண்டு இந்த மாவட்டத்தில் திருக்கோட்டியூர், காளையார் கோவில் ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்தனர் (1328)

கடற் கொந்தளிப்பில் அகப்பட்ட உலகப்பயணி இபுனு-பதூதா இந்த மாவட்டத்தின் கிழக்குக் கடற் கரையில் கரை இறங்கி, மூன்று மாதங்கள் பத்த (பெரியபட்டினத்தில்)னில் தங்கி இருந்து மாலத்தீவு களுக்குப் பயணமானது. (1344)

மதுரை சுல்தான்கள் வன்னியன் சூரைக்குடி அரையர் களை அழித்து மாத்தூர், விரையாச்சிலை, திருக்கோட்டி யூர் பகுதி மக்களுக்கு பாடிகாவல் உரிமை வழங்கியது (1359)

தேவகோட்டைப்பகுதி மக்களுக்கு அறந் தாங்கிர்ளகள் களது பயத்தை நீக்கிய மதுரை சுல்தான்களது ஆட்சிக்கு அந்தபகுதிமக்கள் இணக்கம் அளித்து கல்லில் பிரமாணம் பண்ணிக் கொடுத்தது (1369)

மதுரை சுல்தான் ஆட்சியின்மீது தாக்குதலை நிகழ்த்திய விசயநகர இளவல் குமார கம்பணன் திருப்புல்லாணி கோவிலில் இலநியந்தங்களை ஏற்படுத்தியது (1374)

பிராமணர்களின் பேரவையொன்று, மணப்பெண் ணிற்கு நகைக்காக மணமகன் வழங்க வேண்டிய

தங்கம் அல்லது வெள்ளியின் எடை எட்டுக் கழஞ்சு என்றும் இந்த முடிவை மீறுபவர்கள் சாதிநீக்கம் செய்யப்படுவர் என தீர்மானித்தது. (1382)

காளமேகவரிடம் திருக்கோயிலின் மேலைக் கோபுரத்தை அமைத்து அங்கு திருப்பணியை முதலில் துவக்கியவர் இராமநாதபுரம் மன்னர் உடையான் சேதுபதி. (1420)

திரு உத்திரகோசைமங்கை திருக்கோயிலுக்கு பாண்டியன் மாறவர்மன் வீரபாண்டியன் நிலக்கொடை வழங்கியது. (1433)

விஜயநகரப் பேரரசரான கினை சாளுவ நரசிம்மதேவர் இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு யாத்திரையாக வந்தது. (1483)

விஜயநகரப் பேரரசுக்கு கட்டுப்பட்டு பரமக்குடி பாளையத்தின் கர்த்தா தும்பிச்சி நாயக்கர், காளையன் நாட்டு வெள்ளைப்பள்ளம் என்ற ஊரை திருப்பத்தூர் கோவிலுக்கு தானமாக வழங்கியது (1504)

திருப்புல்லாணி திருக்கோவிலில் வீரை அரசுகவியானது அரிச்சந்திரபுராணம் அரங்கேற்றம் பெற்றது (1524)

மாவலி வாணாதிராயன் என்ற குறுநில மன்னன் தேவிபட்டினம் கடலடைத்த பெருமாள் ஆலயத்தை அமைத்து நிலக்கொடை வழங்கியது (1533)

வேதாளை கிராமத்தில் கோட்டை ஒன்றை கட்டிக் கொண்டு, இராமேஸ்வரம் செல்லும் பயணிகளிடம் தலைவரி வசூலித்து சிரமப்படுத்திக் கொண்டிருந்த போர்ச்சுக்கீசியரை, இராமநாதபுரம் சேதுபதியின் படைகளும், உள்ளூர் இசுலாமியர்களும் துரத்தியடித்தது. (1549)

கொச்சியிலிருந்து வந்த பெரும் போர்ச்சுகீசிய கடற்



பாஸ்கர சேதுபதி



சின்ன மருது — பெரிய மருது, காளையார் கோயில்



இராமேஸ்வரம் கோயிலின் ஒரு பகுதி



இடைக்காட்டூர் தேவாலயம்



இராமேஸ்வரம் கோயிலின் ஒரு பகுதி



இராமலிங்க விலாசம் முகப்பு கோபுரம் இராமநாதபுரம்



சிவகங்கை அரண்மனை

படையும், இஸ்லாமியத் தளபதி இராப் அலியின் கடற்படையும் கீழ்க்கரை அருகில் பயங்கர போரில் ஈடுபட்டது. (1553)

கீழக்கரைப் பகுதியில் முத்துக்குளிப்பவர்கள் 100 முத்துக்கு அரைப் பணமாக அங்குள்ள பிள்ளையார் கோவிலுக்கு வழங்க திருமலை சேதுபதி மன்னர் ஆணையிட்டது. (1631)

மைசூர் மன்னர் ஐதர்அலியின் ராணுவ உதவியுடன் மருது சகோதரர்கள் சிவகங்கையை நவாப் படையினரிடமிருந்துமீட்டு ராணிவேலு நாச்சியாரை அரசியாக அறிவித்தது (1780)

கிறிஸ்தவ மதப்பிரசாரப் பணிக்கு புனித மார்ட்டின் பாதிரியார் மறவர் சீமையில் சுற்றுப் பயணம் (1701)

இராமநாதபுரம் சீமையின் மீது படையெடுத்து வந்த ராணிமங்கம்மாளது பெரும்படையையும் அதன் தளபதி நரசப்பையாவையும் இராமநாதபுரம் கோட்டை அருகே கிழவன் சேதுபதி அழித்துக் கொன்றது. (1702)

மறவர் சீமையில் வெள்ளமும், புயலும் ஏற்பட்டு வைகை, குண்டாறு, மணிமுத்தாறு ஆகிய ஆறுகளில் பெருவெள்ளம், தொடர்ந்து வறட்சி, பஞ்சம். (1709)

இராமநாதபுரம் சீமையின் இணையற்ற பேரரசாக விளங்கிய கிழவன் சேதுபதியின் மரணமும் அவரது மனைவிகள், காமக்கிழத்திகள், நெருங்கின உறவினர்கள் (மொத்தம் 47 பேர்) தீக்குளித்தது. (1710)

பொன்னளிக் கோட்டையில் கத்தோலிக்க ஆலயத்தை புனித மார்ட்டின் பாதிரியார் நிர்மாணித்தது சேதுபதி அனுமதியுடன். (1711)

மறவர் சீமையில் கிறித்துவ மதப் பணிக்காக கொலை தண்டனை வழங்கப்பட்டு ஓரியூரில் கி.பி. 1693 இல் தியாகியான புனித ஜான் பிரிட்டோவின் தியாகத்தை கீழக்கரையில் கூடிய பாதிரிமார்கள் மாநாடு போப்பரசருக்கு விவரமான அறிக்கையை தயாரித்து அனுப்பியது (1727)

நவாப் சந்தா சாகிப்பின் சகோதரர்கள் புத்தாசாகிபும் சதக்சாகிபும் தெற்கு வட்டகை பாளையக்காரர்களின் கூட்டு அணியை சாத்தூரில் முறியடித்தது. (1740)

கீழக்கரையில் செல்லத்தேவர் சேதுபதியின் அனுமதியின் பேரில் டச்சுக்காரர்கள் தொழில் மையமும் பண்டக சாலையும் அமைத்தது. (1759)

கும்பெனியாரின் தளபதி பிளிண்ட் கொல்லம் கொண்டான் கோட்டையை முற்றுகையிட்டு கைப்பற்றியது. (1766)

சேத்தூர் கோட்டையை கும்பெனித் தளபதி காம்ப்பெல் கைப்பற்றியது. (1767)

மன்னார் வளைகுடாவில் கண்காணிப்பு, முத்துக்குளித்தல் சம்பந்தமாக இராமநாதபுரம் சேதுபதி மன்னருடன் டச்சுக்காரர்கள் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது. (1767)

தஞ்சை மன்னன் துல்ஜாஜியின் இராமநாதபுரம் படையெடுப்பும் பின்வாங்குதலும் (1771)

ஆற்காட்டு நவாப்பின் படையும் கிழக்கு இந்திய கும்பெனிபடையும் இணைந்து இராமநாதபுரம் கோட்டையை முற்றுகையிட்டு கைப்பற்றியது. சேதுபதி அரசரையும் அவரது தாயார் தமக்கையாரையும் கைதுசெய்து திருச்சிக் கோட்டையில் அடைத்தது. (1772)

பின்னர் சிவகங்கைச் சீமையை நவாப் கைப்பற்றியது காளையார் கோவிலில் நடைபெற்ற போரில் சிவகங்கைமன்னர்முத்துவடுகநாத பெரிய உடையாத் தேவர் வீரமரணம். சிவகங்கை ராணி, பிரதானி தாண்டவராயபிள்ளையுடன் மைசூர் மன்னர் ஐதர் அலியிடம் புகலிடம் (1772)

மறவர் சீமையில் குழப்பம் நவாப் ஆட்சிக்கு எதிராக மாப்பிள்ளைத்தேவர் தலைமையில் புரட்சிக்காரர்கள் இராமநாதபுரம் சீமையில் தீவிரநடவடிக்கை (1780

மைசூர் மன்னர் ஐதர்அலியின் ராணுவ உதவியுடன் மருது பாண்டியர்கள் சிவகங்கை சீமைய்யயும் இராமநாதபுரம் கோட்டையை மாப்பிள்ளைத் தேவரும் கைப்பற்றி ஆற்காட்டு நவாப் ஆட்சியை அகற்றியது. (178(0

உள்நாட்டு குழப்பத்தை அடக்கி நிர்வாகத்தை திறம் பட அமைப்பதற்கு ஏதுவாக திருச்சிக் கோட்டையில் சிறைவைக்கப்பட்ட சேதுபதியை விடுதலைசெய்து இராமநாதபுரம் சீமைக்கு அரசராக நவாப்அறிவித்தது (1781)

திருச்சிக் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த முத்துராமலிங்க சேதுபதி மன்னரை விடுவித்து இராமநாதபுரம் சீமை மன்னராக ஆற்காட்டு நவாப் அறிவித்தது. (1781)

வடக்குப் பகுதியில் புகுந்த தஞ்சை மராத்தியப் படையை கிழவன் சேதுபதி படுதோல்வி அடையச்செய்தது. (1709)

இராமநாதபுரம் சீமையை ஆற்காட்டு நவாப் கிழக்கு இந்தியக் கம்பெனியாருக்கு விட்டுக் கொடுத்தது (1792)

புரட்சிக் காரர்களுடன் சேர்ந்து இராமநாதபுரம் சீமையைச் சேர்ந்த சர்க்கார் கிராமங்களை கட்ட பொம்மன் கைப்பற்றியது. (1797)

இராமநாதபுரம் இராமலிங்கவிலாசம் அரண்மனையில் கலெக்டர் ஜாக்ஸன் கட்டபொம்மன் சந்திப்பு இராம நாதபுரம் கோட்டையில் இருந்து அவர் தப்பித்துச் சென்றது (1798)

பொம்மன் இராமநாதபுரம் இராமலிங்க விலாசத்தில் கலக்டர் சாக்ஸனைச்சந்தித்தது பிறகு அங்கிருந்து தப்பி புரட்சிக்கார பாளையக்காரராக மாறியது. (1798)

முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி திருச்சிக் கோட்டையில் சிறைவைக்கப்பட்டு இருப்பதற்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையில் இராமநாதபுரம் சீமையில் பல பகுதியில் ஆயுதம் தாங்கிய புரட்சிக் காரர்களது நடவடிக்கைகள் (1799)

ஆற்காடு நவாப் நிர்வாகத்தில் வெறுப்பும், ஆத் திரமும் அடைந்த மறவர் சீமை மக்கள் புரட்சியைத் துவக்கி மைலப்பன் என்ற சவரிப்பிள்ளை தலைமை யில் முதுகுளத்தூர், அபிராமம் கச்சேரிகளைத் தாக்கி ஆயுதங்களைப் பறித்து சர்க்கார் களஞ்சியங்களை கொள்ளையிட்டது. (1799)

மறவர் சீமையின் புரட்சியை தூண்டியவர் என்று குற் றம் சாட்டி திருச்சிராப்பள்ளி சிறையிலிருந்து சென்னை செயின்ட் சார்ஜ் கோட்டை சிறைக்கு முத்துராமலிங்க சேதுபதி மன்னரை மாற்றம் செய்தது. (1800)

ஆங்கிலேயருக்கும் ஆற்காட்டு நவாப்பிற்கும் எதிரான புரட்சி மறவர் சீமை முழுவதும் சிவகங்கைப்பகுதியில் மருது சகோதரர்கள் தலைமையிலும் இராமநாதபுரம்

பகுதியில் முத்துக்கருப்பத்தேவர் தலைமையிலும் தீவிரமாகப் பரவியது, தோல்வியுற்றது, புரட்சிக்காரர்கள் அனைவரும் தூக்குமேடை ஏறியது. (1801)

வரலாற்றில் முதன்முறையாக ''ஜில்லா கோர்ட், இராமநாதபுரத்தில் கும்பெனியரால் நிறுவப்பட்டது. (1802)

பதவி நீக்கப்பட்ட விஜயரகுநாத முத்துராமலிங்க சேதுபதி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் பதினைந்து ஆண்டுகால சிறைவாசத்திற்குப் பிறகு மரணம் (1809)

அந்நிய எதிர்ப்பு நடவடிக்கையால் பதவி நீக்கப்பட்ட இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி 15 ஆண்டுகால சிறைவாசத்தில் சென்னைக் கோட்டையில் இறந்தது. (1809)

பழந்தமிழ் ஏடுகளைத் தேடி வந்த இலக்கியச் செல்வரும் சென்னை மாவட்ட கலைக்டருமான F. W. எல்லிஸ் சுற்றுப் பயணம் வந்தபொழுது இராமநாதபுரத்தில் அகால மரணமடைந்தது. (1819)

இந்த மாவட்டத்தில் வழக்கறிஞர்கள் சங்கம் சிவகங்கையில் ஏற்படுத்தப்பட்டது. (1895)

இராமநாதபுரம் சமஸ்தான மகாவித்வான் ரா. ராகவ ஐயங்காருக்கு, பாஸ்கர சேதுபதி மன்னர் முத்துச் சிவிகை பரிசாக வழங்கியதுடன் அந்தச் சிவிகையில் புலவரை அமரவைத்து தாமே சுமந்து, தமிழ்ப் புலவர்களையும், தமிழையும், தமது முன்னோர் போல தாமும் காத்து வருதல் கடமை என குறிப்பிட்டு மதுரையில் உள்ள பதிவு அலுவலகத்தில் பத்திரம் மூலம் பதிவு செய்து கொடுத்தது. (1901)

மதுரை தமிழ்ச் சங்க நிறுவுனர் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் இராமநாதபுரத்தில் மரணம். (1911)

காந்தியடிகள் முதன் முறையக செட்டி நாட்டிற்கு வருகை தந்த பொழுது காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கத்தார் நல்ல தமிழில் வரவேற்பு இதழ் ஒன்றை அடிகளுக்கு வழங்கி வரவேற்றது (1921)

தொண்டி கடற்கரையில் சென்னை அரசு முதல் முறையாக முத்துச் சிலாபம் குளிக்க ஏற்பாடு செய்தது (1914)

இராமநாதபுரத்தில் சேதுமன்னர் ராஜேஸ்வர முத்து ராமலிங்க சேதுபதி தலைமையில் நாடார் இனத்தவர் மாநாடு நடைபெற்றது (1922)

அகில இந்திய தேசியக் காங்கிரசின் தலைவரும் சட்ட வியல் நிபுணருமான இராமநாதபுரம் சீமான் சீனிவாச ஐயங்கார் சென்னையில் மறைவு (1941)

இராமநாதபுரம் நகரில் மாவட் தாழ்த்தப்பட்டோர் மாநாடு சேதுதுபதி மன்னர் தலைமையில் நடைபெற்றது. (1945)

முதன்முறையாக இந்த மாவட்டத்தில் பட்டப் படிப்புப் பெறும் வாய்ப்பை ஏற்படுத்த காரைக்குடியில் அழகப்பா கலைக்கல்லூரியும், சிவகங்கையில் மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரியும், விருதுநகரில் இந்து நாடார் செந்திக் குமார நாடார் கல்லூரியும் துவக்கப் பட்டன (1947

இந்திய அரசின் கடல்வள ஆராய்ச்சி நிலையம் மண்டபம் முகாமில் துவக்கப் பெற்றது. (1947

கி.பி. 1801 முதல் இந்த மாவட்டத்தில் அமுலில் இருந்த ஜமீன்தாரி முறை சட்டம் மூலமாக ஒழிக்கப் பட்டு உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்று ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அரசு அறிவித்தது (1948)

சேதுபதி மன்னர்களும் சிவகங்கை அரசர்களும் ஆற்காட்டு நவாப்புகளும், தனியார்களுக்கும் கோயில், பள்ளிவாசல், தேவாலயம் போன்ற நிறுவனங்களுக்கும் வழங்கிய இனும் நிலங்களை சட்டம் மூலம் அரசு மேற்கொண்டு குடிகளுக்கு உரிமைப்பட்டா வழங்கியது (1951)

மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவனரும் தேசிய வாதியும் தமிழறிஞரும் வள்ளலுமான பாண்டித்துரைத் தேவர் அவர்களது நூற்றாண்டு விழா* முத்தமிழ்க் கலைவிழா இராமநாதபுரம் நகரில் சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி துவக்கப் பெற்றது (1965)

காரைக்குடியில் இந்திய அரசின் மின்னியல் வேதியல் ஆராய்ச்சி நிலையம் இந்தியப்பிரதமர் ஜவகர்லால்அவர்களால் துவக்கப் பெற்றது. (1968)

இளையங்குடி ஜாகிர் உசேன் கலைக்கல்லூரியில் கற்பனைக் கருவூலமான ''சீறாப்புராண'' விழா நடை பெற்றது (1970)

பரமக்குடியில் மாமேதை லெனினது நூற்றாண்டு விழா சிறப்பாக சீரிய முறையில் கொண்டாடப்பட்டது (1970)

இராமநாதபுரம் சமஸ்தானம் மகாவித்வான் ரா. ராகவ ஐயங்கார் அவர்களது நூற்றாண்டு விழா இராமநாதபுரத்தில் இரண்டு நாள் இலக்கிய விழாவாக நடைபெற்றது (1970)

அருப்புக் கோட்டையில் இராமநாதபுரம் மாவட்ட இசுலாமிய தமிழ் இலக்கிய முதல் மாநாடு சிறப்பாக நடந்தேறியது (1982)

சிறந்த பேச்சாளரும், பேராசிரியரும், பொதுநல ஊழியருமான எம். ராஜா ஐயர் எம்.எல்.சி. இயற்கை எய்தியது (1974)

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முறையாக மேனாட்டுக் கல்வி முறைக்கெனத் துவக்கப் பெற்ற சுவாட்ஸ் உயர்நிலைப்பள்ளி நூற்றாண்டு விழா கண்டது (1975)

இராஜபாளையத்தில் பல ஆலைகளும் அறநிலையங்களும் அமைவதற்கு காரணமாக இருந்த தொழில் அதிபர் பி.ஏ.ஸி. இராமசாமி ராஜா அவர்களது நூற்றாண்டு விழா பத்து நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது (1979)

இராமநாதபுரம் பங்குனி உத்திரம் திருவிழவில் ஏற்பட்ட சிறுநிகழ்ச்சி தொடர்பாக சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையில் பழியுணர்வும் குரோதமும் ஏற்பட்டு, அவர்களது மோதலைத் தடுக்க போலீசார் சுட்டு இருவர் மரணம். இந்த இனக் கலவரம் ஏழுபேர் உயிரைக் குடித்தது (1981)

அத்தியுத்து, புதுவலசை, கூரியூர், வீரவனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பெருவாரியான தாழ்த்தப்பட்ட மக்கள் வலிந்து இசுலாம் மதத்தை ஏற்றுக் கொண்டது, இந்தியப் பாராளுமன்றத்தில் பலவித சர்ச்சைக்கு உரிய பொருளாக அமைந்தது. (1982)

இந்த மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் உள்ள மானாமதுரை, சிவகங்கை, பரமக்குடி, இளையான்குடி இராமநாதபுரம், ஆகிய வட்டங்களில் நஞ்சைப் பயிர்களின் விளைச்சலுக்கு ஆதாரமாக இருந்து வருவது வைகை ஆறு. இதனுடைய கிளையான கிருதுமால் நதி, அருப்புக்கோட்டை முதுகுளத்தூர் வட்டங்களில் சில பகுதிகளது செழுமைக்கும் காரணமாக உள்ளது. இந்த பகுதியின் மொத்த நஞ்சை சாகுபடி பரப்பில் நாலில் ஒரு பகுதி வைகையின் வளத்தால் விளைவதாகும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

பழனி மலைத் தொடரில் பிறந்து ஆண்டிபட்டி, வருஷநாடு காடுகளில் தவழ்ந்து திரிந்து மதுரையை வலம் வந்து இந்த மாவட்டத்தில் சிலைமான் அருகில் நுழைகின்றது. சங்க இலக்கியங்களின் சிலப்பதிகாரம், கல்லாடம் போன்ற காப்பியங்கள் வைகையின் வளத்தையும், அதனால் மக்கள் பெறுகின்ற நலத்தையும் வாழ்த்துகின்றன. ஆனால் இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வைகை, வான் பொய்ப்பினும் தான் பொய்யாத வளம் கொழிக்கும் நீர்நிலை அல்ல. இதன் நீர்வளம் ஆண்டு தோறும் நீண்டும் சுருங்கியும் பெருகியும் அருகியும் பயனூட்டும் தன்மையுடையதாக இருந்து வருகிறது. இதனை விளக்குகின்ற வரலாற்றுச் சுவடிகளின் சில பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **1820-21** | சிறிய அளவில் வெள்ளம் |
| **1823-24** | வைகையின் சுருங்கிய வெள்ளம் இந்த மாவட்டத்தை எட்டவில்லை |
| **1824-25** | பெரும் வெள்ளம் |
| **1825-26** | வெள்ளப் பற்றாக் குறை |
| **1829-30** | வைகை வறண்டு விட்டது. |
| **1834-35** | மானாமதுரை வரை வெள்ளம் வந்து நின்று விட்டது. |

| | |
|---|---|
| 1838-39 | வெள்ளம் பரமக்குடிப் பகுதியை மட்டும் தொட்டது. |
| 1839-40 | மானாமதுரை வரை வெள்ளம் |
| 1840-41 | வையை வறண்டு விட்டது |
| 1841-42 | வையையில் பெரும் பிரவாகம் அனைத்துக் கண்மாய்களும் நிரம்பி வழிந்தன |
| 1843-44 | மிகப் பெரும் வெள்ளம், கண்மாய் கள் நிறைந்து உடைந்தன |
| 1844-45 | தொடர்ந்து பெரும் வெள்ளம் |
| 1845-46 | பெரும் வெள்ளம் |
| 1846-47 | வையை வறண்டது |
| 1848-49 | விவசாயத்திற்கு போதுமான வெள்ளம் |
| 1850-51 | பெரும் வெள்ளப்பெருக்கு |
| 1851-52 | வறட்சி |
| 1852-53 | வெள்ளப்பெருக்கு |
| 1862-63 | வரலாறு காணாத வெள்ளப்பெருக்கு |
| 1867-68 | பெரும்வெள்ளம் |
| 1868-69 | போதுமான அளவுப் பெருக்கு |
| 1869-70 | முதல் 75-76 வரை பெரும் வெள்ளம் |
| 1877-78 | பெரும் வெள்ளப்பெருக்கு அனைத்து கண்மாய்களும் நிறைந்து அழிந்தன |
| 1878-81 | போதுமான வெள்ளப் பெருக்கு. |
| 1881-82 | இராமநாதபுரம் பகுதிக்கு வெள்ளம் வந்து சேரவில்லை. |
| 1882-83 | வறட்சி. பின்னர் திடீர் வெள்ளம். கண்மாய்கள் உடைந்தன. |
| 1883-84 | மீண்டும் பெரும்வெள்ளம். கண்மாய் களுக்குச் சேதம். |
| 1884-85 | வரலாறு காணாத வெள்ளம். எட்டு மணி நேர காலத்தில் அனைத்துக் கண்மாய்களும் வையை வெள்ளத் |

தால் நிரம்பின. சில கண்மாய்களும் உடைந்து அழிந்தன.

1885-86 வைகையில் போதுமான வெள்ளம் வரவில்லை.

1886-87 மிகவும் குறைவான வெள்ளம்.

1888-89 பெரும் வெள்ளம். பல கண்மாய் களில் உடைப்பு.

90-91 முதல் 94-95 வரை போதுமான வெள்ளம்.

1895-96 முதல் 1899-1900 பெரும் வெள்ளப்பெருக்கு

O

## இறை பணியில் இசைவேளாளர்

தமிழகத்து திருக்கோயில்களில் தேவரடியார் என வழங்கப்பட்ட தொண்டர்கள் தேவார காலம் முதல் இருந்து வந்தனர். ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழகத்தில் ''பண்ணும் பதம் ஏழும் பல ஓசைத் தமிழவையும் முழுதானவனை ''இறைவனை வழுத்தி வழிபட்ட காலம் அது. ஆதலால் திருக்கோயில் உள்ள ஊர்களில் எல்லாம், ''விழவோடு ஒலி மங்கை யர் தரும் ஆடக சாலையும், முழவோடு இசை நடம் முன் செயும்'' அரங்குகளும் இருந்தன. வைகறை திருப்பள்ளி எழுச்சியில் இருந்து, இரவு திருவனந்தல் வரை நடைபெறுகின்ற கோயில் வழிபாடுகள் அனைத் திலும் ஆலய விழாக்களிலும், அவர்களுக்கு சிறப் பான பங்கு இருந்தது.

இதற்கென இந்த மாவட்டத்தில், பழமையான திருக் கோயில்களான இராமேஸ்வரம், அருப்புக்கோட்டை திருச்சுழியல், திருப்புல்லாணி, திருவாடானை, காளையார் கோவில், பிரான்மலை, நாட்டரசன்

கோட்டை ஆகிய திருப்பதிகளில் இவர்கள் தொகுதியாக வாழ்ந்து வந்ததை சிற்றிலக்கியங்களும் கல்வெட்டுக்களும் சொல்கின்றன. ''பதிஇலார், ''தனிச்சேரிப்பெண்டு'' தேவரடியார்'' என கல்வெட்டுக்களில் இவர்கள் சுட்டப்படுகின்றனர்.

திருஉத்தரகோசமங்கையிலும், மருதூர் என்றநயினார் கோயில், திருப்புல்லாணி, நாட்டரசன்கோட்டை ஆகிய ஊர்களிலும் இந்த மக்கட்பிரிவினர் இருந்ததை சேதுபதி விறலிவிடு தூது, நயினார்கோவில் வழிநடைச் சிந்து, திருப்புல்லாணி நொண்டி நாடகம், கண்ணுடையம்மன்பள்ளு ஆகியவைகளில் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர். அடியார்களின் உள்ளத்தால் உகந்து அன்பினால் சொன்ன தேவாரம், திருவாசகம், திவ்விய பிரபந்தம் ஆகியவைகளை இறைவன் திருமுன்னர் பாடியும் ஆடியும் மக்களை பக்தி வழியில் பரவசம் கொள்ளச் செய்த இவர்களை அந்தந்த கோயில் அறங்காவலர்களும், இறையன்பர்களும் ஆதரித்து வந்தனர்.

அவர்களில் தங்கள் ஆடலாலும் பாடலாலும் சிறந்து நின்ற இந்த மக்கள் கலைஞர்களை, மன்னர்களும் ஏத்திப்போற்றி புரந்த வரலாற்று ஏடுகளிலும் உள்ளன. காளையார் கோவில் தளி இலாராகிய நக்கன் செய்யாளான காளிங்கராய தலைக்கோலியைப் பாராட்டி மாறவர்மன் குலசேகரபாண்டியன் பல நிலக்கொடை வழங்கியுள்ளதை காளையார் கோவில் கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மன்னர்களில் திருமலை சேதுபதி, திருச்சுழியல் கலியாணி என்ற தேவரடியார், திருவிழாவொன்றிலே சிறப்பாக வேடங்கட்டி ஆடியதற்காக பாறைக்குளம் என்ற கிராமத்தில் நிலக்கொடை வழங்கிய செய்தி செப்பேட்டில் உள்ளது. இதனைப்போன்று திருச்சுழியல், நந்த கோபாலம் என்பவருக்கு மூன்றடைப்பு என்ற கிராமத்திலும். முத்தாள் என்பவருக்கு கலியாண சுந்தரபுரத்திலும் நிலக் கொடை வழங்கியுள்ளார்.

மேலும் அதே மன்னர் அருப்புக்கோட்டை வாழ வந்தஅம்மன் கோவில்நாதசுரக்கலைஞர் ,கருப்பனுக்கு

அருப்புக்கோட்டையிலும், நட்டுவக் கலைஞர்கள் சூரிய நாராயணனுக்கும், சின்னக்காளைக்கும் புளிப் பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களிலும் நிலக்கொடை வழங்கி சிறப்பித்துள்ளார்.

அவரையடுத்து ஆட்சிக்கு வந்த முத்துக்குமார விஜய ரகுநாத சேதுபதி திருவாடானையில் முத்தாள் என்ற தேவரடியார்க்கும் முத்து விஜயரங்க சொக்கநாத மன்னர் சிறைமீட்டாள் பொன்னி ஆகியோர்க்கு பாளையம் பட்டியிலும் நிலங்கள் வழங்கி ஆதரித் துள்ளதை அவர்களது செப்பேடுகளில இருந்து தெரிய வருகின்றது.

பிற்காலத்தில் ஆடலும், பாடலும் மிக்க ஆடல் குட்டியர் குழு சின்னமேளம் என்றும் அவர்களில் ஆண்பாலரான நாயனக்குழலும் மேளமும், ஒத்தும் இணைந்த கலைக்குழு பெரியமேளம் என்றும் வழங்கப் பட்டன. தற்பொழுது இவர்கள் அரசுப்பதிவுகளில் இசை வேளாளர் என குறிப்பிடப்படுகின்றனர். இன்றும் ஆலயங்களில் சுவாமி பள்ளியெழுச்சி, புறப்பாடு, திருக்கண் அமருதல், உலா போன்ற வழிபாடு முறைகள் அனைத்திற்கும் இவர்கள் இன்றி யமையாதவர்களாக இருந்து வருகின்றனர்.

O

## வேளாளர்

வெள்ளத்தை ஆள்பவர் என்ற காரணத்தினால் எழுந்த பெயர் வேளாளர். இந்த மாவட்டத்தில் பரவலாக வாழ்ந்து வரும் இந்தச் சமூகத்தினர் பெரும்பாலும் விவசாயிகள் இவர்களில் பிரதான பிரிவுகள்-பாண்டி வேள்ளாளர், கொடிக்கால் வேளா ளர், அரும்பு குத்தி வேளாளர், செம்பி நாட்டு

வேளாளர், குறும்பு வேளாளர், மலைக்குத்தி வேளாளர், என்பன. வைதீக இந்து சமயத்தைப் பின்பற்றும் இவர்கள் தங்களைப் 'பிள்ளை', 'முதலி' என்றும் அழைத்துக் கொள்கின்றனர்.

இவர்களில் செம்பி நாட்டுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் கணக்கர்களாகப் பணியாற்றி வந்தவர்கள். சேது நாட்டு அரசியலில் தீவிர மாற்றங்களைப் புகுத்திய விஜயரகுநாத சேதுபதி காத்த தேவர் இந்த சமூகத்தினரை, மதுரைச் சீமையில் இருந்து வரவழைத்து தமது அரசுப் பணியில் அமர்த்திக் கொண்டார். அது முதல் பல ஆண்டுகள் பட்டோலை எழுதுவதில் இருந்து படைத் தலைமை நடத்தும் பணிவரை பல நிலைகளிலும் சேதுநாட்டு அரசியலில் இந்த சமூகத்தினர் சிறப்பான சேவை செய்துள்ளனர். சேதுபதிகளின் தளவாயாகவும், பிரதானியாகவும் பல ஆண்டுகள் பணியாற்றி பெரும் புகழ் படைத்தவர்கள், சங்கரநாராயண பிள்ளை, தாமோதரம் பிள்ளை, முத்துஇருளப்பபிள்ளை ஆகியோராவர். அடுத்து கிழக்கு இந்திய கும்பெனியார் ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறைக்கு வலிவுற்ற அங்கமாகத் திகழ்ந்தவர்களும் இந்த சமூகத்தினர்கள். கிராமங்களில் பயிரிடப்படும் பயிர்கள் அவற்றிலிருந்து எதிர்பார்க்கப் படுகிற மகசூல், அதில் வரியாக அரசு பெற வேண்டிய பங்கு அல்லது தொகை ஆகியவற்றை நிகுதி செய்து கணக்குகளைப் பராமரிக்கும் பணியாளர்களாக இவர்கள் இருந்து வந்தனர்.

இத்தகைய பணி சேதுபதி மன்னர்களது ஆட்சியில் காரான் அம்பலம், காட்டுஅம்பலம் என்றும் பின்னர் கர்ணீகர் அல்லது கர்ணம் எனவும் வழங்கப்பட்டது. இந்தப் பணிக்கான ஊதியம் அவர்களுக்குக் களத்துமேட்டில் அறுவடையின் பொழுது நெல்லாக வழங்கப்பட்டு வந்தது.

இவர்கள் அரசுப் பணியில் மட்டும் அல்லாமல் இலக்கிய உலகிலும்மிகச் சிறப்பானதொரு இடத்தை எய்தியுள்ளனர். இராமநாதபுரம் சோமசுந்தர குருக்கள், முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்

பெருமாள் கவிராயர், திருப்புவனம் கந்தசாமிப் புலவர், சிறுகம்பை சர்க்கரைப் புலவர், பரத்தை வயல் முத்துக்குட்டிப் புலவர், வீரை ஆசுகவிராயர் ஆகியோர் அவர்களில் முக்கியமானவர்கள்.

இந்த சமூகத்தில் மிகவும் பிற்பட்டவர்கள் அரும்பு குத்தி வேளாளர் என்ற பிரிவினர். இவர்கள் திருவாடானை வட்டத்தில் ஏழு ஊர்களில் உள்ளனர்.

O

## இடையர்

இந்த சமூகத்தினர் இந்த மாவட்டம் முழுவதும் பரவலாக வாழ்ந்து வருகின்றனர். ஆநிரை மேய்த்து காத்து ஒழுகும் தொழிலையுடையவர்களான முல்லைத் திணைக்குரியவர்கள். ஆனல் இந்த மாவட்டத்தில் ஆற்று வளமும் மேய்ச்சல் நிலமும் மிகவும் குறைவு. ஆதலால், இவர்கள் பெரும்பாலும் விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளனர். ஆனல் இராமநாதபுரம், முதுகுளத்தூர் வட்டங்களில் உள்ள இந்த மக்களில் சிலர் தங்களிடம் உள்ள செம்மறி ஆட்டுக் கிடைகளை வளர்த்து அபிவிருத்தி செய்யும் 'குலத் தொழிலில்' இன்னும் தொடர்ந்து நிலைத்து நீடித்து வருகின்றனர்.

தங்களிடம் உள்ள நூற்றுக்கணக்கான ஆடுகள் அடங்கிய கிடைகளுடன் ஆண்டு தோறும் வடக்கு நோக்கி புதுக் கோட்டை, தஞ்சை, காரைக்கால் வரையிலான கொள்ளிடம், காவேரி, வெட்டாறு, வெண்ணாறு, அரசலாறு படுகைகளுக்குச் சென்று மேய்ச்சலை முடித்துக் கொண்டு திரும்புகின்றனர். கார்த்திகை மாதத்தில் பல பகுதிகளில் இருந்து

தொகுதிகளாகப் புறப்படுகின்ற இந்த மக்களும் ஆட்டுக்கிடைகளும் பங்குனி சித்திரை மாதங்களில் சொந்த ஊர்களுக்குத் திரும்புகின்றனர். ஆண்டு தோறும் நடைபெறுகின்ற இந்த ''போக்கு ஆட்டுக் கிடை'' மூலம் ஆடுகள் நன்கு வளர்ந்து பல்குவதற்கு ஏற்ற தீனி கிடைப்பதுடன், கிடைகளைக் கொண்டு செல்பவர், ஆங்கு விளைநிலங்களில் கிடைவு செய்வ தற்கு கூலியாக நெல்லும் பெற்று வருகின்றனர்.

சேதுபதிகளது ஆட்சிக் காலத்தில் மன்னர் ஊர்வளம் காண நேரில் வரும் பொழுதும், புதிதாக கண்மாய் களில் மடைகள் அமைத்த பொழுதும், கோயில் பெருவிழாக்களின் பொழுதும் கிராமங்களில் உள்ள இடையர் தலைவர் கிடாய்களையும், வெண்ணை, நெய், தயிர், பால் ஆகியவைகளை வழங்கி வருமாறு இருந்து வந்தது. இதற்கென அறுவடை காலங்களில் அவர்களுக்கு தானியம் வழங்கப்பெறும் ''சுவந் திரம்'' இருந்ததை இராமநாதபுரம் சமஸ்தான ஆவணங்களில் இருந்து தெரிய வருகிறது. இந்து மதத்தின் வைணவ நெறியைப் பின்பற்றும் மக்க ளாக இடையர் இருந்து வருகின்றனர். இவர்கள் ஆயர்பாடி, முக்கந்தர் (முகுந்தர் என்பதன் திரிபு) கோனர் என்றும் வழங்கப்பட்டு வருகின்றனர்.

## பார்க்கவர்

பயிர்த் தொழிலை ஆதாரமாகக் கொண்டுள்ள இன்னொரு சிறுபான்மையினர் பார்க்கவர் குலம் என அழைக்கப்படும் நத்தமர் ஆவர். இவர்களை நத்தம் படி என வழங்குவதும் உண்டு. இந்த மாவட்டத்தில்

இவர்கள், திருவாடானே, தேவகோட்டை, சிவகங்கை, இளையான்குடி, பரமக்குடி, மானாமதுரை வட்டங்களில் ஆங்காங்கு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மாவட்டத்தின் ஏனைய சிறுபான்மை இனத்தவரைப் போன்று, இந்த மக்களும், இந்த மாவட்டத்திற்கு வெளியே இருந்து இங்கு குடிவந்தவர்கள் என்பது வெளிப்படை காரணம் இந்தப்பிரிவினர். இந்த மாவட்டத்தைவிட தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, சேலம், தென்னுற்காடு மாவட்டங்களில் எண்ணிக்கையில் அதிகமாக இருந்து வருவதுதான், ஆனுல் இவர்களது குடியேற்றத்தைப் பற்றி அறுதியிட்டுக் கூறவல்ல ஆவணம் எதுவும் இல்லே.

இவர்கள், தங்களே ''வேளிர்'' வழியினராகச் சொல்லிக் கொள்வதுடன், சங்ககால வள்ளலான பாரிவேளும், திருக்கோவிலூர் மலேயமான் திருமுடிக்காரியும் தங்கள் மரபினர் எனப் பெருமிதம் கொள்கின்றனர். இந்த மாவட்டத்தில் உள்ள பிற சிறுபான்மை மக்களேவிட உழைப்பில், இந்த சமூகத்தினர் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் வாழும் பகுதி எப்பொழுதும் விவசாயத்தில் வளர்ந்து பொலிகிறது. எந்த மண்ணேயும் பொன்னுக்கும் திறமை உடையவர்களாக இருப்பதால்தான் என்னவோ, இவர்கள் ''உடையார்'' என்றே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

பதினேழாம், பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கு சமயப் பணியில் ஈடுபட்ட புனித ஜான்-டி-பிரிட்டோ புனித மார்ட்டின் ஆகிய வெளிநாட்டு சமயத் தொண்டர்களது, தியாகம், தொண்டு, பிரச்சாரம் ஆகியவைகளினுல் கவரப்பட்ட இந்த சமூகத்தினரின் ஒரு பிரிவினர் கிறிஸ்துவர்களாக வாழ்ந்து வருகின்றனர். மத மாற்றத்தினுல் தங்களது பெயர்களே இவர்கள் மாற்றிக் கொண்டாலும், பெயர்விகுதியில் ''உடையார்'' என்ற சொல் மாற்றம் பெருமல் ஒட்டிக் கொண்டு உள்ளது.

அந்நியர் ஆட்சிக் காலமுதல், இவர்கள் சமூகநிலேயில் பின்னடைந்தவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்த சமூகத்தினர், அரசியலில் விழிப்புக்கொள்ளாத

காரணத்தினால் கல்வி, சமுதாயத் தலைமை, தேசிய நிலை ஆகிய துறைகளில் உயர்வு பெறவில்லை.

1982 இல் புதுதில்லியில் நடைபெற்ற ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்று தங்கப்பதக்கம் பெற்த சார்ளஸ் புரோமி, திருவாடானை வட்டத்து உடையார் சமூகம் என்பது குறிப்பிடத்தக்கது.

○

## பழங்குடி - பழியர்

இந்த மாவட்டத்தின் மிகப் பழமையான பழங்குடியினர் பழியர்கள். இவர்கள் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டங்களில் உள்ள மரச்சரிவுகளில் ஆங்காங்கு வாழ்ந்து வருகின்றனர். மூங்கில் கழைகளை நட்டு புல்லினால் வேய்ந்த மிக எளிமையான குடிசைகள் அவர்களது இருப்பிடங்களாக உள்ளன.

மழையிலும், பனியிலும் நலிந்து இயற்கையுடன் ஒன்றியவர்களாக வாழ்ந்துவரும் இவர்கள் இன்றைய நாகரிக உலகை அறியாதவர்கள். காய்கனிகளையும், கிழங்குகளையும், தேன் அடைகளையும் தேடிச் சேகரித்து சேமித்து வைத்து அவைகளையே உண்ணும் உணவாகப் பயன்படுத்தி வருகின்றனர். காட்டு விலங்குகளை வேட்டையாடவும், நீர்ச்சுனைகளில் உள்ள மீன்களைப் பிடிக்கவும் தெரிந்து வைத்துள்ளனர். கைத்தடியும், அரிவாளுந்தான் அவர்களது ஆயுதங்கள்.

கள்ளங்கபடு அறியாத இவர்கள் இயல்பாகவே அச்சமும் கூச்சமும் மிக்கவர்களாக உள்ளனர். வேற்று

மனிதர்களிடம் பேசுவதும் பழகுவதும் மிகக்குறைவு. கபில நிறமும், சுருளான தலைமுடியும், இடைமட்டும் மறைக்கும் கந்தையுடன் இவர்கள் காட்சியளிக்கின்றனர். குறிப்பாக பெண்கள் வெளிவட்டார மனிதர்களைக் கண்டால் ஓடி ஒளிந்து கொள்வர். காட்டுத் தேவதைகளுக்கு அடுத்தாற்போல, மனிதர்களுக்குத் தான் மிகவும் பயப்படுகின்றனர். அண்மைக் காலங்களில் வெளி மக்களுடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாக இவர்களது வாழ்க்கையில் சிறு மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இவர்களது அன்றாட வாழ்வில் தேன் பிரதானப் பங்கை நிறைவேற்றி வருகிறது. தங்களது தெய்வமான பளிச்சியம்மாளை வணங்குவதற்கு தேனை நைய்வேத்தியமாகப் பயன்படுத்துகின்றனர், அடுத்து மணமகளுக்கு மணமகள் வழங்கும் முதல் அன்பளிப்பு தேனும் கிழங்குந்தான். துணி, புகையிலை போன்ற அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு பண்டமாற்றாக அவர்கள் பயன்படுத்துவதும் தேன் தான். தேன் நிரப்பி வைப்பதற்காகப் பயன்படுத்தும் பாத்திரம் ஒன்றைத் தவிர வேறு எவ்வித மட்கலங்களும் அவர்களிடம் கிடையாது.

இவர்களது சமூக வாழ்வை நெறிப்படுத்துவதற்கு தேவரடி என்ற தலைவனும், அவருக்கு உதவியாக சாத்தான் என்பவரும் உள்ளனர். பரம்பரை பணியாளர்களான இவர்கள் பழியரது கூட்டு வழிபாடு, திருமணம் போன்ற பொது நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வைப்பவர்களாக இருந்து வருகின்றனர்.

இவர்கள் பேசும் மொழி கலப்படமான தமிழ். பழந்தமிழ்குடிகளின் வகைகளைச் சேர்ந்த மற்றவர்கள் நாடோடியாக நாட்டுப்புறங்களில் வாழ்ந்தாலும் இவர்கள் மட்டும் நிலையாக மேற்குத்தொடர் மலைச் சரிவுகளில் வாழ்ந்துவருகின்றனர். இவர்களையொத்த பழியர்கள் நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டையிலும், மதுரை மாவட்டம் பழநி மலையிலும் உள்ளனர். பழையர் (பழமையானவர்கள்) என்ற சொல் பழியர் எனத் திரிபு பெற்று வழங்கப்படுகிறது.

○

# நூலாசிரியரும் அவர்தம் படைப்புகளும்

| எழுத்தாளர் பெயர் | ஊர் | படைப்புகள் |
| --- | --- | --- |
| 1 இ. ப. அண்ணாமலை | அ. கோட்டை | சிறுகதை<br>நாடகம்<br>கட்டுரை |
| 2 எஸ். எ. பி அண்ணாமலை. | காரைக்குடி காந்தான் | பிரமச்சாரி<br>நீ<br>சொல்லாதே |
| 3 எம். ஆர். எம். அப்துல்ரகீம் | தொண்டி | கவலைப்<br>படாதே<br>முன்னேறுவது<br>எப்படி? |
| 4 எல். அருணாசலம் | தேவகோட்டை | நாட்டியக்<br>காரி |
| 5 டி. ஆர். அருணாசலம் | தேவகோட்டை | நான் கண்ட<br>காந்தி |
| 6 அழ. அழகப்பன் | உ. சிறுவயல் | காந்திமதி<br>ஜப்பான்<br>பொம்மை |
| 7 ஆறு. அழகப்பன் | ஆத்தங்குடி | சிரித்தமலர் |
| 8 வி. அழகப்பன் | காரைக்குடி | சிறுகதை<br>கவிதை |
| 9 க. ஆடலவல்லான் | இராமநாதபுரம் | கவிதை<br>கட்டுரை |
| 10 அகமதுஜபார் | கீழக்கரை | நல்லற<br>போதனை |
| 11 அப்துல்மஜீத்புலவர் | பனைக்குளம் | இஸ்லாமியத்<br>தமிழ்ப்<br>புலவர்கள் |
| 12 அமீர்அலிகேப்டன் | இளையாங்குடி | கட்டுரை<br>கதைகள் |

| | | | |
|---|---|---|---|
| 13 | மு. அய்யாக்கண்ணு | திருப்பத்தூர் | கட்டுரை கதைகள் |
| 14 | அழகாபுரிஅழகப்பன் | காரைக்குடி | கட்டுரை கதைகள் |
| 15 | சின்னஅண்ணமலை | தேவகோட்டை | சீனத்துச் சிங்கார் |
| 16 | ரா. சிதம்பரம் செட்டியார் | மேலப்பசளை | புதைந்த விருந்து |
| 17 | வி. ஆர்.எம். | காரைக்குடி | இலக்கியம் |
| 18 | ராய. சொக்க கலிங்கன் | அமராவதி புதூர் | காந்தி பிள்ளைத் தமிழ் |
| 19 | நா. தர்மராசன் | சிவகங்கை | இத்தாலியக் கதைகள் |
| 20 | மா. பா. குருசாமி | பாறைப்பட்டி | மலர் கொத்து |
| 21 | ம.ரா. போ. குருசாமி | மம்சாபுரம் | வாழ்வும் வழியும் |
| 22 | கொ. மா. கோதண்டம் | ராஜ பாளையம் | சிறு கதைகள் |
| 23 | கோமதி ஸ்வாமிநாதன் | சிவகங்கை | எதிரொலி |
| 24 | மா. கோ. கோவிந்தன் | மாணமதுரை | சிறுகதை |
| 25 | பெ. கோவிந்தன் | ஸ்ரீ.வி.புத்தூர் | சிறைமீட்ட செம்மல் |
| 26 | வ. தேனப்பன் | தேவகோட்டை | சிறுகதைகள் |
| 27 | இக்னேஷியஸ் இருதயம் — மறைதிரு | இடைகாட்டூர் | இளமையின் மகிழ்ச்சி |
| 28 | சே. கனகசபை | க. வ. பட்டி | நாளைய உலகம் |
| 29 | கமால். எஸ்.எம் | இராமநாதபுரம் | சிறுகதை |

| | | | |
|---|---|---|---|
| 30 | எ. எம். ஏ. காசிம் | கீழக்கரை | கதை, கட்டுரை |
| 31 | இரா. கார்த்திகேயன் | மென்னநதி | லெனின் யார்? |
| 32 | எஸ். கிருஷ்ணன் | மதகுபட்டி | கவிதைகள் |
| 33 | இ. மாணிக்க வாசகம் | ஆ. தெக்கூர் | வான்புகழ் வள்ளுவர் |
| 34 | முல்லைமுத்தையா | தேவகோட்டை | வேடிக்கை மனிதன் |
| 35 | முகம்மதுகாசிம் | இளையாங்குடி | இறைவன் இல்லை |
| 36 | முகம்மதுசெரீபு.நா. | மானாமதுரை | ஓவியக்கலை |
| 37 | மீரா (இராசேந்திரன்) | இராமநாதபுரம் | ஊசிகள் |
| 38 | மனோகரன் மீ. | இராமநாதபுரம் | தென்னமரிக்காவில் சோழர்கள் |
| 39 | முகமதுமுஸ்தபா | தொண்டி | நீதிக்கு ஓர் உமர் |
| 40 | மவ்லானா எம். கே. இ. | கீழக்கரை | வேதபுரியின் ரகசியம் |
| 41 | அ. லெ, நடராசன். | காரைக்குடி | அரபுக் கதைகள் |
| 42 | ரா. நடராசன் | மகாராசபுரம் | எங்கள் நேரு |
| 43 | நா. ரா. நாச்சியப்பன் | ஆ. முத்துப் பட்டணம் | கொய்யாக் கதைகள் |
| 44 | நூர்முகமது | திருப்புத்தூர் | முதுமொழி மாலை |
| 45 | நா. பார்த்த சாரதி | நரிக்குடி | குறிஞ்சி மலர் |
| 46 | புன்னைவனநாத முதலியார் | ஸ்ரீ. வி. புத்தூர் | மகாராணி மங்கம்மாள் |

| | | | |
|---|---|---|---|
| 47 | மா. பெருமாள் | ஸ்ரீ. வி. புத்தூர் | எண்ண அலைகள் |
| 48 | பெரியசாமி சண்முகம் பாமணி | பரமக்குடி | அமுதமுல்லை |
| 49 | து. ரெத்தினவேலு | கோபநாயக்கன்பட்டி | கலைஞனின் குழந்தை |
| 50 | இராமசாமி | விருதுநகர் | மனக் கோயில் |
| 51 | இராம சுப்பிரமணியன் | நெற்குப்பை | கவிதைகள் |
| 52 | இராமநாதன் செட்டியார் லெ.ப.கரு. | நெற்குப்பை | அண்ணாமலை அரசர் |
| 53 | கு. இராமலிங்கன் | பனங்குடி | செங்குமுதம் |
| 54 | இராஜமாணிக்கம் (முகவை) | முகவை | கவிதைகள் |
| 55 | இலக்குமண செட்டியார் சோம. லெ. | நெற்குப்பை | அமெரிக்கா வைப்பார் |
| 56 | இரா. இளங்குமரன் | வாழவந்தாள் புரம் | நாவலர் பாரதியார் |
| 57 | இளங்கோவன் | நல்லமுத்தன் பட்டி | குழந்தை உள்ளம் |
| 58 | சுப. இளங்கோவன் | கல்லுப்பட்டி | கவிதைகள் |
| 59 | சோம. இளவரசு | கீழச்சீவல்பட்டி | இலக்கண வரலாறு |
| 60 | சண்முகம் எம். எஸ். பி. | கொத்தமங்கலம் | ஆனந்தக் களிப்பு |
| 61 | சண்முகம் | இளையாங்குடி | கவிதைகள் |
| 62 | எம். லெ. சபரி ராஜன் | மீசலூர் | சத்திய வேட்கை |

| | | | |
|---|---|---|---|
| 63 | கூ. சம்பந்தம் | மாறுமதுரை | பனைத் தொழில் |
| 64 | லெ. சாத்தப்பன் | கண்டவ ராயன்பட்டி | நினைக்கிறேன் நெஞ்சு வெடிக்கிறது |
| 65 | மு. சிவம் | இராஜபாளையம் | பாக்கியசாலி |
| 66 | சுப்பு. கொத்த மங்கலம் | கன்னூரியேந்தல் | மஞ்சி விரட்டு |
| 67 | சோ. ம. சுவாமி நாதன் | தே. கோட்டை | ம. பொ. சி- வாழ்க்கை வரலாறு |
| 68 | சூசைராஜா எஸ்.ஏ. | காரைக்குடி | வீட்டு வைத்தியம் |
| 69 | வா.மு.சேதுராமன் | ஆண்டநாயக புரம் | எண்ணச் சுடர் |
| 70 | ப. சோதிமுத்து | குருந்தமடம் | நாட்டுக் குழைத்த நன்மகன் |
| 71 | நா. சோமசுந்தரம் | சண்முகநாதபுரம் | ஜெயசிங் |
| 72 | சுந்தரம்பிள்ளை. ஜே | விருதுநகர் | தஞ்சைத் திருக் கோயில்கள் |
| 73 | ஷாஜஹான் | ராசசிங்க மங்கலம் | வாழ்க்கைச் சுழல் |
| 74 | ஷாஜஹான்கனி | இளையங்குடி | நபிச்க்ரசக வர்த்தி நாயகம் பிள்ளைத் தமிழ் |
| 75 | எம். வி. சுந்தரம் | உத்தர கோசமங்கை | சாத்திரப் பேய்களும் சாதிப்புரட் டர்களும் |

| | | | |
|---|---|---|---|
| 76 | செட்டியார் ஏ. கே. | கோட்டையூர் | உலகம் சுற்றும் தமிழன் |
| 77 | எம். கே. தாயப்பன் | திருத்தங்கல் | மணப் பெண் |
| 78 | தியாகமூர்த்தி | உத்தர கோசமங்கை | அதிர்ஷ்ட மாக வாழ எண் கணிதமும் ரேகையும் |
| 79 | ஒய். திருநாவுக்கரசு | தேவகோட்டை | கோமாளி |
| 80 | வாசன் | இலுப்பக்குடி | பொங்கும் மங்கலம் |
| 81 | வைகைவாணன் | மானாமதுரை | மணக்காத பூக்கள் |
| 82 | மாசி | மானாமதுரை | புழுதிப் பூக்கள் |

## இருண்ட கால ஏடு

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் மகிபாலன் பட்டியலில் வாழ்ந்த கணியன் பூங்குன்றனார், ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என தமிழ் மக்கள் அனைவரையும் தம்மவராக உரிமை பாராட்டி அன்பு முழக்கம் செய்தார். பின்னர் இராமநாத புரத்தில் சமாதி கொண்டுள்ள தாயுமான அடிகளும் ''சேரவாரும் சகத்தீரே'' என இந்தத் தரணியில்

வாழும் மனித குலம் அனைத்தையும் சமரச சமத்துவ அணிக்கு அழைத்தார். இத்தகைய சான்றோர் வாழ்ந்து மறைந்த இந்த மாவட்ட மண்ணில். தன்னோடொத்த மனிதனை தன்னைவிட இழிந்தவனாக. தாழ்ந்தவனாக, மதித்த அநாகரிக காலம் ஒன்றும் இருந்தது என்பதை வரலாறு காட்டுகிறது.

தமிழ்ச்சமுதாயத்தில் ஆரிய சமயமும், வாழ்க்கை நெறிகளும் ஊடுருவி, மனிதர்களிடைய நால்வகைப் பகுப்புகள் நிலைகொண்டமையே இதற்குக்காரண மாகும், கல்வி, பொருளாதார தரங்களில் மிகுந்தவர் அவைகளில் பிற்பட்டவருக்கு பணிந்து வணங்கி ஊழியம் செய்யும் ஆண்டான் அடிமைநிலை உருவாகி நடைமுறைக்கு வந்தது பெரிய புராணத்து நந்தனா ரும் தேவாரம்பாடிய சுந்தரரும், இத்தகையதொரு இழிந்த சமுதாயத்தைச் சுட்டும் வரலாற்று வரம்பு களாக உள்ளனர் என்பதை யாவரும் அறிவர்.

இந்தநிலை, இந்த மாவட்டத்திலும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் நிலவியது என்பதை ஆனந்தூரில் உள்ள கல்வெட்டுச் செய்தியில் இருந்து தெரிய வருகிறது. அந்தச் செய்தியின்படி, அந்த ஊரில் உள்ள திருமதிச் சடைநாயனார் கோயில் ஸ்ரீருத்தி ரமாகேசுரருக்கும் சீகாரியம் செய்வார்களுக்கும் அரும் பொற் கூற்றத்து நல்லூரில் உள்ள நால்வர், அந்த ஆலயத்து திருக்காமக் கோட்ட நாச்சியார் திருப்பணிக்கு, இடைக்குடி மக்கள் சிலரை விற்றனர் அந்த அடிமைகளுக்கான விலைப் பிரமாணத்தை திருத்தேர்வளையைச் சேர்ந்த வண்ணக்குச் செட்டி யார் என்பவர் வழங்கினார்.

மற்றொரு செய்தி, கி. பி. 1657-இல் நிலவிய கடுமை யான பஞ்சத்தின்பொழுது, திருவாடானை வட்டத் தில் உள்ள சிற்றூரில் உள்ள மறக்குடி மகன் ஒருவர் தமது அருமைப்புதல்வனை சிறிது பொருளுக்குப் பகரமாக விற்று விடுகிறார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் அந்தப் பகுதி பாளையக்காரர் ஒருவரது தீராத வியாதியை தீர்த்து வைத்ததற்குப் பரிசாக தனது அருமை மகனை அடிமைத் தளையினின்றும்

விடுதலை செய்து கொடுக்குமாறு கேட்டார். அந்தப் பாளையக்காரரும் அவ்விதமே செய்தார் என அந்தப் பகுதியில் சமயப்பணியில் ஈடுபட்ட கிறித்துவப் பெரியாரது கி. பி. 1663-ஆம் ஆண்டுக் குறிப்புகளில் காணப்படுகிறது.

நமது மாவட்டத்தின் இருண்ட கால வரலாற்றின் இரு ஏடுகள் என இவற்றைக் கொள்ளலாம்.

○

## தீக்குளித்த காரிகைகள்

தனது அன்பிற்குரிய தெய்வமாகப் போற்றப்பட்ட கணவன் தங்களை விட்டு இறந்த பிறகு மேலும் கைம்மைக் கோலத்துடன் வாழ விரும்பாத பூதப் பாண்டியன் தேவியார் தீப்புகத்துணிந்ததை சங்கப் பாட்டு சொல்கிறது. ஆனால் தமிழ் சமுதாயத்தில் ஏதோ ஒரு கட்டத்தில் எங்கோ நிகழ்ந்த ஒருநிகழ்ச்சியாகத்தான் தோன்றியது.

ஆனால் இத்தகைய கற்புடைப் பெண்டிர்கள் தமிழகத்தில் பல ஊர்களில் இறந்த கணவனுடன் தீப் புகுந்த இடங்கள் ''தீப் பாஞ்சிக் காணி'' என்றும்' ''எரிச்சி நாச்சியார் கோவில்'' என்றும் சுட்டப்பட்டு வருகின்றன இத்தகைய இரண்டு சிறு வழிபாட்டு இடங்கள் இன்றும் இராமேஸ்வரம், இராஜபாளையம் வட்டங்களில் உள்ளன. அவை பற்றிய விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களது வரலாற்றில் இத்தகைய இரண்டு நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன.

முதலாவது நிகழ்ச்சி கி. பி. 1710 இல் இராமநாத புரத்தில் நிகழ்ந்தது. அந்த ஆண்டின் இறுதியில் மறவர் சீமையின் இணையற்ற மாமன்னராக கிழவன் சேதுபதி இறந்தார். அவரது உடலைத் தகனம் செய்வதற்காக இராமநாதபுரம் கோட்டை வாசலுக்கு எதிரில் சிறிது தொலைவில் அமைக்கப்பட்ட சிதை குழியில் அவரது நாற்பத்தேழு மனைவிகளும் தீக் குளித்த செய்தியைப் படிக்கும பொழுது நெஞ்சம் வெடிக்கும் வண்ணம், அவை வரலாற்றில் வரையப் பட்டுள்ளது.

இதனையடுத்து கி. பி. 1720 இல் நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சி நடந்தது, விஜயரகுநாத சேதுபதி தமது இரண்டு பெண் மக்களையும் பாம்பன் கோட்டைக்கு அதிபராக இருந்த தண்டத் தேவருக்கு மணம் செய்து வைத்தார். மண்டபம் தோணித் துறையில் படகில் ஏறி பாம்பன் கால்வாயைத் கடநது இராமேஸ்வரம் சென்றுதிரும்பும் பக்தர்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்து உதவியையும் செய்யுமாறு அரசர் அவரைப் பணித்து இருந்தார்.

ஆனால் பயணிகளுக்கு சில வசதிகள் செய்வதற்கு அரசரது ஆணை இல்லாமல் ஒரு வரியை தண்டத் தேவர் பயணிகளிடம் வசூலித்து வந்தார். இதனை யறிந்த சேதுபதி தண்டத்தேவரது நடவடிக்கை சிவத்துரோகம் என தீர்மானித்து அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றுகையில் அவரது பெண் மக்கள் இருவரும் (தண்டத்தேவர் மனைவிகள்) தீக் குளித்து மாய்ந்தனர்.

o

சங்க காலத்திற்கு முன்னரே, மேற்கு நாடுகளான பாரசீகம், பாபிலோனியா, உரோமம், கிரேக்கம், மிஸ்ரு ஆகியவைகளுக்கும் தமிழகத்திற்குமிடையே சீரான வணிகத் தொடர்புகள் வளர்ந்து வந்தன. அதன் காரணமாக யவனர்களும்,பின்னர் சோனர் களும் இங்கு வந்து தங்கினர். இதனை இலக்கியங் களும் காப்பியங்களும் உறுதி செய்கின்றன.

அண்மையில் அழகன்குளம் கிராம அகழ்வில் கிடைத்த உரோம நாட்டு மண்பாண்ட வகைகள். பெரிய பட்டினம், கீழக்கரை, பிலாத்தோப்பு, ஏர் வாடி, உவந்தான்குடி, ஆகிய ஊர்களில் கிடைத்த வெளிநாட்டார் நாணயங்கள், ஆக்களூர் களிமண் குண்டு ஆகிய சிற்றூர்களில் கிடைத்த பொன் அணி கலன்கள் ஆகியவை இந்த மாவட்டத்தில் வெளி நாட்டார் தொடர்பும் குடியேற்றமும் இருந்ததற் கான வரலாற்றுத் தடயங்களாகும்.

அருவியூர் என்ற குலசேகரபுரம், பிரான்மலை, தீர்த் தாண்டதானம், பெரியபட்டினம் ஆகிய ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களும், வெளிநாட்டாரது வாணி கச்சாத்துக்கள் இங்கு நிலை கொண்டிருந்ததை வலி யுறுத்துகின்றன. இவை போன்ற இன்னும் சில பயணக்குறிப்புகள், மடல்கள் ஆகியவையும் பழமை யைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. அவற்றில் இருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

பதினோராவது நூற்றாண்டில் இந்தப் பகுதிக்கு வந்த அல்பரூனி என்ற நூலாசிரியர் இலங்கைக்கு எதிர் கரையில்இராமேஸ்வரம்இருப்பதாகவும்,அங்கிருந்து இரண்டு கல் தொலைவில் இராமபிரான் அமைத்த சேதுபந்தர் இருப்பதாகவும் தமது குறிப்பில் எழுதி யுள்ளார் (கி. பி. 1035). அவரையடுத்து அரேபிய மணணில் உள்ள புனித மதினா நகரில் இருந்து கி. பி. 1185 இல் மறவர் சீமைக்கு வந்த சுல்தான் செய்யிது இபுராகிம் (வலி) அவர்கள், இங்கு இஸ்லாமிய பணியை மேற்கொண்டதுடன் அதற்கு இடையூறாக

இருந்த பாண்டிய மன்னனை வென்று பதின்மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் பிறிதொரு பாண்டியனால் வீரமரணமடைந்தார். அவர், தமது வாளை உறையினின்றும் எடுத்து வீணர்களின் குருதியைக் கொட்டாமல் இருந்தால், இந்த நாட்டில் இருந்து அஞ்ஞானத்தை அறியாமையை அகற்றி இருக்கமுடியாது என வரைந்து வைத்துள்ளார்.

இவரைத்தொடர்ந்து இந்த மாவட்டத்திற்கு கிழக்கு கடற்கரையில் வந்து இறங்கியவர் உலகப்பயணி மார்க்கோபோலோ. சீனநாட்டிலிருந்து தமது தாயகமான போர்ச்சுக்கல் நாடு செல்லும் வழியில் கி. பி. 1293இல் இங்கு வந்தார். இந்தப் பகுதியையும் உள்ளடக்கிய பாண்டியநாட்டில் பாண்டியர் ஐவர்ஆட்சி புரிந்ததாகவும், தேவிபட்டினம், பெரிய பட்டினம் துறைமுகங்கள் வழியாக வந்து இறங்கும் அரபு நாட்டு குதிரைகள் பற்றியும், கிழக்கு கடற்குடாவில் ஏப்ரல் மாதத் துவக்கம் மே மாதம் முடிய நடைபெறும் முத்துக்குளித்தல் முறைகள்பற்றியும் அவரது குறிப்புகளில் விவரமாக வரைந்துள்ளார்.

பின்னர், தில்லிசுல்தான் கில்ஜி முகம்மதுவின் தளபதி குஸ்ருகான் இந்தப் பகுதயில் சூறாவளி படையெடுப்பு ஒன்றை கி. பி. 1318 இல் மேற்கொண்டார். அப்பொழுது பெரிய பட்டினத்தில் பிரபலமாக இருந்த சுல்தான் ஸிராஜுதீன் என்ற அரபுநாட்டு தனவந்தர்து பெருஞ்செல்வத்தை அந்த தளபதி கொள்ளை கொண்டதாகவும், அவரையும் அவரது குடும்பத்தினரையும் சிறைப்படுத்தி கொடுமை செய்ததாகவும், தனவந்தரது அழகு மகளை தனக்கு மணம் செய்து வைக்குமாறு தளபதி நிர்பந்தம் செய்ததால் அந்த வணிகர் விஷம் அருந்தி தம்மை மாய்த்துக் கொண்டார் என அந்தப் படையணியுடன் வந்த அமீர் குஸ்ரு என்ற வரலாற்று ஆசிரியர் தமது நூலில் வரைந்துள்ளார்.

இன்னொரு உலகப் பயணியான இபுது பதூதா என்ற மொரோக்கோ நாட்டவர். இலங்கையிலிருந்து மாலத்தீவுகள் செல்லும் பயணத்தில் கப்பல் சேத

மடைந்து நமது மாவட்ட கிழக்குக் கடற்கரையில் கரையேறினர். கி. பி. 1344 இல் அப்பொழுது மதுரையில் அரசராக இருந்த தமது உறவினரான சுல்தான் கியாஸுதீன் தமகானியைச் சந்தித்துவிட்டு மாலத்தீவுப் பயணத்தைத் தொடர்வதற்கு பெரிய பட்டினத்தில் மூன்று மாதங்கள் தங்கி காத்து இருந்தார். அப்பொழுது அங்குள்ள அழகிய துறைமுக அமைப்பு, அந்தப் பட்டினத்தில் மண்வளம், அங்கு எப்பொழுதும் மோன நிலையில் உள்ள இசுலாமிய ஞானி, அவரது சீடர்கள் அவர்களில் ஒருவர் புள்ளி மான் ஒன்றையும், இன்னொருவர் சிங்கக் குறளையொன்றையும் வளர்த்து வந்தது. அந்த மிருகங்கள் இரண்டும் அன்போடு இயைந்து வாழ்ந்து வந்தது போன்ற நிகழ்ச்சிகளை தமது பயணக் குறிப்பில் பதூதா பதிவு செய்து இருக்கிறார்.

சிரியா நாட்டு ஆசிரியரான திமிஸ்கி என்பவர் கி. பி. 1325 இல் நமது மாவட்டத்திற்கு வந்து சென்றார். அவர் விட்டுச் சென்றுள்ள குறிப்புகளில் கடற்கரைப் பட்டினமான தொண்டியும், உள்நாட்டுப் பட்டணமாகிய காளையார் கோவிலும் இடம் பெற்றுள்ளன. இவை இரண்டும் மாபார் பகுதியில் உள்ள பிரதான நகரங்களாக வரைந்துள்ளார். அவர் அரபு மொழியில் குறிப்பிட்டுள்ள இன்னும் சில நகரங்கள் எவை என்பதை நிர்ணயம் செய்ய முடியாமல் உள்ளது.

இந்த வரலாற்று ஆசிரியர்களைத் தவிர, கிறிஸ்துவ சமயப் பணிக்கென மேலை நாடுகளில் இருந்து வந்த பாதிரியார்களும் இந்த மாவட்டத்தில் தாங்கள் நேரில் கண்டவைகளைத் தங்களது பயணக் குறிப்புகளிலும் கடிதங்களிலும் குறித்துள்ளனர். குறிப்பாக் கி. பி. 1682 இல் நியூஹாப் என்ற பாதிரியார், கீழக்கரை, இராமேஸ்வரம், வேதாளை ஆகிய கடற்றுறைகளை குறிப்பிட்டு இருப்பதுடன் மறவர் சீமையின் தலைநகரான பெரிய பட்டினம் இருப்பதாகவும் அங்குள்ள மறக குடியினரை கிறித்துவ சமயச் சான்றோர்கள் மிகவும் பிரயாசைப்பட்டு திருத்தியும், விரைவிலேயே தங்களது முந்தைய தீய தொழிலான திருட்

டில் ஈடுபட்டதை மிகவும் கவலையுடன் குறித்து வைத்துள்ளனர்.

இன்னொரு பாதிரியாரான மார்ட்டின், மறவர் சீமையின் வடபகுதியில் கிபி. 1709-12இல் சமயப்பணியை தொடர்ந்தவர். அவரது கடிதங்களில் 18.12.1709 தேதி மாலையில் துவங்கிய புயலையும் வெள்ளத்தையும் பற்றி விரிவாக எழுதி இருப்பதுடன், சேதுபதி மன்னரது அனுமதியுடன் பொன்னளிக் கோட்டையில் பெரிய தேவாலயம் ஒன்றை ஆறுமாத கால அளவில் நிர்மாணித்தது. நரம்புச் சிலந்தி நோயினால் அவதிப்பட்டது. பின்னர் சேதுபதியினால் மறவர் சீமையிலிருந்து வெளியேற்றப்பட்டு அறந்தாங்கி கோட்டையில் சேது மன்னரது உறவினர் ஆதரவில் வாழ்ந்தது ஆகியவை பற்றி நீண்ட கடிதங்கள் வரைந்து இருக்கிறார்.

கி. பி. 1724-27இல் திபேத் நாட்டவரான ஹிப்போலிதோதெரிஸ்வ் என்ற பாதிரியார் இந்த மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து சமயப் பணிகளை பார்வையிட்டு வந்தார். இங்குள்ள பெருந்தொகையினரான மறக்குடி மக்களைப் பற்றி குறித்து வைத்துள்ளார். தங்களது மறவர் சமூகத்தைச் சேர்ந்தவரே. மறக்குடியினரது மன்னராக இருந்தால் கூட மறவர்கள் வணிகத்திலும் கைத்தொழிலும், ஏன் விவசாயத்திலும் கூட விருப்பமற்றவர்களாக இருந்து வருகின்றனரே என வியப்புத் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் கோட்டையைக் கைப்பற்றிய கும்பெனியாரின் தளபதி ஜோசப் ஸ்மித் கி. பி. 1772 ஜூன் மாதம் 8 தேதி சென்னைக்கு அனுப்பிய அறிக்கையில் ''இந்தக் கோட்டையில் மூவாயிரம் போர் வீரர்கள் இருந்தனர். திடீரென அவர்கள் மீது பீரங்கித்தாக்குதல் ஏற்படுத்தியதால் அவர்களுக்கு என்ன செய்வது என்று நிலைகுலைந்து தடுமாறினர். மிகுந்த வீரத்துடன் போராடி மடிந்தனர். அதனால் கோட்டையைக் கைப்பற்றுவது எளிதாகி விட்டது. அங்குள்ள அரண்மனையைப் போன்ற மாளிகையை

நான் முன்பு பார்த்ததில்லை கீழை நாட்டு ஆடம்பரப் பொருள்கள் அனைத்தும் அங்கு இருந்தன'' என்று எழுதியுள்ளார்.

இவரையடுத்து பிரஷ்ய நாட்டில் இருந்து வந்த ஸி.எப்.சுவாட்ஸ் என்ற பாதிரியார் மறவர் சீமைக்கு வந்தார். பல இடங்களுக்கும் சென்று வந்த இவர் கி. பி. 1784இல் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் ''அறியாமையில் உழன்று வருகிற இந்தப்பகுதி மக்களுக்கு கல்விக் கண்ணைத் திறந்து வைத்தாலொழிய அவர்களைத் திருத்தி முன்னேறச் செய்ய இயலாது'' என வரைந்துள்ளார்.

இங்கிலாந்திலிருந்து கீழை நாடுகளில் சுற்றுப் பயணமாக இராமநாதபுரம் அரண்மனைக்கு கி. பி. 1802-இல் வந்த ஜார்ஜ் வாலண்டிஞ பிரபு, ராணி மங்களேசுவரி நாச்சியாரைச் சந்தித்து விட்டு எழுதியுள்ள பயணக்குறிப்பின் ஒரு பகுதி. ''...ஒல்லியான உயரமான வடிவம், அண்மையில் அவர் கணவன் மரணமுற்று விட்டதால் இந்தியர்களது வழக்கப்படி அவர் எவ்வித அணிகலன்களும் அணிந்து இருக்கவில்லை. இடுப்பிற்கு மேலே கறையுள்ள சீனப்பட்டும் கீழே வெண்மையான மஸ்லீன் துணியும் அணிந்திருந்தார் பொன்னாலான தொங்கட்டான் புனைந்து மிக நீண்ட காதுகள் பளுவினால் தோள்பட்டைகளுக்கும் கீழே தொங்கின. பெரிய இதழ்கள். சற்று கருமையான நிறம், கவர்ச்சிகரமான பெண் அல்ல......''

○

# செய்தித் துளிகள்

1) இந்த மாவட்டத்தின் கிழக்கு அரணாக அமைந்துள்ள கடற்கரையின் நீளம், வடக்கே சுந்தரபாண்டியன் பட்டிணத்திலிருந்து தெற்கே வ்னிராஜபுரம் வரையில், இருநூற்று அறுபத்திஐந்து கி.மீ. தொலை ஆகும். இந்த கதைப்பகுதியில் கடலுக்கும் கரைக்கும் இடையே இயற்கையான கொத்தளங்களைப்போன்று 17 தீவுகள் உள்ளன.

2) கி. பி. 117. இல் பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேரபாண்டியனுக்கும் இடையேஎழுந்த உரிமைப் போரில் பராக்கிரமனுக்கு உதவாத இலங்கைப் படையின் தலைமை பாடமாக விளங்கியது நெட்டூர் ஆகும். இங்கே மூன்றுவது குலோத்துங்கனிடம் மதுரை மன்னன் வீரபாண்டியன் இறுதியான தோல்வியை அடைந்தான். இதனைக் குறிக்க பாண்டியன் முடித்தலைக் கொண்ட என்ற விருதை குலோத்துங்கன் சூடிக் கொண்டான். இந்தப் போருக்கு 600 ஆண்டுகளுக்குப் பின்னர் சிவகங்கை சின்ன மருதுவின் படைகளுக்கும், இராமநாதபுரம், சேதுபதி படைகளுக்கும் இடையே இதே ஊரில் தான் கடுமையான மோதல் ஏற்பட்டது.

3) இராமநாதபுரம் அரண்மனைக்குள் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் திருமேனி முழுவதும் தங்கத்தால் ஆனது. இதனை மதுரை மன்னர் திருமலை நாயக்கர் சேதுபதி அன்பளிப்பாக வழங்கினார். கி. பி. 1656 இல் மதுரையை முற்றுகை இட்ட மைசூர் படைகளை முறியடித்து, மைசூர்மாநிலத்தின் எல்லை வரை அவர்களை துரத்தியடித்த மறவர் படையின் தீரச் செயலுக்கு பரிசிலாக வழங்கிய பல பொருள்களில் இந்தப் பொன்மேனியும் ஒன்று. அதற்கென அமைக்கப்பட்ட தனி ஆலயத்தில் அன்று முதல் இன்று வரை நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது.

4) சோழபுரம் என்ற பெயரில் குமரி, தஞ்சை, செங்கை மாவட்டங்களில் சிற்றூர்கள் உள்ளன.

இந்த மாவட்டத்தில்உள்ள 2 ஊர்கள் இங்கு சோழர்களது ஆட்சி நிலவியதைச் சுட்டுகின்ற ஊர்களாக விளங்குகின்றன. ராஜபாளையம் அடுத்த சோழபுரம் விக்ரமபாண்டிய ஈஸ்வரம் என்ற ஆலயத்துடன் பிற்காலப் பாண்டியர்கள் காலம் வரை சிறப்புற்று இருந்த ஊராகும். சிவகங்கையை அடுத்த இன்னொரு சோழபுரம். தமிழக விடுதலைப் போர் தோல்வியுறும் நிலைக்கு வந்ததை நினைவுபடுத்தும் தலமாக உள்ளது. மருதுபாண்டியர்களை வேட்டையாடபோர்தொடுத்த தளபதி அக்னியூவின் தலைமைஇடமாகவும், கும்பெனியாரின் எடுபிடியான புதுக்கோட்டைத் தொண்டமான் உதவிய தளவாடங்களும், தானியங்களும் சேமித்து வைக்கப்பட்டிருந்த சேமிப்புக் கிடங்குமாகும். இங்கு ஜூலை 1801இல் சிவகங்கைமன்னனின் தன்னாட்சியை நீக்கி ஜமீன் முறையைப் பிரகடனப்படுத்தப்பட்டது. படமாத்தூர் கௌரி வல்லபத்தேவர் முதல் ஜமீன்தாராக நியமிக்கப்பட்டார்.

5) தேவாரம் பாடிய மூவரும் வருகை தந்து இறைவனை வாழ்த்திய இடம் காளையார்கோவில். 'சங்க இலக்கியங்களும் இதனை தலையிலங்கானம் எனச் சுட்டுகின்றன. சிவகங்கை மண்ணின் கடைசி அரசர் முத்துவடுகநாதத்தேவர், வெள்ளையத்தளபதி, ஜோசப் ஸ்மித்துடன் போராடி கி. பி. 1882இல் வீர மரணம் அடைந்த புனித மண்ணாகும்.

6) மதுரைக் கோபுரம் தெரியக்கட்டிய மாவீரர்கள் மருதுபாண்டியர் மடிந்து போனாலும் அவர்களது வீர நினைவை நினைவூட்டுவது போல நிமிர்ந்துநிற்கிற கோபுரத்தை உடையது காளையார்கோவில்.

7) பதினென் சித்தர்களில் ஒருவரான இடைக்காடரது ஊர் இடைக்காட்டூர். அழகிய பாண்டிய நல்லூர் என்பது கல்வெட்டுக்களில் காணப்படும் பழைய பெயர். கிறித்துவ மக்களின் வழிபாட்டிற்கென சிலுவை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தேவாலயம் இந்திய மேலைநாட்டுகட்டிடக் கலைக்கு ஓர் அழகிய எடுத்துக்காட்டாகும். இந்த ஆலயத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்று கதவு, சாள

ரங்களுக்கு மரம் பயன்படுத்தப்படாமல் அமைக்கப் பட்டிருப்பதாகும். மற்றொன்று இங்குள்ள மிகப் பெரிய வெண்கலமணியுமாகும்.

8) 'அரியக்குடிநகர் அத்தனைபேர் அத்தனையும், வரிசைக்குடியாக வாழ்க' என வாழ்த்தினார் ஆசுகவி முத்தப்பச் செட்டியார் இந்த ஊர் காரைக்குடி ரயில் நிலையத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சங்கீதக்கலாநிதியாக விளங்கிய அரியக்குடி ஸ்ரீராமானுஜம் அய்யங்கார் அவர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து மறைந்த ஊராகும்.

9) மருதுபாண்டியர்போரில்திருப்பத்தூர்கோட்டை ஆற்காட்டு நவாபின் கையிலும், மருதுபாண்டியர் கையிலுமாக மாறிவாறி வந்தது, ஆனால் இறுதித் தோல்வியை அடைந்த மருதுபாண்டியர் இந்தக் கோட்டையின் மேற்கு மூலையில் 24—10—1801 இல் தூக்கிலிடப்பட்டனர். அவர்களுடன் வெள்ளை மருதுவின் மக்கள் கருத்தத்தம்பி, மொல்லிக்குட்டி தம்பி சின்ன மருதுவின் மக்கள், சிவஞானம், சிவத் தத்தம்பி, அவரது மகன் முத்துசாமி, ஆகியோரும் ஒருசேர அங்குதான் தூக்கிலேற்றப்பட்டனர்.

10) மறவர் சீமையின் புரட்சி ஒடுக்கப்பட்ட பிறகு, பிற்பட்ட புரட்சிக்காரர்களில் 72 தலைவர்களை கும் பினியார் நாடு கடத்தி பிப்ரவரி 11, 1802 இல் பினாங்கு தீவிற்கு அனுப்பி வைத்தனர். அவர்களில் சிவகங்கை அரசர் வெங்கண் பெரிய உடையாத்தேவ ரும், வெள்ளை மருதுவின் மகன் சிறுவன் துரைசாமி யும் தளவாய் குமாரசாமி நாயக்கரும் அடங்குவர்.

11) ராஜராஜசோழ தேவனது மகன் ராஜேந்திர தேவன் ஆந்திரம், கலிங்கம், வங்கம், மலேயா ஆகிய நாடுகளை வென்று திரும்பிய பிறகு, பாண்டிய மண் டலத்தையும், சோழப்பேரரசாக மாற்றினார். அவரது விருதுப்பெயர்களான கங்கைகொண்டான், கடாரங் கொண்டான் என்ற பெயர்களில் இந்த மாவட்டத் தில் இரண்டு ஊர்கள் உள்ளன.

12) இராஜபாளையம் வட்டத்திலுள்ள சிற்றூர் இளந்திரை கொண்டான், இது ஈழம் திறைகொண்டான் என்ற விருதையுடைய சோழப்பேரரசன் ராஜ ராஜன் அல்லது அவனது மகன் ராஜேந்திரன் ஆகிய இருவரில் ஒருவர் நினைவாக எழுந்த ஊராகும்.

13) அய்யனார் சுவாமியின் பெயரால் நாட்டுப்புறங் களில் ஆங்காங்கு ஆலயமும், பரிவார அணிவகுப்பு களும் உண்டு. அவைகளில் ஒன்று பரமக்குடி வட்டம் போகலூர் கிராமத்தில் உள்ளது. அந்தஅய்யனார் பெரும்புகழ் கூத்தனார் அய்யனார் என வழங்கப்படு கிறார். அவரது புகழ் நினைவான இந்த ஊர் புகலூர்-போகலூர் என ஆகிவிட்டது.

14) இந்த நாளில் இந்த மாவட்டம் முழுவதையும் ஒரே நாளில் காரில் சுற்றி வரக்கூடிய சாலை வசதிகள் உள்ளன. ஆனால் 150 ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மாவட்டத்தில் வண்டிகள் செல்லக்கூடிய சாலைகள் மட்டும் எட்டு இருந்தன.

15) இந்தமாவட்டத்தின் பெரும்பரப்பில் அடங்கிய இராமநாதபுரம், சிவகங்கை, சமஸ்தான நிலப்பகுதி களில் ஜமீன் ஒழிப்புச் சட்டம் 1949 இல் அமுலுக்கு வந்த பிறகுதான் நில அளவை செய்யப்பட்டு குடி களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டன. ஆனால் இந்தப்பகுதிகளில் முதன்முறையாக 1814இல் இந்தப் பகுதிகள் நிலஅளவை முறையில் அளக்கப்பட்டன.

16) சிவகங்கைப் பிரதானிகளான மருதுபாண்டியர் கள் தங்களது குறுகிய கால ஆட்சிக்குள் பல திருப் பணிகளைச் செய்து முடித்தனர். அவற்றில் சிறப்பாக குறிப்பிடத்தக்கவை—காளையார் கோவில் கோபுரம், ஆனைமடு தெப்பக்குளம், குன்றக்குடி மருதாபுரி குளம், ஆலயம், சிவகங்கை சுப்பிரமணியசுவாமி கோயில், மானவீர மதுரைக் கோயில் கோபுரம், திருப்புத்தூர் திருத்தனியாண்ட நாயனார் கோயில் ஆயிரங்கால் மண்டபம் ஆகியவையாகும்.

மருதுபாண்டியர்களைத் தூக்கில் தொங்கவிடுவதற்கு முன்னர் அவர்களது கடைசி ஆசை எதுவும் இருந்

தால் வெளியிடுமாறு கும்பெனியாரின் தளபதி கேட்டார். அதற்கு அவர்கள் தாங்கள் முன்னால் எழுதிக் கொடுத்த தானங்களையும், சொல்லாய் வழங்கிய மானியங்களையும் தொடர்ந்து உரியவர்கள் அனுபவித்து வருமாறு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனராம்.

17) மதுரையில் கடந்த 84 ஆண்டுகளாக இயங்கி வருகின்ற தமிழ்ச் சங்கத்தை முதன்முதலில் இராமநாதபுரத்தில் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் 1896 இல் துவக்கி மகாவித்வான் ராகவ ஐயங்காரைக் கொண்டு தமிழ் இலக்கிய வகுப்புகள் நடைபெற ஏற்பாடு செய்தார்.

O

# இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள்

| | | |
|---|---|---|
| 1 | சடைக்கத் தேவன் உடையான் சேதுபதி | 1605-22 |
| 2 | கூத்தன் சேதுபதி | 1622-36 |
| 3 | தளவாய் சேதுபதி என்ற இரண்டாம் சடைக்கத் தேவன் | 1636-45 |
| 4 | ரகுநாத சேதுபதி என்ற திருமலை சேதுபதி | 1645-70 |
| 5 | சூர்ய தேவர் என்ற ராஜசூரிய ஆதன சேதுபதி | 1670 |
| 6 | கிழவன் சேதுபதி என்ற ரகுநாத | 1671-1710 |
| 7 | திருவிடையத் தேவர் என்ற விஜய ரகுநாத சேதுபதி | 1710-20 |

| | | |
|---|---|---|
| 8 | சுந்தரேஸ்வரர் என்ற தண்டத்தேவர் | 1720 |
| 9 | பவானி சங்கரன் | 1720-29 |
| 10 | கட்டையத்தேவர் என்ற குமார முத்து விஜய ரகுநாத சேதுபதி | 1729-35 |
| 11 | சிவகுமார முத்து விஜயரகுநாத சேதுபதி | 1735-47 |
| 12 | செல்லத் தேவர் என்ற விஜயரகுநாத | 1748-61 |
| 13 | முத்துராமலிங்க சேதுபதி | 1761-72,1780-95 |

## இராமநாதபுரம் ஜமீன்தார்கள்

| | | |
|---|---|---|
| 14 | ராணி மங்களேஸ்வரி நாச்சியார் | 1803-1812 |
| 15 | அண்ணாசாமி சேதுபதி | 1812-20 |
| 16 | இராமசாமி சேதுபதி | 1829-30 |
| 17 | ராணி மங்களேஸ்வரி நாச்சியார் | 1330-45 |
| 18 | ராணி பர்வதவர்த்தினி நாச்சியார் | 1846-62 |
| 19 | முத்துராமலிங்க சேதுபதி II | 1862-73 |
| 20 | ராஜா பாஸ்கர சேதுபதி | 1889-1903 |
| 21 | முத்துராமலிங்கராஜேஸ்வர சேதுபதி III | 1910-28 |
| 22 | ஷண்முகராஜேஸ்வர நாகநாத சேதுபதி | 1928-67 |
| 23 | இராமநாத சேதுபதி | 1967-80 |

## சிவகங்கைச் சீமையை ஆண்ட அரச பரம்பரையினர்

| | | |
|---|---|---|
| 1 | கௌரி வல்லப பசிவர்ணராஜா | 1730-1750 |
| 2 | கௌரி வல்லபமுத்து வடுகநாதராஜா I | 1750-1790 |
| 3 | ராணி வேலு நாச்சியார் என்ற ராணி வெள்ளச்சி | 1790-1801 |

## சிவகெங்கை ஜமீன்தார்கள்

| | | |
|---|---|---|
| 4 | கௌரி வல்லப உடையண ராஜா I | 1801-1829 |
| 5 | கௌரி வல்லப முத்து வடுகநாத ராஜா II | 1830-1831 |
| 6 | கௌரி வல்லப போத குருசாமி ராஜா I | 1831-1841 |
| 7 | கௌரி வல்லப உடையண ராஜா II | 1841-1848 |
| 8 | கௌரி வல்லப போத குருசாமி ராஜா II | 1848-1863 |
| 9 | ராணி காதம நாச்சியார் | 1864-1877 |
| 10 | கௌரி வல்லப முத்து வடுகநாத ராஜ III | 7 மாதங்கள் |
| 11 | கௌரி வல்லப துரை சிங்க ராஜா I | 1878-1883 |
| 12 | கௌரி வல்லப உடையன ராஜா III | 1883-1898 |
| 13 | கௌரி வல்லப துரை சிங்க ராஜா II | 1898-1941 |
| 14 | கௌரி வல்லப சண்முக ராஜா | 1941-1963 |
| 15 | கௌரி வல்லப சுப்பிரமணிய ராஜா | 1963- |
| 16 | கௌரி வல்லப கார்த்திகேய வெங்கடாஜலபதி | |
| 17 | அபராஜித நாச்சியார் | |

### மதீனம் தந்த புனிதர்

பன்னிரண்டு பதின்மூன்ருவது நூற்ருண்டுகளில் வாணிப நோக்கில் வந்த அரபிகளது குடியிருப்புகள், கோட்டைப் பட்டினத்திலிருந்து கீழ்க்கரை வரையி லான கிழக்கு கடற்கரையில் அஞ்சு வண்ணம் என அழைக்கப்பட்டன. இவர்களது அகவாழ்விற்கு உதவுவதற்காக அரபு நாட்டிலிருந்து சமயத்தொண் டர்களும் சான்ருேர்களும் வந்தனர். அவர்களில் சிறப்புடன் குறிப்பிடத்தக்கவர் ஸில்தான் ஷஹீது என வழங்கப்பட்ட சையது இப்ராஹீம் (வலி) அவர்கள்.

அரபு நாட்டின் தொன்மைமிக்க மதீனத்தில் கி.பி. 1136இல் பிறந்த இந்தப் பெருமகன் வள்ளல் இரசூல் முகம்மது நபிகளது பெண் வழியில் பதினேழாவது தலைமுறையை சார்ந்தவர். சிறந்த ஞானத்தையும் கல்வியையும் கற்று இளம் சித்தராக விளங்கினர். தமது மூதாதையரான முகம்மது நபி அவர்களைப் போன்று தமது வாழ்வை மக்களது பணியில்— மக்களது நலிவு தீர்க்கும் நல்ல தொண்டில் நாட்டம் கொண்டவராக வாழ்ந்து வந்தார். அந்த காலத்தில் அரபிகள் வியாபாரத் தொடர்பு கொண்டிருந்த நமது நாட்டின் சிந்து; குஜராத் மாநிலங்களுக்கு கி.பி. 1197இல் தொண்டர் கூட்டம் ஒன்றில் தலை வராக சென்று வந்தார். பின்னர் மதீனத்திலும் சுற்றுப்புறங்களிலும் சமயபணியில் ஈடுபட்டிருந்த அவர் தமது குடும்பத்தினர் தொண்டர்கள் அடங்கிய குழு ஒன்றுடன் கேரளக்கரை வழியாக பாண்டிய நாட்டுக்கு கி.பி. 1186ல் வந்து சேர்ந்தார்.

காயல்பட்டினத்திலும், மதுரையிலும் கிடைத்த வரவேற்பு அவருக்கு மறவர் சீமையில் இல்லை. மாருக அப்பொழுது பவித்திர மாணிக்கபட்டினத் தை தலைநகராகக் கொண்டு கிழக்கு இராமநாதபுரம் பகுதியை ஆட்சி செய்த விக்கிரம பாண்டியன் செய்யது இப்ராஹிம் குழுவிற்கு பெரும் எதிர்ப்பை ஏற்படுத்திஞன் தாங்கள் சார்ந்துள்ள புதிய சமய

மாகிய இஸ்லாம் ஏகதெய்வாக் கொள்கையை வலி யுறுத்தும் சாந்தி மார்க்கமென வெளிப்படுத்தியும் பாண்டியரது படையினருக்கும், இஸ்லாமிய தொண்டர்களுக்கும் இடையே போர்மூண்டது. பத்து நாட்கள் தொடர்ந்த இந்தப் போரில் விக்கிர பாண்டியன் உயிரிழந்தான். எஞ்சியுள்ள இளவல்கள் உயிர் தப்பி ஓடினர். பவித்திர மாணிக்கப்பட்டினத்தை கோநகராகக் கொண்ட பாண்டிய நாடு சுல்தான் சையது இப்ராஹிமின் இஸ்லாமிய ஆட்சிக்குள் வந்தது.

கீழை கடற்கரைப் பகுதியை உள்ளடக்கிய பாண்டிய நாட்டுப் பரப்பில் அவர்களது ஆட்சி அமைதியான முறையில் நடைபெற்று வந்தது. ஒரே இறைக் கொள்கையை உத்தம நெறியாகக் கொண்ட பாண்டிய நாட்டு மக்கள், பல நூற்றுக் கணக்கில் பச்சை இளம்பிறைக் கொடியின் கீழ் அணி திரண்டனர். அவர்களது புதிய சமயத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களும் புனிதர் அவர்களது தலைமைக்கும் ஆன்ம வழிகாட்டுதலுக்கும் வழிவிடுத்து வாழ்ந்தனர். அரபு நாட்டு தொண்டர்களில் நிலையாக பாண்டிய நாட்டில் தங்கியவர்கள் போக எஞ்சியவர்கள் அரபுதாயகம் திரும்பி விட்டனர்.

பாண்டிய நாட்டு அரசியல் மீண்டும் குழம்பியது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுல்தான் சையது இப்ராஹிமிடம் தோல்வியுற்று தப்பியோடிய விக்கிர பாண்டியனது சகோதரன் திருப்பாண்டியன் சோழர்களிடம் பெற்ற பெரும் படை வீரர்களுடன் பாண்டிய நாட்டுக்குள் புகுந்தான். பவித்திர மாணிக்க பட்டினம் மீண்டும் போர்க்களமாகியது. சுல்தான் சையது இப்ராஹீமும் அவரது குமாரர் அப்தாகிர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவரும் போர்களத்திற்கு வந்தனர். இருதரப்பினரும் கடுமையாக மோதினர். ஆனால் இறுதி வெற்றி திருப்பாண்டியனுக்குத்தான். உறவையும், சுற்றத்தையும் இழந்த சுல்தான் சையது இப்ராஹிம் பாண்டியனது வேல் பாய்ந்து வீர மரணம் அடைந்தனர். அப்போது சுல்தானது வாள் வீச்சினால்

படுகாயம் அடைந்த பாண்டியனும் நெடுந்தரையில் வீழ்ந்து மாய்ந்தான். ஏகதெய்வ இலக்கிறகாக வீரப் போரிட்டு மடிந்த இசுலாமிய வீரர்களது செங்குரு தியைக் குடித்த மண் இன்று நாள்தோறும் அங்கு வருகின்ற நூற்றுக்கணக்கானவர்களின் பிரார்த்தனை யினுல் புனிதம் பெற்று ஏறுபதியாகி விட்டது.

## இணையற்ற இமாம்

பால்வாய்ப் பசுந்தமிழ் பரப்பும் வையை ஆற்றின் வளமார்ந்த கரையில் அமைந்துள்ள சிற்றூர் இயமனீச்சுரம். எமனேஸ்வரம் என்பது இன்றைய வழக்கு. இந்த நல்லூரில் உதித்த மங்கைநல்லார் பாத்திமாவிற்கும் காயல்பட்டினம ஸீலைமான் என்ப வருக்கும் கி. பி. 1633-ல் பிறந்தவர்தான் பேராசான் (இமாம்) என பிற்காலத்தில் வழங்கப்பட்ட மேதை ஸதக்கத்துல்லா என்பவர்.

சித்தாந்தியாகவும் சான்ருேராகவும் விளங்கிய ஸீலைமான் அவர்களே, தமது அருமைக் குழந்தைக்கு சிறுகாலம் ஆசாஞக இருந்து திருமறையையும் இஸ்லாமிய நெறிமுறைகளையும் பயிற்றுவித்தார். உலக அறிவும் உத்தமர்களது தொடர்பும் மேலும் கிட்ட வேண்டும் என்ற பெருவிருப்பில் தனது மைந் தன் ஸதக்கை அதிரைக்கும் கீழக்கரைக்கும் அனுப்பி வைத்தார் அவர். அங்கே பெற்ற கல்வியும்; கேள்வி உணர்வும் அந்த இளைஞன் பிற்காலத்தில் அரபி, பார்சீ தமிழ் ஆகிய மொழிகளின் சங்கம சமுத்திர மாக இணையற்று விளங்குவதற்கு ஏற்ற வாய்ப்பாக அமைந்தன.

மணவினைகளுக்குப் பின்னர், இந்த மாவட்டத்திலேயே குறிப்பாக கீழக்கரையில் தங்கி தமது வாழ்க்கையை ஆன்மீக விளக்கத்திற்கென்றே அர்ப்பணித்து வந்தார் ஸதக். இஸ்லாமிய சமய உணர்வையும் ஏந்தல் நபிகள் நாயகத்தின் புகழையும் பரப்பும் புனிதப் பணியையே தங்கள் வாழ்க்கையின் இலக்காகக் கொண்டு வாழ்ந்தார். வள்ளல் சீதக்காதிக்கு ஆன்மீக குருவாக விளங்கியதுடன், அப்பொழுது இந்திய நாட்டின் பேரரசரான அவுரங்க ஜேப் மன்னர் போற்றி மதிக்கும் பேரருளாளனாகவும் திகழ்ந்தார் அவர்,

பெரும் புலவர் உமறு, தமது பார காவியமான சீறாப் புராணம், புனைவதற்குரிய நபிகள் நாயகம் பற்றிய அரபி இலக்கிய வரலாற்றுக் குறிப்புகள் அனைத்தையும் வழங்கி உதவியவரும் இந்த வள்ளல்தான. இதன் காரணமாக, புலவர் அவர்கள் இமாமை, ''இம்மையும் மறுமையும் பேரிலக்கிய சதக்கத் துல்லா'' என புகழ்ந்து பாடியுள்ளார்கள். இந்த மாவட்டம் தந்த இன்னொரு பெரும் புலவரான வண்ணக் களஞ்சியம் அவர்கள்,

''துதியொலி சதக்கத்துல்லா பதப்புகழ்,
நிதிமனப் பேழையினிறைத்துப் போற்றுவோம்''

என தமது இதயத்தில் இருத்தி இமாம் அவர்களைப் பாடியுள்ளார்.

எண்ணற்ற நூல்களின் படைப்பாளியாக, இறைஞான வள்ளலாக தேவவிளக்கம் செய்யும் வித்தகராக வாழ்க்கை முழுவதையும் மக்களுக்காக வழங்கிய இமாம் ஸதக் அவர்கள் கீழக்கரையில கி. பி. 1705-ல் காலமானார். அவரது பொன்னுடலை தாங்கியுள்ள மண்ணறை கீழக்கரை ஜீம் ஆ பள்ளிவாயின் முகப்பின் வடபகுதியில், மரியாதைக்குரிய தலமாக இன்னும் விளங்கி வருகிறது.

வள்ளுவத்தை உள்ளியதாக வளர்ந்துள்ள இஸ்லாமிய நெறி முறைகள் இல் இருந்து இயற்றுகின்ற இல்லறத்தை சிறந்த அறமாக வலியுறுத்துகின்றன. என்றாலும் இல்வாழ்க்கையை துறந்து இறைபக்தியில் ஈடுபடுகின்ற நேசர்களை இஸ்லாம் எதிர்க்கவில்லை. இவர்கள் ஸூபிகள். தர்வேஷ்கள், வலிகள் மஜ்தூபிகள், மஸ்தான்கள் என அரபு மொழியில் பகுத்து அழைக்கப்படுகின்றனர். அவர்களில் இறை அன்பில் முற்றிலும் ஈடுபட்டு தியானத்திலும், தூய மோனத்திலும் மூழ்கிய பிரிவினர் மஸ்தான்கள் ஆவர்.

இளமையில் துறவு என்பது இந்தக் காலத்தில் எண்ணிப் பார்க்க இயலாத ஒன்று. சேரநாட்டில் இளங்கோ, சோழநாட்டில் மணிமேகலை ஆகிய இரு பெரும் இளம்துறவிகள் இருந்ததை நமது இலக்கியங்கள் சொல்லுகின்றன. ஆனால் அண்மைக்காலத்தில் இத்தகைய இணையற்ற துறவி ஒருவர் பாண்டிய நாட்டிலும் (நமது மாவட்டத்திலும்) வாழ்ந்து மறைந்ததை வரலாறு கூறுகிறது. இற்றைக்கு இரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தொண்டி வட்டாரத்தில் உள்ள குணங்குடி என்னும் சிற்றூரில் அவர் தோன்றினார். மதுரைத் தமிழ்ச்சங்க புலவரும் பொன்னரிய மாலை என்ற நூலின் ஆசிரியருமான மின்னா நூர்தீன் புலவர் வழி வந்தவர், பெற்றோர் இட்ட பெயர் சுல்தான் அப்துல் காதர். பிற்காலத்தில் மக்கள் சூட்டியபெயர் குணங்குடி மஸ்தான்,

சித்தாந்த தத்துவங்களில் சிந்தையை பறிகொடுத்த சுல்தான் கீழக்கரை சென்று சிறந்த வேதாந்தியான தைக்கா சாகிபு அவர்களது திருக்கூட்டத்தில் சேர்ந்து கொண்டார். செம்மையான விளக்கங்களைக கற்று அமைதியுடன் அங்கிருந்து வெளியேறினார். கி.பி. 1840-ல் சென்னை சேர்ந்தார். இன்று பெருகியுள்ள சென்னை அன்று ஆரவாரம் அற்ற சிறுநகராக இருந்தது. அங்கு வடகோடியில் இருந்த தோட்டமொன்றில் சிலபகல் அடங்கியும், மௌனமாய் திரிந்தும் எழுதிக் காட்டியும் ஏகாந்த நிலையில் இருந்தார்.

கறுப்புக் கம்பளி உடையில் நீண்ட தாடியும், நெளிந்து, வளைந்து தொங்கும் தலை முடியும், பரந்த நெற்றியும் பார்ப்போர்களின் உள்ளங்களை ஊடுருவி உணர்கின்ற பிரகாசமான கண்களுடனுமாக காட்சி தந்த இந்த இஸ்லாமிய யோகியை மக்கள் மஸ்தான் என மரியாதை செய்தனர். அவரது மெய்ஞ்ஞான சித்தி வழங்கிய அற்புதங்கள் அந்த மக்களது ஆன்மீக தேவைகளை நிறைவு செய்தன.

ஆற்று ஒழுங்குப் போன்ற அழகுத் தமிழில் இஸ்லாமிய ஏகத்துவ நெறிகளை, எளிய சதகங்கள் ஆக, கண்ணிகளாக, கீர்த்தனைகளாக வழங்கிய பாங்கில் பரவசமடைந்தவர் பலர். திருத்தணிகை மகாவித்வான் விசாகப்பெருமாள் அய்யர், வேங்கடராயப்ப பிள்ளை கவிராயர், கோவலம் சபாபதிமுதலியார், சிவயோகி அய்யாசாமி முதலியார் போன்றோர் குணங்குடியாரது கோதிலாக் இறைகொள்கையில் பற்றும் படிப்பும் உடையவர்களாக அவரது அருமைச் சீடர்களாக விளங்கினர்.

○

## தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கன்

நல்ல பண்புகளுக்கும் நாகரீக வாழ்விற்கும் நிலைக்களனாக உள்ள நகரத்தாரிடையே தோன்றியவர் ராயப்ப செட்டியார் மகன் சொக்கலிங்கன். பழமையும் புதுமையும் திறமையும் துடிப்பும் மிக்க பால்யத்தை பாலக்காட்டிலும் பர்மாவிலும் கழித்துவிட்டு தமது பத்தொன்பதாவது வயதில் சொந்த ஊரான காரைக்குடிக்கு திரும்பி வந்தார்.

இளைஞன் சொக்கலிங்கத்தின் இதயத்தில் புரட்சி எண்ணங்கள் பூத்துக் குலுங்கின. முதலில் தம்முடைய தன வைசிய சமூகத்தை அவற்றை நடைமுறைப்படுத்தும் களமாகப் பயன்படுத்தினார். பழமையின் பெயரால், சமயத்தின் பெயரால் பின்னிப் படர்ந்துள்ள சிறுமைகளைக்களைந்து கட்ட முயன்றார். தமது அருமைத் தோழர் சொ. முருகப்பாவுடன் இணைந்து காரைக்குடியில் தனவைசிய ஊழியர் சங்கம் ஒன்றைத் துவக்கினார். துடிப்பும் துணிவும் மிக்க தொண்டர் படை இணைந்தது. அதனது ஆக்கமாக இன்றும் காரைக்குடியில் செயல்பட்டு வரும். இந்து மத அபிமான சங்கம் கி. பி. 1917ல் தோன்றியது. இந்தச் சங்கத்தை மகாகவி பாரதியார் கி. பி. 1919இல் குலம்உயர, நகர் உயர, நாடு உயர உழைக்கின்றார் கோடி நன்மைநிலவுற'' என வாழ்த்தியருளினார். இந்த சங்கத்தின் சிம்மநாதமாக தனவைசியன் ஊழியன் என்ற இரு திங்கள் இதழ்கள் வெளிவந்தன அவைகளின் முழக்கம் செட்டி நாட்டில் இருபது ஆண்டுகள் இடைவிடாது எதிரொலித்தன.

இந்தக்காலகட்டத்தில் காந்தியடிகள் தலைமையிலான தேசிய இயக்கமும் அதனுடைய செயல்பாடுகளும் சொக்கலிங்கத்தைக் கவர்ந்து ஆட்கொண்டன. அதன்பரிசாக 1932ல்ஓராண்டுகால சிறைத்தண்டனை கிட்டியது. அரசியல் காரணத்திற்காக சிறை சென்ற செட்டி நாட்டு முதல் குடிமகன் தொடர்ந்து தேசிய இயக்கங்களில் தீவிரமாகப் பங்கு கொண்டார்.

காந்தியடிகள் செட்டிநாட்டில் சுற்றுப்பயணம் வந்த பொழுது செட்டிநாட்டுராஜா அண்ணமலைச்செட்டியார் போன்ற ஆங்கில அடிவருடிகள் எல்லாவித எதிர்ப்புகளையும் அடிகளாருக்கு ஏற்படுத்தியும் அஞ்சாது அவரைத் தமது அமராவதி புதூர் இல்லத்தில் தங்க வைத்து அகமகிழ்ந்தார். பின்னர் இராமநாதபுரம் மாவட்டம் காங்கிரஸ் அமைப்புத் தலைவர், காரைக்குடி நகராட்சி தலைவர் பதவிகளில் இருந்து பலவகையிலும் தொண்டாற்றினார். காரைக்குடியில் நிர்மாணிக்கப்பட்ட காந்திமாளிகை என்றநகராட்சி

அலுவலகம் அவரது பொதுப்பணியின் சின்னமாகச் சிறந்து விளங்குகிறது.

தேவாரம், திருவாசகம், திருக்குறள், கம்பன் காவியம் சேக்கிழார் காப்பியம் ஆகியவற்றை தான் சென்ற திருத்தலங்களில் எல்லாம் தேன்மழையாக சொற் பெருக்காற்றி தெய்வத் தமிழை பாமர மக்களும் பருகி மகிழச் செய்தார். இந்தப் பணியில் உள் நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் சென்று வந்தார்.

இந்தப் பணியின் ஏனைய பிரிவுகளாக பல சிற்றிலக் கியங்களை அச்சில் கொணர்ந்து வெளியிட்டதுடன் காந்தி வெண்பா, காந்தி பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்களையும் அவரே படைத்து தமிழுக்கு அணி சேர்த்தார். பல நூல்களுக்கு விளக்க உரைகள் எழுதினார். அழகப்பர் கலைக்கல்லூரியில் தமிழா ராய்ச்சித் துறையின் தலைவராக அமர்ந்து கம்பனும் வில்லியும், கம்பனும் சிவனும் போன்ற ஆய்வுத்திரட் டுக்களையும் தமிழ் உலகிற்கு அளித்தார்.

கி. பி. 1958ல் காரைக்குடி இந்து மதாபிமான சங்கம் இவரது மணிவிழாவையொட்டி தமிழ்க்கடல் என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கி பெருமைப்படுத் தியது.

அறுபத்து மூவரது அருள்நெறிக்கோலத்தையும் ஆழ் வார்களது பக்திப் பிரவாகத்தையும், வள்ளலாரது தொண்டையும் நினைவூட்டும் திருவுருவாகப் பொலிந்து விளங்கிய தமிழ்க் கடல் தமது எழுபத்தி எட்டாவது வயதில் 1978ல் நித்திய அமைதிபெற்றார். நகரத்தாராகப் பிறந்து நாட்டுப் பற்றுள்ள காந்திய வாதியாக வாழ்ந்து, நல்ல தமிழ் மேதையாக மறைந்த இந்தத் தமிழ் மகனை நாடும் ஏடும் என்றும் மறவாது.

# கோடி கொடுத்த கொடையாளி

நகரத்தார் பெரும்பான்மையினராக வாழ்ந்து வரும் ஊர்கள் பலவற்றிலும் காரைக்குடி தனிச்சிறப்புப் பெற்று விளங்குவது ஏன்? ஒரு கவிஞர் இவ்வாறு பாடினார். ''வற்றாத அருள் மனத்தால் வாரிவாரி வழங்குகின்ற அழகப்பன் வண்மைப் பேற்றால், கற்கோயில் பல ஓங்க, கலைகள் ஓங்க, கல்வி நகர் என ஓங்கும் காரை''. கல்விநகராக காரைக்குடி மாறியது இந்த மாற்றத்தை ஏற்படுத்தியவர் வள்ளல் அழகப்பச் செட்டியார்.

அழகப்பர் காரைக்குடியை அடுத்த கோட்டையூரில் 6-4-1909 இல் பிறந்தார். பள்ளிக் கல்வியை காரைக்குடியிலும் பட்டக் கல்வியை சென்னையிலும் முடித்து விட்டு இங்கிலாந்து சென்றார். அங்கு பார்-அட்-லா பட்டம் பெற்று தாயகம் திரும்பினார். கொச்சியில் நூற்பாலை ஒன்றை நிறுவியதுடன் பல தொழில் நிறுவனங்களையும் துவக்கினார். அவை நல்ல பெரும் ஊதியத்தை நல்கின ஆனால் அவரது இதயம் கல்வித் துறையில் நிலைகொண்டிருந்தது. தாம் ஈட்டிய செல்வமனைத்தையும் இந்த முயற்சியில் ஈடுபடுத்தினார். 1947 முதல் 1956 வரை ஆண்டு தவறாமல் காரைக்குடி அழகப்பா நகரில் புதிது புதிதாக கல்வி நிறுவனங்களை உருவாக்கி வந்தார்.

இதற்கிடையில் இந்திய அரசு நாட்டின் பல பகுதிகளில் எட்டு ஆராய்ச்சிக் கழகங்களை நிர்மாணிக்கத் திட்டமிட்டது. அவைகளில் ஒன்றான மின்வேதியில் ஆய்வுக் கழகத்தை, தமது கல்விக் கூடங்கள் உள்ள காரைக்குடியில் அமைக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தினார். இதற்கென இருபது லட்சம் ரூபாயையும் இருநூறு ஏக்கர் காணியையும் அழகப்பரது அன்பளிப்பாகப் பெற்றுக் கொண்ட பிரதமர் ஜவஹர்லால் நேரு 1948 இல் அந்த ஆய்வுக் கழக அமைப்பிற்கு காரைக்குடியில் கால்கோளிட்டார். 1953 முதல் இந்தக் கழகம் இயங்கி வருகின்றது.

இவர் பல பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் எழுவதற்கு எண்ணற்ற செல்வத்தை வாரி வழங்குகினார். தாம் அமைந்த காரைக்குடி கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் இணைத்து பல்கலைக் கழக மொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். கோடி கொடுத்த இந்தக் கொடையாளியின் முயற்சி நிறைவேறு முன்னர் காலன் அவரைக் கவர்ந்து சென்று விட்டான். பாரியின் மரபுவந்த வள்ளல் அழகப்பரின் நினைவு கல்வி உலகு உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

○

## எல்லோரும் இன்புற்று இருக்க

இறைவழியினை-பரத்துவ, ஏகத்துவ கருத்துக்களை எளிய தமிழில் பாமரர்களும் புரிந்து பயனுறும் வண்ணம் பரப்பியவர்கள் பதினெண் சித்தர்கள். பக்தி இலக்கியத்தை பாமர இலக்கியமாக வடித்துக் கொடுத்தவர்கள் அந்தச் சித்தர்களே. அவர்களின் வழிநின்று வாழ்ந்தவர்தான் பதினேழாம் நூற்றுண்டைச் சேர்ந்த தாயுமான அடிகள்.

தஞ்சைத் தரணி தந்த இந்த வள்ளல், இளமையிலே ஞான மார்க்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டார். விரைவில் இல்லறத்தைத் துறந்து துறவுநிலை மேற்கொண்டார். அந்த நிலையிலே அறிவினுக்கு அறிவாகி ஆனந்தமயமான ஆதியைக் காண முனைந்தார். யாதினும் வல்லவொரு சித்தாகி என்றைக்கும் உள்ளது எது? அங்கும் இங்கும் எங்கும் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது எது? என்பன போன்ற வினுக்களுக்கு விடையும் விண்டு கண்டார். பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற நிறைகின்ற சித்தமிசை குடி

கொண்ட சின்மயானந்த செல்வமாகக் கண்டு மகிழ்ந்தார்.

அதனை வழங்கிய யோகத்தில் - சித்தம், செயல் வாக்கு எல்லாம் சுத்த மவுனமாகக் கொண்ட யோக நிட்டையிலே நிலைத்து நின்றார். அதிலே பொய் யுடலை நீக்கி புகழுடம்பும் பெற்றுள்ளார். அவரது மோன நிலைக்கும் நீடிய நிட்டைக்கும் இடையில் அன்றாட வாழ்க்கையில் அவர் கொடுத்துள்ள வெண் பாக்களும், விருத்தங்களும், வண்ணங்களும், கண்ணி களும், வேதாந்த சித்தாந்த விளக்கங்களாக வடிவு கொண்டுள்ளன. அவை அவரது வடமொழி, தென் மொழிப் புலமையைப் புலப்படுத்துவது மட்டும் அல்லாமல், துறவி வாழ்க்கையில் தோய்ந்து இருந்த தூய உள்ளத்தையும், அதில் ததும்பி வழிந்த இறைக் காதலையும், ஏக்கத்தையும். எதிரொலிப்பனவாக உள்ளன.

அத்துடன், அவரது கருத்துக்கள் சில இந்த நாட்டின் மாறுபட்ட அரசியல் சூழ்நிலையில், மக்கட் சமு தாயம், தனது தொன்மையான கட்டுக்கோப்பு நெகி ழாமல் சமரச மனோபாவத்துடன் வாழவேண்டிய சகிப்பு நிலையையும் வலியுறுத்துகின்றன.

அவர் வாழ்ந்த காலத்தில், தமிழகத்தில் இந்து சமய சார்புடைய வடுக ஆட்சி நிலவியது. தமிழ்ச் சமு தாயம், இந்து சமயத்து பல பிரிவுகளுடன், ஏனைய இஸ்லாமிய, கிறித்துவ சமயத்தினரையும் உள்ளடக் கியதாகவும் இருந்தது. ஆதால் சமயச் சழக்கர்களின் கெடுபிடிகளும் ஆங்காங்கு இருந்தன.

எண்ணறிய பிறவிகளில் மானிடப் பிறவிதான் யாதி லும் அரிதெனக் கண்ட அடிகளார், மக்கள் சாத்திர சமயப் பிரிவுகளால் பேதலித்து அலைவதைக் கண்டு மனம் நைந்தார். "தர்க்கமிட்டு பாழாகி சமயக் குதர்க்கம் விட்டு, நிற்குமவர் கண்ட வழி நேர் பெறுவதெந்நாளோ" என வருந்தினார்.

சைவ சித்தாந்தியாக, சீல மிகுந்த ஞானியாக பெரும் புலவராக விளங்கிய அடிகளாரைப் பற்றிய முழுமை

யான விவரங்கள் இதுவரை தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை என்றாலும் அவரது சீடர் அருளையர் மூலம் கிடைத்துள்ள அவரது கவிதைக் கருவூலம் காலமெல்லாம் ஞானப் பாதையைக் காட்டும நல்லதொரு சுடர் விளக்காக இருந்து வரும் என்பதில் ஐயம் இல்லை. வாழ்க தாயுமானவ அடிகள் நாமம்.

○

## சிவந்த மண்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறித்துவ சமயப் பணிக்கென சான்றோர் சிலர் வேற்று நாடு நாடுகளில் இருந்து இங்கு வந்தனர். அவர்களில் இந்த மாவட்டத்தில் வரலாற்றில் ஒன்றியவராக உயர்ந்து நிற்பவர் ஜான்ஹெக்தர் தி-பிரித்தோ என்பவர். இவர் போர்ச்சுகல் நாட்டு லிஸ்பன் நகரில் அரச பரம்பரையில் பிறந்த பெருமகன் ஆவார். சமயக்கல்வியிலும் சித்தாந்தத்திலும் சிறந்து விளங்கிய இவர், தமது இருபத்தி ஆறுவது ஆண்டில் சமயப்பணிக்கென இந்தியா (கோவா) வந்தார்.

ஆற்காடு, தஞ்சை மதுரைப் பகுதிகளில் பணியாற்றிய பொழுது நமது தமிழ் மொழியை நன்கு கற்றுத் தெளிந்தார். தமது பெயரையும் அருளானந்தர் என மாற்றிக் கொண்டார். கி. பி. 1681இல் மறவர் சீமைக்கு வந்தார். இரண்டுமாத காலத்தில் பனங்குடி பகுதியில் அவரது பேச்சிலும் தொண்டிலும் மனநிறைவு கொண்ட மறக்குடியினர் 2000பேர் கிறித்துவ மதத்தை ஏற்றனர். இதனால் சினங் கொண்ட சேதுபதி மன்னரது பிரதானி குமாருப்

பிள்ளை அவரையும் அவரது இரண்டு சீடர்களையும் கைது செய்தனர். மங்களத்திலும், காளையார் கோவிலிலும், பாகனியிலும் சிறையில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தனர். பின்னர் இராமநாதபுரத்திற்கு அழைத்துச்சென்று மன்னர் அவையில் நிறுத்தி தண்டனை வழங்குமாறு அரசருக்குப் பரிந்துரைத்தனர்.

துறவியின் சமயக் கருத்துக்களைப் பொறுமையாக கேட்டறிந்தமன்னர் கிழவன் சேதுபதி, அந்தக் கருத்துக்கள் மறவர் சீமைக்கு ஒவ்வாதன என்று உணர்ந்ததுடன், அவரை நமது சீமையினின்றும் உடனே வெளியேறுமாறும்உத்தரவிட்டார். உடல் நலிவுற்று இருந்த துறவி அருளானந்தர் தமது தாயகமான போர்ச்சுகல் நாட்டிற்கு திரும்பினார். ஆனால் அவரது உள்ளம் மறவர் சீமையில் நிலைத்து இருந்தது. மீண்டும் தமது தொண்டை அங்கு தொடரவும் அந்தப் பணிக்குப் பகரமாக தமது அருமை உயிரையும் வழங்குவதற்கும் துணிவு கொண்டது அந்த துறவியின் உள்ளம்.

ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் மறவர் சீமைக்கு திரும்பி வந்தார். மக்கள் மனம் உவந்து மகத்தான வரவேற்பு வழங்கினர். தேவகோட்டைக்கு அண்மையில் உள்ள முன்னி என்ற சிற்றூரில் தங்கி தமது சேவையில் ஈடுபட்டிருந்தார். சேதுபதி மன்னரது உறவினரும் சிறுவல்லிபாளையக்காரருமான திரையத் தேவரும் அவரது உறவினர்களும் கிறித்துவமதத்தை ஏற்றது அருளானந்தருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் இதே நிகழ்ச்சியே அவரது வாழ்க்கையை முடிவிற்கு கொண்டு வரவும் தூண்டுகோலாக அமைந்து விட்டது. திரையத் தேவரது மத மாற்றம் சேதுபதி மன்னருக்கு பெரிய கேள்விக் குறியாகப் பட்டது.

அந்தக் காலக் கட்டத்தில் இந்த நாட்டின் குடிமகன் கிறித்துவ சமயத்தைத் தழுவினால், அவன் கிறித்துவனாக மாறுவது மட்டுமல்லாமல், கிறித்து நாடான போர்ச்சுகல் மன்னரது குடிமகனாகவும் ஆகிவிடும்

நிலே இருந்தது. ஏற்கனவே இராமநாதபுரம் அரசு கட்டிலில் அமரும் உரிமைக்கு உரியவரான திரையத் தேவருக்கு இப்பொழுது போர்த்துகல்நாட்டுராஜுவ உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டால்? ... அடுத்து பலதாரப் பழக்கத்திற்கு முரணான கிறித்துவ மத ஆச்சாரத்தினால், திரையத்தேவர் தமது மனைவிகளில் ஒருவரான காதல் நாச்சியாரை (கிழவன் சேதுபதியின் மைத்துனி) விவாகரத்து செய்தால்? ... இந்த வினாக்களுக்கு விடைகாண்பது மன்னருக்கு எளிதாகப் படவில்லை. இவற்றிற்கெல்லாம் மேலாக இந்துமத தலைவர்கள் அருளானந்தரின் ''மந்திர சக்தி''யினால் இந்து மதத்திற்கு ஆபத்து எனக் கூக்குரலிட்டனர். சங்கிலியால் பிணைக்கப்பட்ட அருளானந்தரும் அவரது இரண்டு சீடர்களும் அரச அவையில் விசாரணைக்கு நிறுத்தப்பட்டனர். அரச ஆணையை மீறி மறவர் சீமையில் கிறித்துவ மத மாற்றத்தில் ஈடுபட்டதற்காக அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதற்கான ஏற்பாடுகளும் துவங்கின. தமது குழுவினருடன் அங்கு இருந்த திரையத்தேவர், மதம் மாறிய தம்மை முதலில் சுட்டுத் தள்ளுமாறு சொல்லிக் கொண்டு அருளானந்தரை மறைத்து நின்றார். எதிர்பாராத இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க சிறந்த ராஜதந்திரியான சேது மன்னர் தண்டனையை நிறுத்தி வைப்பதாகச் சொல்லி அவையில் இருந்து சென்றுவிட்டார். அடுத்தநாளே அருளானந்தர் பாதுகாப்புடன் ஓரியூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டார். அருளானந்தரை நாட்டை விட்டு வெளியேற்றலாம் என நம்பப்பட்டது. ஆனால் ஓரியூர் கோட்டை ஆளுநருக்கு சேதுபதி மன்னர் அனுப்பிய ஓலையின்படி அருளானந்தர் ஓரியூர் கோட்டைக்கு வெளியே தமது இறுதிப் பிரார்த்தனையை முடித்தவுடன் கொலை செய்யப்பட்டார். 4-2-1693ல் இறையுணர்வும், இனிய அன்பும் நிறைந்த அவரது புனித உடலில் இருந்து பொங்கி வழிந்த குருதி, வறண்ட அந்த மண்ணை மறைத்துச் சிவப்பாக்கியது. சேதுநாட்டில் புதிய சமய வழியின் ஒளியை உள்ளடக்கிய அந்தச் சிவந்தமண்ணை, அந்த வழியைப் பற்றி நிற்கும் பல்லாயிரம மக்கள் ஆண்டு

தோறும் அருளானந்தரின் நினைவு நாளன்று அங்கு சென்று தரிசித்து திரும்புகின்றனர்.

O

## சங்கம் கண்ட சான்றோர்

செந்தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் அளப்பரிய திருப்பணிகளைச் செய்தவர்கள் இராமநாதபுரம் சேதுமன்னர்கள் இவர்களது வழியினர் உக்கிர பாண்டியன் என்ற வள்ளல் பாண்டித்துரைத்தேவர் இராமநாதபுரம் சமஸ்தான நிர்வாகியும் பெரும் புலவருமான சிவஞானத்தேவரது மூன்றாவது மகனாக கி. பி. 1867 இல் இராமநாதபுரத்தில் பிறந்தார். கருவிலே திருவுடைய இந்தப் பெருமகன், இளமையிலே தமிழிலும் ஆங்கிலத்திலும் தெளிந்த ஞானம் பெற்றுத் திகழ்ந்தார்.

புலவர் பெருமக்கள் இவரை சேக்கிழாராகக் கண்டு மகிழ்ந்தனர். அத்துடன் வள்ளலை 'சுவாமிகள்' என மிகுந்த மரியாதையுடன் வணங்கிப் போற்றினர். அவரது மாளிகையான சோமசுந்தர விலாசம் முத்தமிழ்க் கலையரங்காக விளங்கியது. ஜமீன் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வள்ளல் தமது ஜமீன் வருவாய் அனைத்தையுமே தமிழுக்கும், ஏனைய தருமங்களுக்கும் அள்ளி அள்ளி வழங்கினார்.

நாள் தவறாமல் இராமநாதபுரம் நோக்கி வந்த நலிந்தவர்களின் திறமை நாடு முழுவதும் பயன்படும் வகையில் நல்லதொரு திட்டங்காணச் சிந்தித்தார். அந்நிய ஆதிக்கத்தினால் அழிந்து கொண்டிருந்த தமிழகத்தின் கலைகளைப் பேணவும், தமிழையும், ஏட்டு நிலையில் இருந்த தமிழ் நூல்களையும் காத்து

வளர்க்கவும் அன்று தமிழகத்தில் எந்தவிதமான அமைப்பும் இல்லை.

இந்த அவலநிலை நீங்க, தமிழும் தமிழ் அறிஞர்களும் தங்களது சமயத் தகுதியினை பெறவும் பல்லாற்றாலும் முயன்றார். அவரது முழு முயற்சி தமிழாய்ந்த மதுரையில் 1901-இல் நான்காம் தமிழ்ச் சங்கமாக மலர்ந்தது. ஆங்கு குழுமியிருந்த தமிழகத்து அறிஞர் பெருமக்கள் அகமகிழ்ந்து ஆர்ப்பரித்தனர். இந்த இணையற்ற பெரு முயற்சிக்கு அவருடைய ஒன்று விட்ட சகோதரரும் இராமநாதபுரம் மன்னருமான பாஸ்கர சேதுபதி பேராதரவு நல்கினார். அவரை அரசரும் தேவர் அவர்களும் சேகரித்து வைத்திருந்த ஏட்டுச் செல்வங்களும் இன்ன பிற ஏடுகளும் அங்கே "பாண்டியன்சுவடிச்சாலை"யாக அமைக்கப்பட்டது, அத்துடன் தமிழைத் திண்ணைப் பள்ளி நிலையிலிருந்து மேனாட்டு முறையில் பட்டம் வழங்கத்தக்க வகையில் தமிழ்ப் பேரறிஞரைக் கொண்டு "செந்தமிழ்க் கல்லூரியும்" சங்க வளாகத்திலே துவக்கி வைக்கப் பட்டது.

அடுத்து, தமிழ்ப் புலவர்களின் ஆராய்ச்சிக் கருவூலமாக "செந்தமிழ்" என்ற திங்கள் இதழும் சங்கத்தினின்றும் வெளியிடத்தக்க ஏற்பாடுகளைச் செய்தார். இந்தச் சங்கமும், ஏனைய பணிகளும் காலமெல்லாம் சிறப்புடன் நடைபெற தமது மதுரை மாளிகையையும் முதலீட்டுப் பொருளையும் தானமாக வழங்கி மகிழ்ந்தார். இந்த தயாளர் இவை தவிர சிதலை வாயினின்றும் சிதைவுறாமல் எஞ்சியுள்ள இலக்கண இலக்கிய நூல்களைச் சங்கவெளியீடாக குறைந்த விலையில் வெளிவரச் செய்தார். இவை தவிர்த்து சில இலக்கியங்களை டாக்டர் உ. வே. சுவாமிநாதையரது வெளியீடாக வெளி வருவதற்கும் பொருளுதவி செய்து வந்தார்.

இவ்வாறு பல துறைகளிலும் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும், தமது குன்றனைய செல்வத்தையும் குன்றாத உழைப்பையும் கொடுத்து மகிழ்ந்த இந்தப் பெருமகன் கி. பி. 1911 இல் இயற்கை எய்தினார்.

O